
www.padippakam.com

# புதிய ஜனநாயகம்

அக்டோபர் 2007
ரூ. 5.00



## வருணாசிரம கிரிமினல் ராமன்

## ஹவாலா கிரிமினல் ராம் விலாஸ் வேதாந்தி

**சூத்திரனின் தலையை எடுத்தான் ராமன்!
எடுக்கச் சொல்கிறான் வேதாந்தி!!**

படிப்பகம்

www.padippakam.com

**"அமெரிக்க - இந்திய அணுசக்தி ஒப்பந்தத்தைத் தூக்கியெறிவோம்!
அமெரிக்க - இந்திய இராணுவ ஒப்பந்தத்தைக் கிழித்தெறிவோம்!!"**

# —தமிழகமெங்கும் புரட்சிகர அமைப்புகளின் பிரச்சாரம் - ஆர்ப்பாட்டம்

அமெரிக்க-இந்திய அணுசக்தி ஒப்பந்தம் என்ற பெயரில் அமெரிக்காவின் அடியாளாகவும் அடிமையாகவும் இந்தியாவை மாற்றியிருக்கிறது, மன்மோகன் சிங் அரசு. நமது அணு மின்நிலையங்களையும் தோரியத்தைப் பயன்படுத்தி சுயசார்பாக நம் விஞ்ஞானிகள் உருவாக்கி வரும் அணு தொழில்நுட்பத்தையும் முடக்கவும் திருடவும் அமெரிக்காவுக்கு இந்த ஒப்பந்தத்தின் மூலம் வழிசெய்து கொடுத்திருக்கிறது.

இது வெறும் அணுசக்தி ஒப்பந்தமல்ல; ஜூலை 2005-இல் இந்திய அரசு அமெரிக்காவுடன் இரகசியமாகச் செய்து கொண்ட இராணுவ ஒப்பந்தத்தின் ஓர் அங்கம். அதன்படி, அமெரிக்காவின் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளில் இந்திய இராணுவத்தை ஒரு காலாட்படையாக அனுப்பி வைக்க மன்மோகன் அரசு ஒப்புக் கொண்டிருக்கிறது. இதனடிப்படையில்தான் ஈரானைத் தாக்குவதற்காக அனுப்பப்பட்ட நிமிட்ஸ் கப்பல் சென்னை துறைமுகத்தினுள் அனுமதிக்கப்பட்டது.

அமைச்சரவைக்கே தெரியாமல் திருட்டுத்தனமாக இந்த ஒப்பந்தத்தில் கையெழுத்துப் போட்டுவிட்டு, இனி நாடாளுமன்றத்தின் பெரும்பான்மை நிராகரித்தாலும் இதனை ரத்து செய்ய முடியாது என்று திமிராகப் பேசுகிறார், பிரதமர். இப்படித்தான் மறுகாலனியாக்கம் என்ற படுகுழிக்குள் இந்தியாவைத் தள்ளிய "காட்" ஒப்பந்தமும் 1994-இல் இதேபோல திருட்டுத்தனமாக நம்மீது திணிக்கப்பட்டது. அந்த மறுகாலனியாதிக்க அடிமைத்தனத்தின் உச்சகட்டம்தான் இந்த அடிமை ஒப்பந்தங்கள்.

இந்த உண்மைகளை விளக்கியும், மறுகாலனியாதிக்கத்துக்கு எதிராக உழைக்கும் மக்கள் அணிதிரண்டு போராட அறைகூவியும் ம.க.இ.க., வி.வி.மு., பு.மா.இ.மு., பு.ஜ.தொ.மு. ஆகிய புரட்சிகர அமைப்புகள் கடந்த ஆகஸ்ட் மாதத்தில் தமிழகமெங்கும் விரிவான பிரச்சார இயக்கத்தை மேற்கொண்டன. இவ்வமைப்புகளின் சார்பில் வெளியிடப்பட்ட பல்லாயிரக்கணக்கிலான துண்டுப் பிரசுரங்களும், "அடிமை-அடியாள்-அணுசக்தி!" எனும் சிறுவெளியீடும் உழைக்கும் மக்களிடம் சிறப்பானதொரு வரவேற்பைப் பெற்று, இப்பிரச்சார இயக்கத்துக்கு வலுவூட்டின. இதன் தொடர்ச்சியாக, கடந்த ஆகஸ்டு 29-ஆம் தேதியன்று தமிழகமெங்கும் இப்புரட்சிகர அமைப்புகள் செயல்படும் பகுதிகளில் இத்துரோக ஒப்பந்தத்திற்கு எதிராக எழுச்சிமிகு ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்பட்டன.

செங்கொடிகள் உயர்ந்தோங்க, விண்ணதிரும் முழக்கங்களுடன் சென்னை, திருச்சி, தஞ்சை, மதுரை, கோவை, ஒசூர், திருப்பத்தூர், சிவகங்கை, தருமபுரி, சேலம், கடலூர் மற்றும் புதுவை மாநிலத்தின் காரைக்கால் ஆகிய நகரங்களில் நடந்த இந்த ஆர்ப்பாட்டங்களில் ஏகாதிபத்திய எதிர்ப்பும் ஜனநாயக உணர்வும் கொண்ட பேராசிரியர்கள், வழக்குரைஞர்கள், தொழில்நுட்பவாதிகள், எழுத்தாளர்கள் உள்ளிட்டு இவ்வமைப்புகளின் முன்னணியாளர்கள் கண்டன உரையாற்றினர். இந்த ஆர்ப்பாட்டங்களைத் தொடர்ந்து அரங்கக் கூட்டங்கள், தெருமுனைக் கூட்டங்கள் மூலமாக கிராமப்புறங்களிலும் நகரங்களிலும் இவ்வமைப்புகள் இப்பிரச்சார இயக்கத்தைத் தொடர்ந்து நடத்தி வருகின்றன.

- பு.ஜ. செய்தியாளர்கள்.



கடலூரில்...


திருச்சியில்...



கோவையில்...



சேலத்தில்...


படிப்பகம்

www.padippakam.com


# புதிய ஜனநாயகம்

*மார்க்சிய-லெனினிய அரசியல் ஏடு*

தொகுதி: 22

**இதழ் 12**

அக். 2007

உள்நாடு
தனிஇதழ்: ரூ.5.00
ஆண்டுசந்தா: ரூ.60.00

வெளிநாடுகள்
(வான் அஞ்சலில்)
ஆண்டு சந்தா: US$ 10

படைப்புகள் அனுப்பவும் மற்றும் அனைத்துத் தொடர்புக்கும்



புதிய ஜனநாயகம்,
110, இரண்டாம் தளம்,
63, என்.எஸ்.கே. சாலை,
(அ.பெ.எண்: 2355)
கோடம்பாக்கம்,
சென்னை - 600 024.
தொலைபேசி: 94446 32561


# இருதலைக் கொள்ளி-இடையில் மக்கள்!

நெற்றிப் பொட்டில் துப்பாக்கியாக அழுத்திக் கொண்டிருக்கிறது இந்திய அமெரிக்க அணுசக்தி ஒப்பந்தம். துப்பாக்கியின் குதிரை அழுத்தப்படுவதற்கான தருணம் குறித்த திகிலை காங்கிரசு-'மார்க்சிஸ்டு' கூட்டுக் கமிட்டி பராமரித்துக் கொண்டிருக்கிறது. ''இடி.. இடி..'' என்ற கூச்சலுடன் 15 ஆண்டுகளுக்கு முன் அரசியல் அரங்கை ஆக்கிரமித்த பார்ப்பன மதவெறியின் திரிசூலம், இன்று ''இடிக்காதே.. இடிக்காதே'' என்ற கூச்சலுடன் மக்களின் இதயத்தைக் குறிபார்க்கிறது. இன்று திடீரெனக் கிளம்பியிருக்கும் இராமர் சேது விவகாரம், அரசியல் களத்தில் நிற்கும் காங்கிரசு, 'மார்க்சிஸ்டு'கள், பா.ஜனதா ஆகிய ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு விதத்தில் கைகொடுக்கிறது.

'மார்க்சிஸ்டு'களின் கோரிக்கைக்கு இணங்க அணுசக்தி ஒப்பந்தம் குறித்து விவாதிப்பதற்கான கமிட்டியை காங்கிரஸ் அரசு உருவாக்கியது. ''இந்த ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டால் இந்தியா எதிர்காலத்தில் அணுவெடி சோதனை நடத்த முடியாது. தனது வெளியுறவுக் கொள்கைகளைச் சுதந்திரமாகத் தீர்மானிக்க முடியாமல், அமெரிக்காவின் எடுபிடியாக மாறவேண்டியிருக்கும். அமெரிக்கா நினைத்தால் யுரேனியம் சப்ளையை நிறுத்த முடியும்'' என்றெல்லாம் அமெரிக்காவின் ஹைட் சட்டம் கூறுவதால், ''இந்த 123 ஒப்பந்தம் ஒரு அடிமை ஒப்பந்தமே'' என்பது 'மார்க்சிஸ்டு'களின் நிலை. இந்தியா அமெரிக்காவுடன் போட்டிருக்கும் 123 ஒப்பந்தத்தை ஹைட் சட்டம் கட்டுப்படுத்தாது என்று நிறுவுவதற்கு வழக்குரைஞரும் அமைச்சருமான கபில் சிபல் முன்வைத்த வாதங்கள் அனைத்தும் வெறும் சொல் ஜாலங்களே என்பதை பிரபல பாதுகாப்புத் துறை ஆய்வாளர் பிரம்ம செலானி உள்ளிட்ட பலர் அம்பலமாக்கிவிட்டனர். ஹைட் சட்டத்துக்கு உட்பட்டதுதான் இந்த ஒப்பந்தம் என்பதை பல அமெரிக்க அதிகாரிகள் பலமுறை பிரகடனம் செய்ததுடன், ஹைட் சட்டத்தைத் திருத்துவது என்ற பேச்சுக்கே இடமில்லை என்பதையும் தெளிவுபடுத்திவிட்டனர். பிறகு இந்தக் கமிட்டி எதை ஆய்ந்து கத்தை கட்டப் போகிறது? எதுவும் இல்லை.

''சும்மா உட்கார்ந்து டீ குடிக்கலாம். அதற்கு மேல் இந்தக் கமிட்டியால் ஒரு பயனும் இல்லை'' என்கிறார் வலது கம்யூனிஸ்டு எம்.பி குருதாஸ் தாஸ் குப்தா. 'மார்க்சிஸ்டு' கட்சியின் யெச்சூரியோ, ''கமிட்டியின் சிபாரிசுகளுக்கு அரசு கட்டுப்படும் என்று தான் நம்புவதாகக்'' கூறுகிறார் (தி இந்து, செப்-25)

''கமிட்டியின் முடிவுகள் அரசைக் கட்டுப்படுத்தாது'' என்று பகிரங்கமாகவே அறிவிக்கிறார் அமைச்சர் கபில் சிபல். பிறகு எதற்காக இந்தக் கமிட்டி?

தன்னுடைய அரசை 'மார்க்சிஸ்டு'கள் கவிழ்த்துவிடாமல் தடுக்கத்தான் காங்கிரசு இந்தக் கமிட்டியை அமைத்திருப்பது போலத் தோன்றினாலும், கள்ளத்தனமாகக் காய் நகர்த்தி ஒப்பந்தத்தை நிறைவேற்றிக் கொள்ள இக்கமிட்டியை ஒரு மூடுதிரையாகப் பயன்படுத்துகிறது காங்கிரசு. தங்கள் கையால் காங்கிரசு அரசைக் கவிழ்க்கும் காட்சி மனத்திரையில் தோன்றி அச்சுறுத்துவதைத் தடுக்க, இந்த மூடுதிரையால் தம் கண்களைக் கட்டிக் கொள்கிறார்கள் 'மார்க்சிஸ்டு'கள். ''5 ஆண்டுகள் முடிவதற்குள் உங்கள் அரசைக் கவிழ்க்கும் சூழ்நிலைக்கு எங்களைத் தயவு செய்து தள்ளிவிடாதீர்கள்'' என்று வெளிப்படையாகத் தங்கள் அச்சத்தை வெளியிடவும் 'மார்க்சிஸ்டு'களுக்குக் கூச்சமாக இருக்கிறது. ''அடுத்த அமெரிக்க அதிபர் தேர்ந்தெடுக்கப்படும் வரை இந்த ஒப்பந்தத்தைத் தள்ளி வைக்கலாமே; ஒப்பந்தம் குறித்து பரிசீலிக்க அமெரிக்காவின் ஜனநாயகக் கட்சிக்கும் நாம் ஒரு வாய்ப்பு வழங்க வேண்டும்'' என்கிறார் யெச்சூரி (தி இந்து, செப்-25). இப்படியாக, அமெரிக்க ஏகாதிபத்தியத்துக்குள்ளேயே ஒரு முன்விட்டையைக் கண்டுபிடிக்கும் முயற்சியில் 'மார்க்சிஸ்டு' கட்சி முன்னேறுகிறது.

காங்கிரசு அரசைக் காப்பாற்றுவதற்காக 'மார்க்சிஸ்டு'களுக்குத் தேவைப்பட்ட இந்தக் கமிட்டி, இப்போது தம் சொந்தக் கட்சியைக் காப்பாற்றிக் கொள்வதற்கே அவசியமானதாகிவிட்டது. அணுசக்தி ஒப்பந்தத்துக்கு எதிராக 'மார்க்சிஸ்டு'களின் பொதுச்செயலர் காரத் ஒருபுறம் சண்டமாருதம் செய்து கொண்டிருக்க, ''அணுசக்தியை மார்க்சிஸ்டுகள் எதிர்க்கவில்லை'' என்று ஜோதிபாசுவும், ''அணுசக்தி தவிர்க்க முடியாதது என்று தான் கருதுவதாக'' புத்ததேவும் பேசியிருக்கிறார்கள். இந்நிலையில் தம் சொந்தக் கட்சிக்குள் எழுந்துள்ள கருத்து வேறுபாட்டைக் காப்பாற்றிக் கொள்வதற்கே 'மார்க்சிஸ்டு'களுக்குத் தனியே ஒரு கமிட்டி தேவைப்படுகிறது.

''அணுசக்தி ஒப்பந்தத்தை நாடாளுமன்றத்தில் நிறைவேற்ற மறுப்பது, நாடாளுமன்ற ஜனநாயகத்துக்கு மட்டுமின்றி, அரசியல் சட்டத்துக்கே விரோதமானது'' என்று

படிப்பகம்

www.padippakam.com



''நாம் அணு மின்சாரத்தைத் தவிர்க்க முடியாது'' என மேற்கு வங்க முதல்வர் புத்ததேவ் பட்டாச்சார்யா, இந்தியத் தரகு முதலாளிகள் (சி.ஐ.ஐ) சங்கத்தின் தேசிய கவுன்சில் மாநாட்டில் (படம்) அறிவித்தார்.

முன்னாள் உச்சநீதி மன்ற, உயர்நீதி மன்ற நீதிபதிகளான வி.ஆர். கிருஷ்ண அய்யர், ப.ப.சாவந்த், சுரேஷ் ஆகியோர் கட்டுரை எழுதியிருக்கின்றனர். அணுசக்தி ஒப்பந்தத்தை முறியடிப்பதற்கும், 'மார்க்சிஸ்டு'களின் புனிதத் திருக்கோயிலான நாடாளுமன்றத்தின் மகிமையைக் காப்பாற்றுவதற்கும் இத்தகையதொரு பொன்னான வாய்ப்பு இருந்த போதும் அவர்களால் அதனைப் பயன்படுத்திக் கொள்ள இயலவில்லை. நாடாளுமன்ற ஜனநாயகத்தைக் காப்பாற்றுவதைக் காட்டிலும் காங்கிரசு அரசைக் காப்பாற்றுவது தலையாய கடமையாக அவர்கள் முன்நிற்கிறது.

'காங்கிரசு-மார்க்சிஸ்டு அணுசக்தி கமிட்டி என்ன செய்கிறது' என்ற கேள்வியிலிருந்தும், இந்த விவகாரத்தில் மார்க்சிஸ்டு கட்சிக்குள் நிலவும் கருத்து வேறுபாடுகள் சந்தி சிரிப்பதிலிருந்தும் இராமன் சேது விவகாரம் அவர்களைத் தப்ப வைத்திருக்கிறது. வழக்கு விவகாரத்தில் பாரதிய ஜனதாவின் தாக்குதலில் நிலைகுலைந்து குப்புற விழுந்த காங்கிரசு, 'விழுந்தாலும் புதையல் மீதுதான் விழுந்திருக்கிறோம்' என்பதைப் பிற்பாடுதான் புரிந்து கொண்டது. எனினும், புதையலைக் காத்துக் கொண்டிருக்கிறது பாரதிய ஜனதா எனும் பூதம். அணுசக்தி ஒப்பந்தம் குறித்த விவாதத்தை பொது அரங்கிலிருந்து அகற்றுவதற்கும், தனது திரைமறைவு வேலைகளைத் தொடருவதற்கும் காங்கிரசு அரசுக்கு இராமபிரான் பயன்பட்டபோதிலும், பாரதிய ஜனதா எனும் பூதம் இப்பிரச்சினையின் மூலம் மீண்டும் உயிர்த்தெழுந்திருப்பது காங்கிரசை அச்சுறுத்துகிறது. இந்த அபாயத்தைச் சமாளிக்க காங்கிரசிடம் வேறு ஆயுதங்கள் இல்லை. கமிட்டி போட்டு அணுசக்தி ஒப்பந்தப் பிரச்சினையை 6 மாதம் தள்ளிவைத்து அப்படியே கண்காணாமல் செய்துவிடலாமென 'மார்க்சிஸ்டு'கள் முயற்சிப்பதைப் போலவே, இராமன் பாலம் விவகாரத்துக்கும் நீதிமன்றத்தில் 3 மாதம் வாய்தா கேட்டிருக்கிறது, காங்கிரசு அரசு.

பாரதிய ஜனதாவைப் பொருத்தவரை இது லாட்டரிப் பரிசுதான். 1992-இல் அயோத்தியில் அடக்கம் செய்யப்பட்ட இராமன், 2007-இல் இராமேசுவரத்தில் திடீரென்று உயிர்த்தெழுந்திருக்கிறான். உட்கட்சித் தகராறுகளாலும் கழுத்தறுப்புகளாலும் நொறுங்கிப் போயிருந்த கட்சியை அள்ளிக் கட்டுவதற்கு இராமன் பயன்பட்டிருக்கிறான். அமெரிக்க-இந்திய அணுசக்தி ஒப்பந்தத்துக்கும், இராணுவ ஒப்பந்தத்துக்கும் அச்சாரம் போட்டுவிட்டு, இப்போது எதிர்ப்பது போல நடிப்பதற்கும் கூட சிரமப்பட்டுக் கொண்டிருந்த பாரதிய ஜனதாவை அந்தச் சிரமத்திலிருந்து விடுவித்திருக்கிறது இந்த இராமன் சேது பிரச்சினை. ஏகாதிபத்திய அடிமைத்தனத்துக்குத் துணை நின்றபடியே இந்து தேசியம் பேசுவதற்கான வாய்ப்பை இது பாரதிய ஜனதாவுக்கு வழங்கியிருக்கிறது.

மறுகாலனியாக்கமும் இந்துமதவெறிப் பாசிசமும் தொடர்பற்ற வேறு வேறான பிரச்சினைகள் அல்ல என்பதற்கும், பாரதிய ஜனதாவும் காங்கிரசும் எதிரெதிரான கொள்கைகள் கொண்ட வெவ்வேறு தன்மையிலான கட்சிகள் அல்ல என்பதற்கும் இவை நிரூபணங்கள். 90-களில் பாபர் மசூதி இடிப்புக்கு மறைமுக ஆதரவு கொடுத்து, இந்து மத வெறிப் பாசிசத்தைத் தூண்டிவிட்டதன் மூலம் ''காட்'' ஒப்பந்தம் மற்றும் மறுகாலனியாக்க நடவடிக்கைகளிலிருந்து மக்களின் கவனத்தைத் திருப்பியது காங்கிரசு அரசு. இந்து தேசியவெறியைத் தூண்டிய பாரதிய ஜனதா, ''காட்'' ஒப்பந்தத்துக்கு மறைமுகமாக ஆதரவு தெரிவிப்பதன் மூலம் காங்கிரசுடன் இணைந்து கொண்டது.

இன்றோ, அணுசக்தி ஒப்பந்தமும், இராமன் சேது பிரச்சினையும், காங்கிரசு, பாரதிய ஜனதா கட்சிகளும் வேறு வேறானவை என்பதைப் போல எதிர்நிலைப் படுத்தப்படுகின்றன. 'கண்மூடித்தனமாக அமெரிக்காவை எதிர்ப்பது எங்கள் கொள்கையில்லை' என்று கூறி அணுசக்தி ஒப்பந்தத்தை வழிமொழிகிறது பாரதிய ஜனதா. 'மத உணர்வைப் புண்படுத்துவதை அனுமதிக்க முடியாது' என்று கூறி பார்ப்பன பாசிசத்துக்குத் துணை நிற்கிறது காங்கிரசு. இவையிரண்டையும் எதிர்க்கின்ற கட்சிகள் எதுவும் நாடாளுமன்ற அரசியல் அரங்கில் இல்லை.

அமெரிக்க அடிமைத்தனமும் பார்ப்பன பாசிசமும் நாட்டின்மீது இருளாகக் கவிந்து கொண்டிருக்கின்றன. இரு பெரும் அபாயங்களுக்கு இடையே சிக்கிக் கொண்டிருந்தும், அவற்றைப் புரிந்து கொள்ள இயலாத தன்னுணர்வற்ற நிலையில் வைக்கப்பட்டிருக்கும் மக்கள், உலகக் கோப்பை வெற்றியின் போதையில் ஆழ்த்தப்பட்டிருக்கிறார்கள்.

> நாடாளுமன்ற ஜனநாயகத்தைக் காப்பாற்றுவதைக் காட்டிலும் காங்கிரசு அரசைக் காப்பாற்றுவதுதான் தலையாய கடமையாக 'மார்க்சிஸ்டு'களின் முன்நிற்கிறது.


படிப்பகம்

www.padippakam.com

# வர்ணாசிரம கிரிமினல் இராமன்!
# ஹவாலா கிரிமினல் ராம்விலாஸ் வேதாந்தி!

"இராமனை இழிவுபடுத்தி இந்துக்களைப் புண்படுத்திய கருணாநிதியின் தலையை வெட்ட வேண்டும், நாக்கை அறுக்க வேண்டும். அப்படிச் செய்பவருக்கு எடைக்கு எடை தங்கம் தரப்படும்" என்று பார்ப்பனத் தினவெடுத்துப் பேசிய வேதாந்தி என்ற சாமியார் யார்? "அவர் யாரென்றே எங்களுக்குத் தெரியாது. யாரோ ஒருவர் பேசியதற்காக எங்களைத் தாக்குவது என்ன நியாயம்?" என்று இராம.கோபாலன், இல.கணேசன், ராஜா என்று ஆர்.எஸ்.எஸ் கும்பல் முழுவதும் ஒரே குரலில் புளுகுகிறது. வேதாந்தி பேசியதை விட இந்தப் பித்தலாட்டம்தான் மிகப்பெரிய அயோக்கியத்தனம். இதற்காக இன்னொரு முறை இந்தக் கும்பல் முழுவதையும் நிற்க வைத்து உரிக்கவேண்டும்.

ராம் விலாஸ் வேதாந்தி, 1984 முதல் விசுவ இந்து பரிசத்தின் தலைமைக்குழுவான மார்க்க தர்ஷக் மண்டலின் (இந்துக்களுக்கு நன்னெறி காட்டும் குழு) உறுப்பினர்; 1990 முதல் ராம ஜன்மபூமி டிரஸ்ட் உறுப்பினர்; 1996, 98-இல் உ.பி. மாநிலம் பிரதாப்கர் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட பா.ஜ.க.-வின் நாடாளுமன்ற உறுப்பினர். மத்திய அரசின் ரயில்வே குழு, நகர்ப்புற வளர்ச்சிக் குழு, சுற்றுச்சூழல் ஆலோசனைக் குழு ஆகியவற்றின் உறுப்பினர். இவை அனைத்துக்கும் மேலாக, முஸ்லிம்களுக்கு எதிராக நஞ்சைக் கக்கும் உமாபாரதி, ரிதம்பரா வகையைச் சேர்ந்த நட்சத்திரப் பேச்சாளர். சமீபத்திய உ.பி சட்டமன்றத் தேர்தலில் பா.ஜ.க.விற்காகப் பிரச்சாரம் செய்த முன்னணிப் பேச்சாளர். அனைத்துக்கும் மேலாக பாபர் மசூதி இடிப்பையும் மதக்கலவரத்தையும் தூண்டிய வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட அத்வானி, ஜோஷி உள்ளிட்ட 11 பேரில் ஒருவர். இந்த வேதாந்தியைத்தான் "யாரோ, எவரோ எங்களுக்குத் தெரியவே தெரியாது" என்கிறார்கள், இந்தப் பார்ப்பன யோக்கிய சிகாமணிகள்.

'இராமன் ஒரு கற்பனைப் பாத்திரம்' என்று கருணாநிதி சொன்னவுடனே குமுறி எழுந்த இந்த சாமியார், 'உண்மையிலேயே ஆழ்ந்த மத நம்பிக்கை கொண்ட பக்தனாக இருக்கலாமோ, அதன் காரணமாகக் கோபத்தில் வரம்பு மீறிப் பேசியிருக்கக் கூடுமோ' என்று வாசகர்கள் யாரேனும் நினைத்துக் கொண்டிருந்தால், அது மடமை. இந்த வேதாந்தி ஒரு தொழில்முறைக் கிரிமினல். "பிள்ளைவரம் தருகிறேன், புதையல் எடுத்துத் தருகிறேன்" என்று கூறி பாமர மக்களையும் பெண்களையும் நாசமாக்கி, பிறகு மாட்டிக் கொண்டு தரும அடி வாங்கி உள்ளே போகும் 'கீழ்சாதி' லோக்கல் சாமியார் அல்ல இந்த வேதாந்தி. மக்களின் மத நம்பிக்கையை மதவெறியாக மாற்றி, அந்த மதவெறியை டாலராக மாற்றிக் குவித்து வைத்திருக்கும் ஒரு சர்வதேசக் கிரிமினல். கையும் மெய்யுமாகப் பிடிபட்ட பிறகும், இன்னமும் கம்பி எண்ணாமல் வெளியில் இருந்து ஆசி வழங்கிக் கொண்டிருக்கும் அரசியல் செல்வாக்குள்ள கிரிமினல்.

**ஹவாலா கிரிமினல் பேர்வழி ராம்விலாஸ் வேதாந்தி.**



மதத்தை வைத்து 'பிசினெஸ்' நடத்தும் சாமியார்களை அம்பலப்படுத்துவதற்காக "கோப்ரா போஸ்ட்" என்ற இணையதளம் புலனாய்வு நடவடிக்கை ஒன்றில் (sting operation) இறங்கியது. அதில் சிக்கிய மூன்று சிகாமணிகளில் வேதாந்தியும் ஒருவன். முதலாளிகள் போல நடித்து வேதாந்தியை சந்தித்த இந்தச் செய்தியாளர்கள், கறுப்புப் பணத்தை வெள்ளையாக்க வேதாந்தியிடம் பேரம் பேசுகிறார்கள். ரகசியக் கேமராவில் பதிவு செய்யப்பட்ட இந்த பேரத்தை கடந்த மே 4-ஆம் தேதியன்று ஒளிபரப்பியது, "ஐ.பி.என்-7" தொலைக்காட்சி. ஒளிபரப்பான அந்த உரையாடலைக் கீழே தருகிறோம்.

*வேதாந்தி:* எனக்கு எவ்வளவு கமிஷன் கிடைக்கும்?

*நிருபர்கள்:* நீங்கள் விரும்பியபடி....

*வேதாந்தி:* இல்லை, எனக்கு எவ்வளவு தருவீர்கள் என்பதைச் சொல்ல வேண்டும்; ஒருவேளை 5 கோடி ரூபாய் கருப்புப் பணத்தை நீங்கள் மாற்றுவதாக இருந்தால் எனக்கு எவ்வளவு கிடைக்கும்?

*நிருபர்கள்:* உங்களுக்கு 1.5 கோடி....

*வேதாந்தி:* இல்லை; 3 கோடியை வாங்கிக் கொண்டு எனக்கு 2 கோடியைக் கொடுங்கள்!

*நிருபர்கள்:* எங்களுக்கும் இலாபம் வேண்டாமா?

*வேதாந்தி:* சரி,சரி; எனக்கும் கமிஷன் வேண்டாமா? இப்படிக் கருப்புப் பணத்தை மாற்றுவதற்கு எனது ட்ரஸ்ட் பணத்தை பயன்படுத்துவதற்கு நான் யாரிடமும் அனுமதி பெறவேண்டியதில்லை. இருப்பினும் எனது ஆடிட்டரிடம் கலந்தாலோசிக்கிறேன். அயோத்தி வாருங்கள், எல்லாவற்றையும் முடித்து விடலாம்.

*நிருபர்கள்:* ராமஜன்மபூமி டிரஸ்ட்டுக்கு நீங்கள்தானே தலைவர்?


படிப்பகம்

www.padippakam.com

*வேதாந்தி:* ஆமாம், ஆனால் உங்கள் பணத்தை அதில் போட்டால் மீள எடுப்பது சிரமம். ஏனெனில் அது ஒரு சர்வதேச ட்ரஸ்ட். சி.பி.ஐ.யும், ஐ.பி.யும் (உளவுத் துறைகள்) அதன் மீது எப்போதும் ஒரு கண் வைத்திருக் கிறார்கள்.

*நிருபர்கள்:* ஆனால் உங்கள் ட்ரஸ்ட் டுக்கு எதுவும் பிரச்சினைகள் இருப்ப தாகத் தெரியவில்லையே?

*வேதாந்தி:* இல்லை, இந்த வேலைக் காகவே 'மாத்ரி சேவா ட்ரஸ்ட்' என்று ஒன்றைத் தனியாக உருவாக்கி வைத்தி ருக்கிறேன்.

(ஆதாரம்: watch the video: http://www.lbnlive. com/videos/39845/money-launderer-leads-ram-temple-trust.html)

இந்த உரையாடலை ஒளிபரப்பிய ஐ.பி.என். தொலைக்காட்சி, அதன் பிறகு இதே வேதாந்தியிடம் நேர் காணல் எடுக்கச் சென்றது. உடனே "தேசவிரோத முசுலீம் தே..... மகன்கள் தான் எனக்கெதிராக இந்தச் சதியை நடத்தியிருக்கிறார்கள்", என்று வெறி கொண்டு கத்தினான், இந்தக் களவாணி. அதிர்ச்சியடைந்த அந்தச் செய்தியாளர், "நீங்கள் இவ்வளவு தரம் தாழ்ந்து பேசுவதால் மேற் கொண்டு நேர்காணல் நடத்த முடி யாது" என்று கூறி பேட்டியை நிறுத்திக் கொண்டார். இந்த விவகாரமும் அம்ப லத்துக்கு வந்து சந்தி சிரித்தது. உ.பி சட் டமன்றத் தேர்தல் நடக்க இருந்த தரு ணத்தில் இந்த விவகாரம் சந்தி சிரித்த போதிலும், இந்தக் காவி உடைக் கிரி மினலைச் சங்கப் பரிவாரங்கள் கைவி டவில்லை என்பதுதான் மிகவும் முக்கி யமானது.

இது குறித்து கருத்து தெரிவித்த முன்னாள் மத்திய அமைச்சரும் தற்போது ராமர் சேது விவகாரத்தில் கருணாநிதிக்கு எதிராகக் கொட்டி முழக்கி வருபவருமான ரவிசங்கர் பிரசாத், "உங்கள் தொலைக்காட்சியில் அடிபடும் பெயர்களுக்குச் சொந்தக்கா ரர்கள் அனைவரும் மிகவும் மதிப்பிற் குரியவர்கள். எனவே இந்த இரகசிய காமரா ஒளிபரப்பின் நம்பகத்தன்மை குறித்து எனக்கு ஐயமாக இருக்கிறது" என்றார். விசுவ இந்து பரிஷத்தின் துணைத் தலைவர் கிரிராஜ் கிஷோரோ, "இந்த இரகசிய கேமரா நிகழ்ச்சியின் நோக்கம் என்ன? இதில் ஏன் இந் துக்கள் மட்டும் குறி வைக்கப்படுகி றார்கள்?" என்று மடக்கினார். "கரு ணாநிதி இராமனை மட்டும் விமரிசிக் கிறாரே, மற்ற மதத்தினரை விமரிசிக் காதது ஏன்?" என்று இப்போது கேட்கி றார்கள் அல்லவா, அதே கேள்விதான் கிரிராஜ் கிஷோரின் கேள்வியும்.

"கேமரா ஒளிபரப்பு மேல் சந்தே கமாக இருக்கிறது; எங்களை மட்டும் ஏன் குறி வைக்கிறாய்? இந்துக்களின் மனம் புண்பட்டுவிட்டது" என்று கலர் கலராகக் கூச்சலிட்டது ஆர்.எஸ்.எஸ் பரிவாரம். "எங்கள் வேதாந்தி சொக்கத் தங்கம். அவர் முற்றும் துறந்த முனிவர். வேண்டுமானால் அவருடைய டிரஸ்டு களையும் எங்களுடைய டிரஸ்டுக ளையும் வருமான வரித்துறை ஆய்வு செய்து பார்க்கட்டும்" என்று ஒரு யோக் கியன் பேசவேண்டிய பேச்சை மட்டும் "அவாள்" பேசவே இல்லை.

"இராமன் எந்தப் பொறியியல் கல் லூரியில் படித்தான்?" என்ற கேள் வியைப் போலவே, "உங்கள் டிரஸ்டில் இத்தனை பணம் எப்படி வந்தது?" என்ற கேள்வியும் கூட இவர்களுடைய மத உணர்வைப் புண்படுத்துகிறது போலும்! ராம ஜன்ம பூமி, ராமர் பாலம் மட்டுமல்ல; ராம ஜன்ம பூமி டிரஸ்டில் உள்ள கறுப்புப் பணமும் கூட இந்துக் களின் மத நம்பிக்கை சார்ந்த விசயம் போலும்! இந்த நம்பிக்கையைக் கேள் விக்குள்ளாக்கினால், தலையை வெட் டுவார்கள், நாக்கை அறுப்பார்கள், அதை செய்து முடிப்பதற்கு எடைக்கு எடை தங்கமும் கொடுப்பார்கள் இந்தத் 'துறவி'கள்!

வருமான வரித் துறையின் முன்னாள் ஆணையர் விஸ்வபந்து குப்தா இந்த உத்தம புத்திரர்களைப் பற்றிப் பின்வருமாறு குறிப்பிடுகிறார். "இந்த வேதாந்தி விவகாரத்தில் உடனே கிரிமினல் குற்ற வழக்குப் பதிவு செய்து நடவடிக்கை எடுக்கலாம். ராம ஜன்ம பூமி நிவாஸ், விசுவ இந்து பரிஷத் இரண்டும் மதரீதியான மாஃபியாக் குழுக்களாகும். அவர்கள் ஒரே முகவரியிலிருந்து சுமார் பத்து போலியான ட்ரஸ்ட்டுகளை நடத்துகி றார்கள். இவர்களுக்கு ஐம்பது வெளி நாடுகளிலிருந்து பணம் வருகிறது. இதற்கு வரி விலக்கும் பெறுகிறார்கள். ஆனால், எதற்கும் முறையான கணக்கு வழக்கு கிடையாது. இவர்களுக்கு ஆண்டொன்றுக்கு 10,000 முதல் 15,000 கோடி ரூபாய் வருகிறது என்று நாங்கள் கணக்கிட்டிருக்கிறோம்... மத வெறியைப் பரப்புவதற்கு இந்தப் பணத்தைப் பயன்படுத்துகிறார்கள்"

வேதாந்தி ஒரு விதிவிலக்கல்ல. வேதத்துக்கு அந்தமில்லை என்று "அவாள்" சொல்வதைப்போல, சங்க பரிவாரம் முழுவதும் முடிவில்லாமல் நிறைந்திருக்கிறார்கள் வேதாந்திகள். இந்தக் காவி உடை மாஃபியா கும்பல் தன்னை ஒரு கட்சி என்று சொல்லிக் கொள்கிறது. கடத்தல், கஞ்சா, ஆயுதம் என்ற சரக்குகளைப் போல, இந்த மாஃபியா கும்பல் கையாளும் விற் பனைச் சரக்கு - மதம்.

இந்த பேட்டியை வைத்தே வேதாந் தியைக் கைது செய்யலாம் என்கிறார், குப்தா. பொதுத்தொலைபேசியிலி ருந்தும், மின்னஞ்சல் மூலமும் கொலை மிரட்டல் விடும் கிறுக்குப் பயல்களையெல்லாம் சிறப்புப் படை அமைத்துத் தேடிப் பிடிக்கிறது போலீசு. ஆனால், ஒரு முதலமைச்சரைக் 'கொலை செய்' என்று பகிரங்கமாக அறைகூவல் விடுக்கும் வேதாந்தி மீது வழக்குப் பதிவு செய்யக்கூட அஞ்சு கிறது. குப்தா கூறுவது போல வேதாந்தியை உள்ளே தள்ளுவது

## வேதாந்தியை எதிர்த்தால் 'பயங்கரவாதி'!

சாம் வர்மா என்ற அமெரிக்காவில் குடியேறிய இந்து, கடந்த பிப்ரவரி 4-ஆம் தேதியன்று வேதாந்தி மீது போபால் போலீசு நிலையத்தில் ஒரு கிரிமினல் வழக்கு பதிவு செய்திருக் கிறார். அமெரிக்காவில் உள்ள பெடுல் என்ற நகரில் இவரும் சில பக் தர்களும் கட்டியுள்ள கோயிலில் கடந்த ஜனவரி மாதம் நடந்த திரு விழாவில் உபந்நியாசம் செய்ய வேதாந்தியை அழைத்திருக்கிறார். தட்சிணை போதாது என்றும் ஒரு கார் வாங்கிக் கொடுக்க வேண்டும் என்றும் கோயில் நிர்வாகிகளிடம் தகராறு செய்திருக்கிறான் வேதாந்தி. 'தங்களால் இயலாது' என்று அவர்கள் கூறவே, "கோயிலில் கிறித்தவர் களையும் முஸ்லீம்களையும் வேலைக்கு வைத்திருக்கிறீர்கள். உங்கள் கோயிலே தீட்டாகிவிட்டது" என்று அவர்களிடம் கூச்சல் போட்ட துடன் "பயங்கரவாதிகளின் கூடா ரமாக அந்தக் கோயில் செயல்பட்டு வருகிறது" என்று அமெரிக்காவில் போகிற இடத்திலெல்லாம் பிரச்சாரம் செய்திருக்கிறான் வேதாந்தி. பீதிய டைந்த சாம் வர்மா, வேதாந்தி மீது பெடுல் நகரப் போலீசிலும் ஒரு வழக்கைப் பதிவு செய்து வைத்திருக் கிறார்.


படிப்பகம்

www.padippakam.com

இருக்கட்டும், மாத்ரி டிரஸ்ட்டில் ஒரு சோதனை நடத்துவதற்குக் கூட நிதிய மைச்சகம் உத்தரவிடவில்லை என்பதே உண்மை.

'தேவதூஷணம் செய்பவனின் நாக்கை அறுக்க வேண்டுமென்று' பக வத் கீதை சொல்கிறதாம். நோட்டு மாற் றுபவனுக்கு கிருஷ்ண பரமாத்மா என்ன தண்டனை தரச் சொல்கிறார்? தெகல்காவின் கேமரா முன் லஞ்சம் வாங்கிப் பிடிபட்ட பங்காரு லட்சும ணனைக் கட்சித் தலைவர் பதவியிலி ருந்து இறக்கியது பாரதிய ஜனதா. ஆனால், வேதாந்தி மீது எந்த நடவடிக் கையும் கிடையாது. அவர் விசுவ இந்து பரிசத்திலேயே இல்லையென்று கூசாமல் புளுகுகிறது. 'சூத்திரன் திரு டினால் சிரச்சேதம், பார்ப்பான் திரு டினால் சிகைச் சேதம்' என்பதல்லவோ மனுநீதி!

செப்-30 தேதியிட்ட ஜூனியர் விக டனுக்கு அளித்துள்ள பேட்டியில் ''நான் கருணாநிதிக்கெதிராகச் சொன்ன கருத்தில் எந்த மாற்றமும் இல்லை'' என்று திமிராகப் பதிலளித்தி ருக்கிறான் வேதாந்தி. பா.ஜ.க.வினரோ ''அதான் வாபஸ் வாங்கிவிட்டாரே, அப்புறம் ஏன் அடிக்கிறீர்கள்?'' என்று நியாயம் பேசுகிறார்கள்.

எந்தக் காலத்திலும் நல்ல பாம்பு நஞ்சை வாபஸ் வாங்கியதில்லை; வாங்கவும் முடியாது. அதை அரைகு றையாக அடித்துத் தப்ப விடுவதுதான் ஆபத்து!

• சூரியன்

# "கட்டப்பஞ்சாயத்து வசூல் ரௌடி போலீசு இன்ஸ்பெக்டர் இலட்சுமணனை பதவி நீக்கம் செய்!" – கண்டன ஆர்ப்பாட்டம்

**மா**தச் சம்பளமாக ஏறத்தாழ ரூ. 18,000 வாங்கும் ஒரு போலீசு இன்ஸ்பெக்டர், பல இடங்களில் பலகோடி மதிப் புள்ள சொகுசு பங்களாக்களைக் கட்டியெழுப்ப முடியுமா? ஏன் முடியாது என்று தன்னையே உதாரணமாகக் காட்டும் சேலம் - பள்ளப்பட்டி போலீசு இன்ஸ்பெக்டர் இலட்சுமண னின் மகாத்மியங்களைக் கேட்டால் தமிழக மக்கள் அதிச யித்துப் போவார்கள்.

முதல் தகவல் அறிக்கை (FIR) பதிவு செய்ய ரூ. 10,000; அடியாள் சப்ளைக்கு ரூ. 50,000 முதல் ரூ. 1 லட்சம்; சட்ட விரோதமாக லாட்டரி சீட்டு விற்க ரூ. 40,000; தள்ளு வண்டி, பழக்கடை வியாபாரிகளிடமிருந்து மாமூல் ரூ. 60,000; கட்டப்பஞ்சாயத்துக்குக் கமிஷன் பல லட்சம் - என்று இந்த ''வசூல் ராஜா'' அடித்து வரும் கொள்ளைக்கு எல்லையே கிடையாது. பள்ளப்பட்டி போலீசு நிலை யத்தை கட்டப்பஞ்சாயத்து நடத்தி பகற்கொள்ளையடிக் கும் நிலையமாக மாற்றிய பெருமை இந்த இன்ஸ்பெக்ட ருக்கு மட்டுமே சொந்தம். இச்சட்டபூர்வக் கொள்ளையனி டம் சிக்கி சேலம் நகர மக்கள் படும் வேதனையைச் சொல்லி மாளாது.

''என்னை எவனும் ஆட்டவோ அசைக்கவோ முடி யாது'' என்று தினவெடுத்துத் திரியும் இந்த வசூல் ரௌடி இன்ஸ்பெக்டர், அண்மையில் சேலம் - பள்ளப்பட்டியில் ''காமதேனு மெட்டல்ஸ் அண்டு செக்யூரிட்டீஸ் லிமிடெட்'' எனும் நிறுவனத்தை நடத்தி வந்த திருமதி சைலஜா என்ப வரை மிரட்டி, அதன் நிர்வாகத்தையே அபகரித்துள்ளார். இந்நிறுவனத்துக்குக் கட்டடம் விற்ற ராஜேஷ் என்பவர், அக்கட்டடத்தை தன்னி டமே விற்று விடுமாறு திரு மதி சைலஜாவை அச்சு றுத்தி வந்தார். ராஜேஷிடம் பல லட்சம் கமிஷன் பெற் றுக் கொண்டு கட்டப்பஞ்சா யத்து செய்த இன்ஸ்பெக் டர் இலட்சுமணன், திருமதி சைலஜாவை ஆபாசமாக ஏசியதோடு, அக்கட்ட டத்தை ராஜேஷ் கேட்கும் விலைக்கு ஒப்படைக்கா விட்டால், அ.தி.மு.க. கவுன்சிலர் மாரியப்பன் தலைமையிலான அடியாட்களை ஏவி சைலஜாவை ஒழித்து விடுவதாக மிரட்டி, இக்கம் பெனியின் சாவியைப் பறித்து ராஜேஷிடம் கொடுத்து, கம்பெனியையே அபகரித்துள்ளார்.




இக்கட்டப் பஞ்சாயத்து ரௌடி இன்ஸ்பெக்டரின் கொடுஞ்செயலைப் பற்றி நீதிபதிகள், தமிழக முதல்வரின் தனிப்பிரிவு, போலீசு தலைமை இயக்குனர், ஆணையர் உள்ளிட்டு அனைவரிடமும் புகார் செய்து இக்கம்பெனி நிர்வாகிகள் முறையிட்டதன் பேரில், கடந்த 25.7.07-இல் இந்தக் கொள்ளையன் பணி மாறுதல் செய்யப்பட்டார். ஆனாலும், இன்னமும் இங்கு நிழல் இன்ஸ்பெக்டராக உலாவும் இலட்சுமணன், இக்கம்பெனி நிர்வாக இயக்குனர் மற்றும் உறவினர்கள் மீது பொய்யாக திருட்டு வழக்கு சோடித்து கொட்டமடித்து வருகிறார்.

அதிகாரத் திமிரோடு அடாவடித்தனம் செய்துவரும் சீருடை அணிந்த இந்த வசூல் ரௌடிக்கு எதிராக தொடர்ந்து பிரச்சாரம் செய்துவந்த பு.ஜ.தொ.மு; அதன் தொடர்ச்சியாக 3.9.07 அன்று சேலம் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பாக எழுச்சிமிகு ஆர்ப்பாட்டத்தை நடத் தியது. காமதேனு மெட்டல்ஸ் கம்பெனியின் நிர்வாகிகள் உள்ளிட்டு இந்தப் பகற்கொள்ளை இன்ஸ்பெக்டரால் பாதிக்கப்பட்ட சிறு வியாபாரிகள் - உழைக்கும் மக்கள் திரளாகப் பங்கேற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில் வழக்குரை ஞர்கள், திராவிடர் கழக முன்னணியாளர்கள், மனித உரி மைப் பாதுகாப்பு மையத்தினர் கண்டன உரையாற்றினர். இந்த ஆர்ப்பாட்டத்தைத் தொடர்ந்து, போலீசு தலைமை இயக்குனர், இந்த வசூல் ரௌடி விவகாரத்தை சி.பி.சி.ஐ.டி. விசார ணைக்கு உத்தரவிட் டுள்ளார். ரௌடி இன்ஸ் பெக்டருக்கு எதிராகத் துணிந்து உறுதியாக நிற்கும் பு.ஜ.தொ.மு. நடத்திய இந்த ஆர்ப்பாட்டம் சேலம் நகரமெங்கும் பெருந்தாக் கத்தை ஏற்படுத்தியுள்ளது.

- பு.ஜ. செய்தியாளர்கள்


படிப்பகம்

www.padippakam.com

# இராமன் பாலம்: இந்துவெறியர்களின் பொய்கள் - சதிகள்!

பாரதிய ஜனதாவின் அலுவலகத்தை தி.மு.க. தொண்டர்கள் நொறுக்குவதையும், கொடிமரத்தைப் பிடுங்கி எறிவதையும், தமிழகமெங்கும் வேதாந்தியின் உருவப்பொம்மைகளும் அத்வானியின் உருவப்பொம்மைகளும் எரிக்கப்படுவதையும் தொலைக்காட்சியில் பார்த்த வட இந்திய மக்கள் என்ன நினைத்திருப்பார்கள்? கட்சியின் தலைமை அலுவலகத்தின் கதவை மூடிக்கொண்டு கம்பக் கதவின் பின்னே பேயறைந்தாற்போல நின்று கொண்டிருந்த பா.ஜ.க தலைவர்களைப் பார்த்த அவர்களது வட இந்தியத் தலைவர்கள் எப்படிப் புழுங்கியிருப்பார்கள்? முகத்தில் பார்ப்பனக் கொழுப்பையும் திமிரையும் தவிர, வேறு உணர்ச்சிகளைக் காட்டவே தெரியாத ராம.கோபாலன்ஜியும், எச்.ராஜா-ஜியும் பீதியில் உறைந்து நின்றதைப் பார்த்த சங்கப் பரிவாரத்தின் காக்கி அரை நிஜார்கள் என்ன உணர்ந்திருப்பார்கள்?

பா.ஜ.க அலுவலகத்தின் மீது தி.மு.க.வினர் தாக்குதல் தொடுத்த சம்பவத்தின் முக்கியத்துவத்தை மிகைப் படுத்துவது நம் நோக்கமில்லை. 'தங்கள் தலைவரின் தலையை வெட்டி வந்தால் எடைக்கு எடை தங்கம் தருவதாக' ஒரு பரதேசி கூறும்போது, அந்தத் தலைவனின் மீது அன்பு கொண்ட தொண்டர்கள் ஆத்திரம் கொண்டு தாக்குவது எங்கும் நடக்கக் கூடியது தானே என்று கருதலாம்.

ஆனால், இந்தத் தலைவர் இராமனை எள்ளி நகையாடிய தலைவர். அதற்கு எதிர்ப்பு வந்தபோதும் அதை லட்சியம் செய்யாத தலைவர். பாரதிய ஜனதாவின் மொழியில் சொன்னால், இந்துக்களின் மதத்தையும் கடவுளையும் இழிவு படுத்திய நாத்திகர். அவருக்கு ஆதரவாகத் திரண்டு வந்தவர்களோ அனைவரும் 'இந்துக்கள்'.

தங்கள் தலைவர் இராமபிரானை 'இழிவு'படுத்துகிறார் என்று தெரிந்தும் அதைப் பொருட்படுத்தாதது மட்டுமல்ல, அதனைத் தட்டிக் கேட்ட சாமியாரையும் கட்சியையும் ஒரு இந்து திருப்பித் தாக்க முடியுமா? இராமனுக்கு எதிராக இராவணனைக் கொண்டாடும் ஒரு தலைவருக்குப் பின்னால் இந்து என்று சொல்லிக் கொள்ளும் ஒருவன் அணிதிரளமுடியுமா?

இதுதான் தமிழகம் தவிர்த்த இந்தியாவுக்கு, குறிப்பாக வட இந்தியாவுக்குப் புரியாத புதிர். பார்ப்பன பாசிச ஆர்.எஸ்.எஸ். கும்பலின் ஆத்திரத்தைத் தூண்டும் புதிர். அந்தப் புதிரின் நாயகன் பெரியார். பார்ப்பன இந்து மதவெறி சித்தாந்தத்துக்குப் பலியாகியோ அல்லது அஞ்சி நடுங்கியோ எஞ்சியுள்ள இந்தியா குனிந்து நிற்கையில், கம்பீரமாக அதனை எதிர்த்து நிற்கிறது தமிழகம். இது பெரியார் பிறந்த மண் என்பதற்காக நாம் கர்வம் கொள்ளக்கூடிய தருணம் இது.

கருணாநிதியின் பேச்சையும், தி.மு.க.வினரின் எதிர்த்தாக்குதலையும் மிகைபடப் புகழ்வது நமது நோக்கமல்ல. அதேநேரத்தில் அதனைப் அலட்சியப்படுத்திப் புறக்கணிப்பது நேர்மையும் அல்ல. இராமனை அம்பலப்படுத்தி கருணாநிதி ஒருவேளை பேசாமல் இருந்திருந்தால், ''ஏன் பேசவில்லை?'' என்று அவரைக் கேட்கும் யோக்கியதை கொண்ட யாரும் இந்திய ஓட்டுக் கட்சி அரசியலில் இல்லை. இத்தகைய விமரிசனங்கள் அவருக்கு அரசியல் ஆதாயத்தைத் தரப்போவதும் இல்லை. தேர்தல் அரசியல் சந்தர்ப்பவாதத்தில் கரைகண்டு, பாரதிய ஜனதாவுடன் கூட்டு வைக்கும் அளவுக்குச் சீரழிந்த பின்னரும், முன்னர் பெருங்காயம் வைத்திருந்த அந்தப் பாண்டத்தில் இன்னும் காரம் மிச்சமிருக்கிறது. அந்தக் காரம் தி.மு.க. என்ற கட்சியின் இயல்பாக இல்லாவிடினும், கருணாநிதி என்ற கிழவரின் இயல்பாக இருக்கிறது. பிழைப்புவாதத்தில் ஊறிப்போன அந்தக் கட்சியிலும் கூட, பெரியாரின் பார்ப்பன எதிர்ப்பு என்ற உணர்வு - ஒருவேளை அவர்களுக்கே தெரியாமல்கூட - இன்னும் கொஞ்சம் எஞ்சி

சென்னையில் உள்ள பா.ஜ.க. மாநிலத் தலைமை அலுவலகத்தின் மீது தி.மு.க. தொண்டர்கள் நடத்திய தாக்குதலால் பீதியடைந்து அலறும் பார்ப்பன பாசிசக் கும்பல்.



www.padippakam.com

யிருக்கிறது. 'தந்தை'யின் சாயல் பிள்ளைகள் மீது படிந்திருக்கிறது!

சமஸ்கிருதத்தை எதிர்த்து நின்ற தமிழ், பார்ப்பனியத்தை எதிர்த்து நின்ற பவுத்தம், சமணம், சித்தர்கள் ... என்று ஒரு நெடிய மரபைக் கொண்டிருக்கும் தமிழகத்தில், மக்கள் மத்தியில் விரவியிருக்கும் இந்த பார்ப்பன எதிர்ப்புணர்வை வேறு யாரும் புரிந்து வைத்திருக்கவில்லை என்றாலும், தமிழகத்தின் பார்ப்பனக் கும்பல் சரியாகவே புரிந்து வைத்திருக்கிறது. ''இராமனைக் கற்பனை என்று கூறியதன் மூலம் கருணாநிதி இந்துக்களின் மத உணர்வைப் புண்படுத்திவிட்டார்'' என்று ஜெயலலிதா அலறுவதும், ''கருணாநிதி திருந்தாததனால்தான் இத்தகைய கடும் விமரிசனங்கள் எழுகின்றன'' என்று தலைவெட்டி வேதாந்திக்கு வக்காலத்து வாங்குவதும் வெறும் தி.மு.க.-அ.தி.மு.க. போட்டி அரசியல் அல்ல. பார்ப்பன எதிர்ப்பு மரபை தமிழகத்திலிருந்து ஒழித்துக் கட்டி, பார்ப்பன சாம்ராச்சியத்தை நிறுவ வேண்டுமென்ற ஜெ-வின் வெறிக்கு இவை நிரூபணங்கள். பாரதிய ஜனதாவால் இந்த இராமன் விவகாரத்தைத் தமிழகத்தின் பட்டி தொட்டியெங்கும் கொண்டு செல்ல இயலாது என்பது ஜெயலலிதாவுக்குத் தெரியும். அதனால்தான் அந்தப் பணியைச் சொரணையற்ற தன் அடிமைகளிடம் ஒப்படைத்திருக்கிறார்.

பார்ப்பன பாசிசத்தை நிலைநாட்டும் தங்களது பொது நோக்கத்துக்காகத்தான் சங்கராச்சாரி கைதை ஒட்டி ஏற்பட்ட பகையை மறந்து சோவும், சுப்பிரமணிய சாமியும், அத்வானியும் ஜெயலலிதாவுடன் கை கோர்க்கின்றனர். அன்று சு.சாமிக்கு எதிராகத் தனது மகளிரணியை வைத்து அம்மண ஆட்டம் நடத்திக் காட்டிய அம்மையார், 'சேது சமுத்திரத் திட்டத்துக்கு இடைக்காலத் தடை வாங்கிய சாதனைக்காக' இன்று சுப்பிரமணிய சாமிக்கு மலர்க்கொத்து அனுப்பி வைக்கிறார். தினமணியோ, மதியின் அருவெறுக்கத்தக்க கேலிச்சித்திரங்களாலும், வன்மம் தெறிக்கும் தலையங்கங்களாலும் நிரம்பி வழிகிறது. இராமன் சேது பிரச்சினையில் இந்தத் தமிழ்நாட்டுப் பார்ப்பனக் கூட்டணியின் துணையை பாரதிய ஜனதா பெரிதும் நம்பியிருக்கிறது.

'வெளிக்கியிருக்கப் போனவனுக்கு விளாம்பழம் கிடைத்த கதையாக' பாரதிய ஜனதாவுக்கு அகப்பட்டிருக்கிறது இராமன் சேது பிரச்சினை. எந்திரத்தில் மடக்கி மடக்கித் நசுக்கப்பட்ட கரும்பு போல 'அயோத்தி இராமன்' சக்கையாகி பொடியும் ஆகி உதிர்ந்து விட்டான். இனி, அயோத்தி இராமனைக் காட்டி அந்தக் கோயில் பூசாரியிடமே கூட ஓட்டு வாங்க முடியாத நிலை! அரசு அதிகாரத்தை இழந்த நிலையில் பதவிப் போட்டியால் பா.ஜனதாக் கட்சி கந்தலாகிக் கிடந்தது.

> **பார்ப்பன இந்துமதவெறி சித்தாந்தத்துக்குப் பலியாகியோ அல்லது அஞ்சி நடுங்கியோ எஞ்சியுள்ள இந்தியா குனிந்து நிற்கையில், கம்பீரமாக அதனை எதிர்த்து நிற்கிறது தமிழகம். இது பெரியார் பிறந்த மண் என்பதற்காக நாம் கர்வம் கொள்ளக் கூடிய தருணம் இது.**

காங்கிரசை விஞ்சும் அளவுக்கு பதவிப்போட்டி, கோஷ்டித் தகராறுகள், போலி விசா, நாடாளுமன்றத்தில் கேள்வி கேட்க இலஞ்சம், காமக் களியாட்டங்கள், அதிகாரத் தரகு பேரங்கள் என ஆளும் வர்க்கமே முகம் சுளிக்கும் அளவுக்கு மொத்தக் கட்சியுமே அழுகி நாறியது. அமெரிக்க அணுசக்தி ஒப்பந்தம் முதல் மன்மோகன் சிங்கின் மறுகாலனியாக்கக் கொள்கைகள் வரை அனைத்திலுமே காங்கிரசின் கொள்கைதான் பாரதிய ஜனதாவின் கொள்கையும் என்பதால் 'எதை எதிர்ப்பதன் மூலம் எதிர்க்கட்சியாக இருப்பது' என்ற கேள்விக்கு பாரதிய ஜனதாவிடம் விடை இல்லை. எனவே, கையில் கிடைத்திருக்கும் இந்த 'விளாம்பழத்தை' அது விடுவதாக இல்லை.

இராமன் பாலம் குறித்த பாரதிய ஜனதாவின் ஆவேசங்கள் எல்லாம் வெறும் வேசங்கள். மார்ச் 9, 2001 அன்று சேது சமுத்திரத்திட்டம் குறித்த ஆய்வுக்கு உத்தரவிட்டவர் அப்போதைய அமைச்சர் அருண் ஜேட்லி. அதனபின் உமாபாரதி, முரளி மனோகர் ஜோஷி, திருநாவுக்கரசு உள்ளிட்ட 6 பா.ஜ.க அமைச்சர்கள் தற்போதைய கால்வாய்ப் பாதைக்கு ஒப்புதல் அளித்துள்ளனர். கடலுக்கடியில் பாலம் இருக்கிறதா என்று 'கண்டுபிடிப்பதற்காக' சுரங்கத்துறை அமைச்சர் உமாபாரதி நியமித்த ஆய்வுக்குழுவும் 'அவ்வாறு ஏதுமில்லை' என்று அழுத்தம் திருத்தமாக அப்போதே அறிக்கை கொடுத்துவிட்டது. அன்றைய கப்பல் போக்குவரத்து அமைச்சர் சத்ருகன் சின்ஹா, ''ஆதாம் பாலத்துக்கு (அதாவது இராமர் பாலத்துக்கு) குறுக்கேதான் சேதுக்கால்வாய் தோண்ட இருக்கிறோம்'' என்று செப். 29, 2003 அன்று நாடாளுமன்ற மேலவையில் அறிவித்துமிருக்கிறார். இத்தனை உண்மைகளையும் இருட்டடிப்பு செய்து விட்டு இன்று சாமியாடிக் கொண்டிருக்கிறது பாரதிய ஜனதா.

பாரதிய ஜனதாவிலிருந்து வெளியேறிய உமாபாரதி, தன்னைப் பிரபலப்படுத்திக் கொள்வதற்காக பத்துப் பேருடன் ராமேசுவரம் கடலில் நின்று அவ்வப்போது போட்டோவுக்கு போஸ் கொடுத்தார். மற்றபடி ஜெயலலிதா, பா.ஜ.க உள்ளிட்ட யாரும் இதனை ஒரு பிரச்சினையாகவே கருதவில்லை.

மே-2007-இல் சென்னை உயர்நீதிமன்றத்தில் சுப்பிரமணிய சாமி தாக்கல் செய்த மனுவுக்கு உயிர் கொடுத்து பிரச்சினையைத் துவங்கி வைத்தவர் தலைமை நீதிபதி ஷா. ''ஆதாம் பாலம் (இராமன் பாலம்) ஒரு தொன்மை வாய்ந்த சின்னம்தான் என்பது குறித்து தொல்லியல் துறையைக் கொண்டு ஆய்வு செய்யாமலேயே கால்வாய் வெட்டப்படுவதாகவும் இதற்கு இடைக்காலத் தடை விதிக்கவேண்டும்'' என்றும் கோரினார் சு.சாமி. அவை இயற்கையாக அமைந்த மணற்திட்டுக்கள் என்பது பா.ஜ.க அரசின் காலத்தில் நடத்தப்பட்ட ஆய்விலேயே நிறுவப் பட்டுவிட்டதால் தொல்லியல் துறையின் ஆய்வு என்ற கேள்வியே எழவில்லை. எனினும், நீதிபதி ஷா வழக்கைத் தள்ளுபடி செய்வதற்குப் பதிலாக, சுப்பிரமணியசாமியின் கருத்தை வழிமொழிந்து நீதிமன்றத்தில் ஒரு பிரச்சார உரை நிகழ்த்தினார். பிறகு வழக்கை உச்ச நீதிமன்றத்துக்கு அனுப்பி வைத்தார். பார்ப்பன மதவெறியின் முதல் கொள்ளி இப்படித்தான் வைக்கப்பட்டது.

பிறகு உச்சநீதிமன்றத்தில் தொல்லியல் துறை தாக்கல் செய்த மனுவின் வாசகங்களைக் காரணம் காட்டி பிரச்சினையை ஊதிவிட்டது விசுவ இந்து பரிசத். ''ஆதாம் பாலம் என்பது இயற்கையான மணற்திட்டு. அது மனிதர்களால் உருவாக்கப்பட்டதல்ல'' என்று கூறிய தொல்லியல் துறை,


படிப்பகம்

www.padippakam.com




இராமாயணமும் அதன் பாத்திரங் களும் புனைக தைகளே என்றும் குறிப்பிட்டது. உடனே களமிறங் கினார் அத்வானி. ''இது தேவ தூஷணம்'' என்றும், இந்துக்களுக்கு அவமதிப்பு என்றும், இந்தியா என்ற கருத்தாக் கத்தையே இது நிரா கரிப்பதாகவும் கூறி, மன்மோகன் சிங்கை தனியே சந் தித்து ஆட்சேபம் தெரிவித்தார். ''ஆட்சியே போனாலும் அணுசக்தி ஒப்பந்தத்தில் ஒரு வார்த்தையைக் கூடத் திருத்தமாட் டேன்'' என்று வெறி கொண்டு பேசிய மன்மோகன்சிங், அத்வானி சொன்ன மறுகணமே ஆட்சேபத்துக்குரிய அந்த வாக்கியங்களை நீக்குமாறு தொல் லியல் துறைக்கு உத்தரவிட்டார். மறுநாள் மொத்த மனுவையுமே வாபஸ் பெற்றது காங்கிரசு.

''ராமன் இந்தியக் கலாச்சாரத்தின் பிரிக்கவொண்ணாத அங்கம்.. இது வழக்குக்கோ விவாதத்துக்கோ உரிய பொருளே அல்ல... இராமன் இருந்தாரா என்பதை ஆய்வுக்கு உட்ப டுத்த முடியாது. இந்த உலகமே இராம னால்தான் இருக்கிறது... நம்பிக் கையின் அடிப்படையிலான விசயங்க ளுக்கு நிரூபணம் தேவையில்லை.'' — இது அத்வானியின் அறிவிப்பு அல்ல; மனுவை வாபஸ் பெறுமாறு உத்தர விட்ட காங்கிரசு அரசின் சட்ட அமைச்சர் பரத்வாஜின் பிரகடனம். 1980-களில் பாபர் மசூதியின் கதவு களைத் திறந்து இராமன் வழிபாட்டுக்கு அனுமதி அளிக்க ஏற்பாடு செய்ததும் இந்தப் பார்ப்பன நரிதான் என்பதை நாம் மறந்து விடக்கூடாது.

உடனே அமைச்சர் அம்பிகா சோனி ராஜினாமா செய்யவேண்டும் என்று அமைச்சர் ஜெய்ராம் ரமேஷும் ஆர்.கே.தவாணும் கோரினர். தொல் லியல் துறை அதிகாரிகள் தற்காலிக நீக்கம் செய்யப்பட்டனர். மனுவை திரும்பப் பெற்றதை தி.மு.க.வைத் தவிர ஐக்கிய முற்போக்குக் கூட்ட ணியின் வேறு எந்தக் கட்சியும் எதிர்க்க வில்லை. போலி கம்யூனிஸ்டுகளோ, '' இராமன் கற்பனைப் பாத்திரம் என்று தொல்லியல் துறை தனது மனுவில் கூறியிருக்கத் தேவையில்லை'' என்று கடிந்து கொண்டனர்.

இராமன் என்றொருவன் இருந்த தற்கும், அவன் பாலம் கட்டியதற்கும் ஆதாரமாக வால்மீகி இராமாயணம், துளசிதாசரின் ராமசரித மானஸ் ஆகிய 'வரலாற்று நூல்களை' சுப்பிரமணிய சாமி நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருக் கும்போது, ''இது வரலாறு அல்ல, புராணக் கட்டுக்கதை'' என்று மறுக் காமல் தொல்லியல் துறையால் எப்படி வாதாடமுடியும்? பெரும்பான்மை இந் துக்களின் மனம் புண்படும் என்ப தற்காக இந்த வரலாற்று உண்மையைக் கூறக்கூடாது என்பது எந்த வகை மதச் சார்பின்மையில் சேரும்? தொல்லியல் என்பது ஒரு வரலாற்று விஞ்ஞானம். ஒரு அறிவியலாளன், அவன் சான்று களின் அடிப்படையில் தான் கண்ட உண்மைகளைக் கூறவேண்டுமா அல்லது புராணப் புரட்டுகளுக்கு விஞ் ஞானம் என்று சான்றிதழ் தர வேண்டுமா? 'பூமி சூரியனைச் சுற்றுகி றது' என்று கூறியதற்காக கலீலி யோவைக் கூண்டிலேற்றிய பாதிரிக ளுக்கும் இந்தக் காங்கிரசு களவாணிக ளுக்கும் என்ன வேறுபாடு? ஜெர்மானி யர்கள்தான் தூய ஆரியர்கள் என்றும் வெள்ளையரல்லாதோர் அரைக்குரங் குகள் என்றும் அறிவியல் பாடம் எழுதச் சொன்ன இட்லரின் பாசிசத் துக்கும் இதற்கும் என்ன வேறுபாடு? ஒரு வேறுபாடும் இல்லை.

இதோ பாசிசம் பேசுகிறது. ''இராமன் வாழ்ந்ததை மறுக்கும் ஒரு அரசுக்கு ஆட்சியில் நீடிக்க உரிமை இல்லை'' என்கிறார் அத்வானி. ''தேவ தூஷணம் செய்ப வனின் நாக்கை அறு, தலையை வெட்டு என்று பக வத்கீதை ஆணையி டுகிறது'' என் கிறான் வேதாந்தி. அதே நேரத்தில் 'விவாதத்துக்குத் தயார்' என்று சவ டாலும் அடிக்கிறார் அத்வானி. பார்ப் பனக் கும்பலின் இந்த இரட்டை நாக்கு புரளும் வித்தைப் புரிந்து கொள்வது மிகவும் முக்கியமானது.

விவாதிக்கத் தயாராக இருப் பவன் தொல்லியல் துறையின் அறிக் கைக்கு எதிராக நீதிமன்றத்தில் அல்லவா விவாதித்திருக்க வேண்டும்! எங்கே விவாதத்தின் முடிவில் ஒரு தீர்ப் புக்குக் கட்டுப்பட வேண்டியி ருக்குமோ அங்கே விவாதிக்க மறுத்து, 'இது எங்கள் நம்பிக்கை' என்று கூறுவது; நீதிமன்றத்துக்கு வெளியே வந்து 'விவாதத்துக்குத் தயார்' என்று ஜம்பமடிப்பது - இதுதான் பார்ப்பன பாசிஸ்டுகள் தொடர்ந்து கையாண்டு வரும் உத்தி.

அயோத்தியில் அகழ்வாராய்ச்சி நடத்திய ப.ப.லால் என்ற ஆர்.எஸ்.எஸ் ஆதரவு தொல்பொருள் ஆய்வாளர் அயோத்தியில் மனிதர்கள் வாழத்தொடங்கியதற்கான தடயம் கி.மு. 700-ஆம் நூற்றாண்டிலிருந்து இருப்பதாகக் கூறினார். அன்று இவ ருடைய ஆய்வைத்தான் இராம ஜென் மபூமிக்கு ஆதாரமாகக் காட்டியது ஆர்.எஸ்.எஸ். தற்போது இராமர் பாலம் 17.5 இலட்சம் ஆண்டுகளுக்கு முன் கட்டப்பட்டது என்று வாதிடுகி றார்கள். இராமன் பிறப்பதற்கு முன்பே இராமன் பாலம் கட்டப்பட்டுவிட்டது போலும்! இந்தக் கேலிக்கூத்துடன் எப்படி விவாதம் நடத்துவது?

இராமன் பாலத்தில் தோரியம் கொட்டிக்கிடப்பதாகவும், அதனால் தான் கால்வாய் தோண்ட வேண்டாம் என்று கூறுவதாகவும் ஒரு புதுக் கரடி விடுகிறார் இல.கணேசன். கால்வாய் தோண்டினால் தோரியம் கரைந்து விடுமா, அவ்வாறு தோரியம் இருந் தாலும் அதை வெட்டாமல் எடுக் கத்தான் முடியுமா? அல்லது அங்கே

www.padippakam.com

யுரேனியமே கொட்டிக் கிடந்தாலும் அமெரிக்காவுடன் ஒப்பந்தம் வேண்டாம் என்றுதான் பாரதிய ஜனதா சொல்லிவிடுமா? எதுவும் இல்லை. பிறகு விவாதம் எதற்கு?

5 நாளில் 800 மைல் நீளத்துக்குப் பாலம் போட்டதாகக் கூறுகிறது வால்மீகி இராமாயணம். 30 மைல் கூட இல்லாத இலங்கைக்கு 800 மைல் நீளத்துக்குப் பாலம் போட்டதாகக் கூறும் கோமாளித்தனத்துக்கு எந்த 'சோ' விளக்கம் கூறுவார்? இன்று அதிநவீன கருவிகளை வைத்துக் கொண்டு ஒரு மேம்பாலம் கட்டுவதற்கே மாதக் கணக்கில் ஆகும்போது அணிலும் குரங்கும் சேர்ந்து 5 நாளில் பாலம் கட்டிய கட்டுக்கதையுடன் எப்படி விவாதம் நடத்துவது?

'விவாதம் நடத்தத் தயார்' என்று கூறுபவர்கள் அறிவுபூர்வமாகக் கேள்வி கேட்டால் ஆத்திரம் அடைவார்கள். 'உன் அறிவுக்கெல்லாம் எட்டாத பேரறிவு அது' என்று மிரட்டுவார்கள். கடைசியில், ''எங்கள் நம்பிக்கையைக் கேள்விக்குள்ளாக்குவதன் மூலம் மத உணர்வைப் புண்படுத்துகிறாய்'' என்று குற்றம் சாட்டுவார்கள்.

விவாதம் என்றாலே அங்கே சான்றுகளின் அடிப்படையில்தான் முடிவுக்கு வரமுடியும். சான்றுகளால் நிரூபிக்கத் தேவையில்லாத 'நம்பிக்கை' விவாதத்துக்கு வருவதில்லை. மேலே சொர்க்கமும் கீழே நரகமும் இருப்பதாக நம்பும் மக்கள் அதை நிரூபிக்க முயல்வதில்லை. இராமாயணத்தை நம்பும் பக்தர்கள் அது வரலாற்று ரீதியாக உண்மைதானா என்பது குறித்து எப்போதும் கவலைப்பட்டதில்லை. இராமனை அவதார புருசனாகக் கருதும் அவர்கள் அவனுடைய நடவடிக்கைகள் மனிதனுக்கு சாத்தியமானவைதானா என்று சோதித்துப் பார்க்கவும் முயலுவதில்லை.

அது அவர்களுடைய தனிப்பட்ட மத நம்பிக்கை. அவ்வளவுதான். ''இராமன் என்று ஒருவன் இருந்தான். அவன் கடலுக்குக் குறுக்கே பாலம் கட்டினான்'' என்று நம்புகிறவர்கள் நம்பிக் கொள்ளட்டும். ஆனால், அந்த நம்பிக்கை நாட்டின் பொது முடிவாக ஆக்கப்படுமானால் அதனைச் சான்றுகள் மூலம் நிரூபிக்கத்தான் வேண்டும். கேள்விகளுக்குப் பதில் சொல்லித்தான் ஆக வேண்டும். அவ்வாறு கேட்பது மத உணர்வைப் புண்படுத்துவதாகாது.

ஆனால், பார்ப்பன பாசிஸ்டுகளோ இராமாயணத்தை இதிகாசமாகவும் அதே நேரத்தில் வரலாறாகவும் காட்ட முயற்சிக்கிறார்கள். இராமனை ஒரே நேரத்தில் கடவுளாகவும் வரலாற்று மாந்தனாகவும் காட்ட முயல்கிறார்கள். வரலாற்று வகைப்பட்ட கேள்விகளை எழுப்பினாலோ, இந்துக்களின் மத உணர்வைப் புண்படுத்திவிட்டதாக அலறுகிறார்கள். இந்து தேசிய அரசியலைக் கட்டமைப்பதற்கான சூழ்ச்சிதான் இது.

இராமாயணம் ஒரு கட்டுக்கதைதான். ஆனால் அது இந்தியாவின் பழங்குடி மக்களான திராவிடர்களுக்கு எதிராக ஆரியர்கள் நடத்திய ஆக்கிரமிப்பு யுத்தத்தையும், நால்வருண அமைப்பு எனும் பார்ப்பனக் கொடுங்கோன்மையையும் பிரதிபலிக்கும் கட்டுக்கதை. இதில் வரும் சமூக உண்மைகள் மட்டுமே வரலாற்றுத் தன்மை வாய்ந்தவை. இராமன் பாலம், புஷ்பக விமானம், பிரம்மாஸ்திரம் போன்றவை அனைத்தும் புனைகதைகள். பார்ப்பன பாசிஸ்டுகளோ இதில் வரும் புனைகதைகளை வரலாறு என்று நம்பச் சொல்கிறார்கள். பார்ப்பனக் கொடுங்கோன்மையை நிரூபிக்கும் சமூக உண்மைகளை மட்டும் புனைகதையென்று கருதி மறந்துவிடச் சொல்கிறார்கள்.

இராமன் பாலம் வரலாற்று உண்மை என்றால், இந்த நாட்டின் மூலை முடுக்குகளில் எல்லாம் இராமாயணத்தையும் மகாபாரதத்தையும் தொடர்புபடுத்தி பார்ப்பனர்கள் உருவாக்கி வைத்திருக்கும் எல்லா கட்டுக்கதைகளையும் வரலாற்று உண்மைகளாக அங்கீகரிக்க வேண்டியிருக்கும். 'ராமன் தலைவைத்துப் படுத்த கல், சீதை குளித்த இடம், இலட்சுமணன் முதுகு சொறிந்த இடம்' என்று இலட்சக்கணக்கான 'வரலாற்று' முக்கியத்துவம் வாய்ந்த இடங்களை அங்கீகரிக்க வேண்டியிருக்கும்.

அரசு பதவியில் இருக்கும் இந்துக்கள் மதச்சார்பின்மைக் கோட்பாட்டுக்கு விரோதமாக அரசு நிகழ்ச்சிகளையே மதச்சடங்குகளாக்குகிறார்கள். மத நம்பிக்கையை அரசு மேடையில் நின்று பிரச்சாரம் செய்கிறார்கள். அவர்களுக்கு அந்த உரிமை உண்டாம். ஆனால், கருணாநிதி மட்டும் தன்னுடைய நாத்திகக் கருத்தை ஒரு மத நம்பிக்கை போல மனதுக்குள் வைத்துக் கொள்ள வேண்டுமாம். வெளியில் பேசினால் அது மக்களின் மத உணர்வைப் புண்படுத்துமாம்.

மதத்தை தனிப்பட்ட நம்பிக்கையாக வைத்துக் கொள்வதும், பொது நடவடிக்கைகளை அறிவியல் கண்ணோட்டத்துக்கு உட்படுத்துவதும்தான் மதச்சார்பின்மைக் கோட்பாட்டின் சாரம். ஆனால், அறிவியலின் பாற்பட்ட நாத்திகக் கருத்தை 'தனிப்பட்ட மத நம்பிக்கையைப் போல' மனதிற்குள் வைத்துக் கொள்வதும், மதக்கருத்தை மட்டும் வெளியில் பேசுவதும்தான் உண்மையான மதச்சார்பின்மை என்கிறது பார்ப்பன பாசிசக் கும்பல். இராமனது இல்லாத மகிமைகளைப் பிரச்சாரம் செய்ய ஆத்திகத்துக்கு உரிமை உண்டென்றால், அதன் பொய்மையை அம்பலப்படுத்தும் உரிமையை நாத்திகத்துக்கு எப்படி மறுக்க முடியும்?

ஒரு மனிதன் தன்னை வருத்திக் கொள்வதை மட்டும்தான் மத உணர்வு என்று கருதி சகித்துக் கொள்ள முடியும். ஆனால், சக மனிதனை சூத்திரன் என்றும் பஞ்சமன் என்றும், மக்களின் மொழியை 'இழிமொழி' என்றும் கூறி நசுக்குகிறது பார்ப்பன மதம். இந்த ஆதிக்க உணர்வை மத உணர்வு என்று எப்படி அங்கீகரிக்க முடியும்?

இராமாயணத்தை அங்கீகரிப்பதென்பது என்பதன் பொருள், பார்ப்பன ஆதிக்கத்தையும் சூத்திர அடிமைத்தனத்தனத்தையும் அங்கீகரிப்பதுதான். பெரியாரும் அம்பேத்கரும் இதனை ஆணித்தரமாக நிறுவியிருந்த போதும், அவர்களைத் தங்களது அரசியல் பிழைப்புவாதத்துக்குப் பயன்படுத்திக் கொள்ளும் கட்சிகள் எவையும் அவர்களுடைய பார்ப்பன எதிர்ப்புக் கருத்துகளைப் பேசுவதில்லை. பிற்படுத்தப்பட்டோர்-தாழ்த்தப்பட்டோர் என்று பேசும் தலைவர்கள் மத்தியில் ஒளிந்திருக்கும் சுக்ரீவன்களையும், வீடணன்களையும், ஆழ்வார்களையும் நாம் அடையாளம் கண்டு கொள்ள வேண்டும்.

நாடெல்லாம் சுற்றிக் கடைசியில் வரவேண்டிய இடத்திற்கு வந்துசேர்ந்திருக்கிறது பார்ப்பன பாசிசம். கால்வாய் வெட்டுவதற்குக் காலதாமதம் ஆனாலும் பார்ப்பனக் கும்பலின் கல்லறைக்குக் குழி வெட்டும் வேலையை உடனே துவக்குவோம். காசியிலிருந்து ராமேசுவரத்திற்குத் தீர்த்த யாத்திரை வரும் இந்து பக்தர்கள், பார்ப்பன பாசிசம் புதைக்கப்பட்டிருக்கும் கல்லறையையும் தரிசித்துச் செல்லட்டும்!

● இரணியன்

www.padippakam.com

## ஈழப்போர்

# சிங்களப் பேரினவாதத்தின் பலமுனைத் தோல்வி

**நா**ன்காவது ஈழப்போர் நாளும் கடுமையாகி வருகிறது. மோதிக் கொள்ளும் இரு தரப்பாகிய தமிழீழ விடுதலைப் புலிகளாகட்டும், சிங்களப் பாசிச பேரினவாத அரசாகட்டும் இரண்டு தரப்புமே உரிமை பாராட்டிக் கொள்வதைப் போல எத்தரப்புக்கும் முழு சாதகமாகப் போரின் போக்கு இல்லை என்பதுதான் உண்மை.

யாழ்குடா நாட்டை இலங்கைத் தீவின் பிற பகுதியுடன் இணைக்கும் ஏ-9 நெடுஞ்சாலையை மூடியதன் மூலம், ஈழத் தமிழர்களுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் பேரடி கொடுத்துவிட்டதாக சிங்கள பாசிச அரசு எக்காளமிட்டுக் கொண்டிருக்கிறது. இது ஒருபுறம் என்றால், இலங்கை விமானப் படைத் தளத்தின் மீது வான்வழித் தாக்குதல் நடத்தியதன் மூலம், அந்நாட்டின் ஒரே சர்வதேச விமான நிலையமான பண்டாரநாயகா சர்வதேச விமான நிலையத்தின் இரவுச் சேவைகளை மூடிவிடும்படி செய்ததில் தமிழீழ விடுதலைப் புலிகள் குறிப்பிடத்தக்க வெற்றியை ஈட்டியுள்ளனர்.

சிங்கள பாசிச இராணுவம் தொடர்ந்து நடத்தி வந்த வான்வழித் தாக்குதல்கள் - குண்டு வீச்சுக்கள்; தமிழீழ விடுதலைப் புலிகளின் கொரில்லாத் தாக்குதல்கள் மற்றும் அரசியல் அழித்தொழிப்புகள்; இரண்டாவது ஜெனிவா பேச்சுவார்த்தைகள் கடந்த அக்டோபரில் முறிந்து போனது; ''யுத்தம் மற்றும் சமாதானம் என்ற சிங்களவரின் இரட்டை நாடகம் காரணமாக அரசியல் விடுதலைக்காகப் போரிடுவதைத் தவிர தமிழர்களுக்கு வேறு வழியில்லாமல் செய்துவிட்டது'' என்று விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் கடந்த அக்டோபர் தியாகிகள் தினத்தில் பிரகடனம் செய்தது; ஏற்கெனவே போருக்கான முடிவிலும் தயாரிப்பிலும் இருந்த சிங்கள பாசிச இனவெறி அதிபர் ராஜபக்சே, பிரபாகரனின் பேச்சைச் சாக்குவைத்து, புலிகள் அமைப்பை இராணுவ ரீதியில் நிலைகுலையச் செய்யாமல் இலங்கையில் சமாதானமோ முன்னேற்றமோ ஏற்படாது என்று அறிவித்தது — இவையெல்லாம் தற்போதைய நான்காவது ஈழப் போருக்கு பின்னணியாக அமைந்தவை.

ஈழப்போர் தாழ்ந்த நிலையில் நடந்து வந்தபோதே, அது ஏற்படுத்தியிருந்த பாதிப்புகள் - ஈழத்தமிழர்களின் துயரங்கள் எண்ணிலடங்காதவையாகி விட்டன. இலங்கை அமைதிக் கண்காணிப்புக் குழுவின் மதிப்பீட்டின்படி கடந்த பிப்ரவரி 2007 வரையிலான 15 மாதங்களில் மட்டும் 4000 பேர் கொல்லப்பட்டிருக்கின்றனர். 2004 சுனாமி பாதிப்பும் சேர்ந்து ஒரு பத்து இலட்சம் பேர் அகதிகளாக்கப்பட்டிருக்கின்றனர் என்று ஐ.நா சபை மற்றும் பிற சர்வதேச முகமை அமைப்புகள் கூறுகின்றன. சிங்கள இனவெறி பாசிச அரசு விதித்திருக்கும் பொருளாதாரத் தடைகள் காரணமாக உணவு, மருந்து மற்றும் பிற இன்றியமையாத் தேவைகள் கிடைக்காமல் ஈழமக்கள் பட்டினியாலும் நோயாலும் மடிவது அதிகரித்துக் கொண்டே போகிறது.

கடந்த ஜூலை 19-ந் தேதி ஈழத்தின் கிழக்கு மாகாணத்திலுள்ள தொப்பிக்கலை குன்றில் இலங்கையின் சிறப்பு அதிரடிப்படையினர், சிங்கள அரசின் கொடியை ஏற்றி வைத்தனர். அதன்மூலம் கிழக்கு மாகாணம் முழுமையையும் தமிழீழ விடுதலைப் புலிகளிடமிருந்து கைப்பற்றி விட்டதாகப் பிரகடனம் செய்தனர்.

**விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்த தொப்பிக்கலை குன்றைக் கைப்பற்றியதைக் கொண்டாடும் சிங்கள இனவெறி இராணுவம்.**



இதைக் கொண்டாடும் விதமாக, இலங்கையின் சுதந்திர தின விழாவுக்கு இணையாக ஜூலை 19-ந் தேதி குதூகலமான இராணுவ அணிவகுப்புடன் கூடிய அரசு விழாவொன்றை கொழும்பு நகரில் சிங்கள பாசிச பேரினவாத அரசு நடத்தியது. தமிழீழ விடுதலைப் புலிகளிடமிருந்து கிழக்கு மாகாணத்தைக் கைப்பற்றியதைக் குறிக்கும் பட்டயம் ஒன்றை இலங்கை அதிபர் ராஜபக்சேவிடம் முப்படைத் தளபதிகள் அளித்தனர். இந்தியா உட்பட இலங்கையின் நட்பு நாடுகளுடைய சிறப்பு அரசுப் பிரதிநிதிகள் இந்த விழாவுக்கு அழைக்கப்பட்டிருந்தனர்.

உண்மையில் இந்த விழாவானது சிங்கள பாசிச பேரினவாத அரசின் பலமுனைத் தோல்

www.padippakam.com

விகளையும் நெருக்கடிகளையும் மூடி மறைப்பதற்கும், சிங்கள மக்களுடைய கவனத்தையும் கூடத் திசை திருப்புவதற்கான ஒரு ஏற்பாடுதான். இலங்கை அரசின் நிதி ஆதாரங்கள் அனைத்தும் ஆயுதக் குவிப்புக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கெதிரான போருக்கும் திருப்பி விடப்பட்டுள்ள நிலையில் பணவீக்கமும், விலைவாசியேற்றமும் இலங்கைப் பொருளாதாரத்தை அதலபாதாளத்துக்குள் வீழ்த்திவிட்டது.



விடுதலைப் புலிகளின் வான்படையைச் சேர்ந்த வீரர்களுடன் பிரபாகரன்.

30 சதவீதமான இலங்கையின் அன்னியச் செலாவணி வருவாயை சுற்றுலாத் தொழில் மூலமே பெற்று வந்தனர். ஆனால், போர் மூண்ட பிறகு, குறிப்பாக கொழும்பு மீதான புலிகளின் வான்வழித் தாக்குதலைத் தொடர்ந்து, பண்டாரநாயக சர்வதேச விமான நிலையத்தின் இரவுச் சேவைகள் நிறுத்தப்பட்ட பிறகு, இலங்கையின் சுற்றுலாத் தொழில் ஏறக்குறைய முற்றிலும் முடங்கிப் போய்விட்டது. பிரபலமான பிரமுகர்கள், தொழில் குடும்பங்களைச் சேர்ந்தவர்களை பணயக் கைதிகளாகப் பிடித்து வைத்துப் பணம் பறிப்பது சிங்கள பாசிசத் துணை இராணுவப் படைகள் மற்றும் இரகசிய உலகக் குற்றக் கும்பல்களின் முக்கியத் தொழிலானது. ஆரம்பத்தில் தென்னிலங்கையில் வாழும் தமிழர் குடும்பங்களைச் சேர்ந்தவர்களையும், பிறகு இசுலாமியக் குடும்பத்தினரையும் பணயக் கைதிகளாகக் கடத்துவதும், தொடர்ந்து சிங்களக் குடும்பங்கள் பலியாவதும் என்றும் விரிவடைந்தது. இதனால் முக்கியத் தொழில் குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் நாட்டைவிட்டு ஓடுவது அதிகரித்துள்ளது.

இப்படி பணயப் பணத்துக்காக ஆட்களைக் கடத்துவதும், இளைஞர்கள் காணாமல் (!) போவதும் - கடத்திப் படுகொலை செய்யப்படுவதும் பல ஆயிரங்களாகிவிட்டது என்று அரசு சாரா சேவை அமைப்புகளே புகார்கள் கூறுகின்றன. செய்தி ஊடக சுதந்திர அளவுக் குறியீட்டில் 2002-ஆம் ஆண்டு 55-வது இடத்தில் இருந்த இலங்கை, கடந்த ஐந்தாண்டுகளில் அதாவது 2007-ஆம் ஆண்டில் 145-வது இடத்துக்குச் சரிந்தது. தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிரான இராணுவ ரீதியிலான ''வெற்றி'' இலங்கையில் அமைதியையும், முன்னேற்றத்தையும் கொண்டு வந்து விடும் என்ற ராஜபக்சே அரசின் ''கனவு'' பொய்த்து வருவதையே மேற்கண்ட விவரங்கள் காட்டுகின்றன.


இலங்கையில் தொடரும் மனித உரிமை மீறல்கள், உலகின் பல நாட்டு மனித உரிமை அமைப்புகளின் கடும் கண்டனத்துக்குள்ளாகியுள்ளது. உலக அரங்கில் தன்னை நியாயப்படுத்திக் கொள்வதற்காக ராஜபக்சே அரசு, இந்தியாவின் முன்னாள் தலைமை நீதிபதி பி.என்.பகவதி தலைமையில் இலங்கையில் மனித உரிமை மீறல்களை விசாரிக்க ஒரு சர்வதேச ஆணையம் நியமித்தது. அதன் விசாரணை ராஜபக்சே அரசுக்கு எதிராகப் போனபோது, அரசு பொது வழக்கறிஞரை விட்டு அந்த ஆணையத்துக்கு கடும் எதிர்ப்பு காட்டி அதையும் செயலிழக்கச் செய்துவிட்டது.

ஈழத்தின் கிழக்கு மாகாணத்தைப் புலிகளிடமிருந்து கைப்பற்றி இருப்பதுகூட, சிங்கள பாசிச அரசு பீற்றிக் கொள்வதைப்போல இராணுவ ரீதியிலான பெரும் வெற்றி என்று கூறிவிட முடியாது. கிழக்கைப் பொருத்தவரை, மட்டக்களப்பை அடுத்துள்ள எழுவன்கரை பகுதி பெரும்பாலும் இலங்கை அரசின் கட்டுப்பாட்டில் தான் இருந்து வந்திருக்கிறது. இந்தப் பகுதி பெரும்பாலும் தமிழ் மற்றும் இசுலாமிய மக்கள் வாழும் கிராமங்களைப் பரவலாகக் கொண்டிருக்கிறது. மட்டக்களப்பு நீர்ப் பரப்புக்கு மேற்கில் பெரும்பாலும் தமிழர்கள் வாழும் கிராமங்களைக் கொண்ட படுவன் கரைப் பகுதிகள் பெரும்பாலும் புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்து வந்திருக்கிறது.

ஆகவே, கிழக்கு மாகாணம் யாருடைய கட்டுப்பாட்டில் இருப்பது என்பது புலிகளின் நோக்கத்தைவிட, சிங்களப் பேரினவாத அரசாங்கத்தின் இராணுவப் போர்த் தந்திர மாற்றங்களுக்கு ஏற்பவே அமைந்திருக்கிறது. ஜெயவர்த்தனே மற்றும் பிரேமதாசா ஆகிய ஐக்கிய தேசியக் கட்சியின் அதிபர்கள் அதிகாரத்திலிருந்தவரை, கலவையான மக்களைக் கொண்டுள்ள கிழக்கைத் தமது கட்டுப்பாட்டில் வைத்திருப்பதன் மூலம் தமிழீழத்துக்கான புலிகளின் உரிமையை மறுக்கும் முகமாக அவர்கள் இலங்கையின் 42 சதவீத இராணுவ வலிமையை கிழக்கு மாகாணத்தில் குவித்து வைத்திருந்தனர். இதனால் வடக்கு மாகாணத்தைப் பெரும்பாலும் தனது கட்டுப்பாட்டில் வைத்துக் கொள்ளவும் கிழக்கின் வனப் பகுதிகளையும் அவற்றை ஒட்டியுள்ள தமிழர் பெரும்பான்மையாக வாழும் பகுதிகளையும் மட்டுமே புலிகள் தம் கட்டுப்பாட்டில் வைத்திருந்தனர்.

சந்திரிகா குமாரதுங்கா அதிபரான பிறகு, முதற்கட்டமாக முன்னெடுக்கப்பட்ட சமாதான முயற்சிகள் முறிந்ததைத் தொடர்ந்து, 1995-இல் சிறீலங்கா சுதந்திரக் கட்சி அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான போர் மூண்டபோது சிங்கள இராணுவப் போர் உத்தி மாறியது. கிழக்கிலிருந்து இராணுவம் பின்வாங்கப்பட்டு, வடக்கு மாகாணத்தில் புலிகள் மீது

www.padippakam.com



முத்தூர் பகுதியில் இருந்து வெளியேறிய ஈழத் தமிழர்கள் ''வாழும்'' கந்தலீ அகதி முகாம்.

கடும் தாக்குதல் ஒருமுகப்படுத்தப்பட்டது. புலிகளை இராணுவ ரீதியில் பல வீனப்படுத்தி ஈழத்தமிழர்களுக்குப் பாதகமான அதிகாரப் பகிர்வுத் தீர்வைத் திணிக்கும் நோக்கில் அந்தப் படையெடுப்பு நடத்தப்பட்டது. யாழ் தீபகற்பப் பகுதியையும் வடக்கு வன்னியின் சில பகுதிகளையும் கைப்பற்றுவதில் சந்திரிகா அரசாங்கம் ஓரளவு வெற்றி பெற்றது.

என்றாலும், கிழக்கில் ஏற்பட்ட வெற்றிடத்தைப் பயன்படுத்திக் கொண்ட விடுதலைப் புலிகள், சிங்கள இராணுவத்தின் பாரிய எதிர்ப்பு எதுவுமின்றி கிழக்கின் பெரும்பகுதியை எளிதில் கைப்பற்றிக் கொண்டனர். பிறகு இந்த வெற்றியை உறுதிப்படுத்திக் கொண்டு, ஆயுதங்களையும் படைகளையும் குவித்து யானையிறவு உட்பட பல போர்களில் போர்த்தந்திர முக்கியத்துவமுடைய வெற்றிகளைப் புலிகள் ஈட்டினர். போரில் சந்திரிகா தலைமையிலான அரசாங்கம் தோல்விகளை சந்திக்க நேர்ந்ததோடு தென்னிலங்கையில் அது பின்னடைவுகளைக் கண்டது; நாடாளுமன்றத்தில் ஐக்கிய தேசியக் கட்சிக் கூட்டணி பெரும்பான்மை பெற்று, ரணில் விக்கிரமசிங்கே பிரதமரானார். அவருடன் சமாதான முன்னெடுப்புகள் மீண்டும் துவங்கியபோது, அதிபர் சந்திரிகா தலையிட்டு அம்முயற்சிகளைச் சிதைத்து, மீண்டும் சிங்களபேரின வெறி தலைவிரித்தாடிய போது, ராஜபக்சே தலைமையிலான கூட்டணி அதிபர் மற்றும் நாடாளுமன்ற தேர்தல்களில் வெற்றி பெற்றது.

கடந்த ஆண்டு ஜூலையில் ராஜபக்சே அரசாங்கம், கிழக்கைக் கைப்பற்றுவது என்ற பழைய இராணுவ போர்த்தந்திரத்தை முன்வைத்து அறிவிக்கப்படாத போரைத் தொடுத்தது. சிங்கள இராணுவத் தளபதி சரத் பொன்சேகா மீதான புலிகளின் தற்கொலை கொரில்லாத் தாக்குதலைச் சாக்கு வைத்து சம்பூர், முத்தூர் பகுதிகள் மீது விமானக் குண்டு வீச்சுகள் நடத்தி, அங்கு வாழ்ந்த மக்கள் அகதிகளாக விரட்டப்பட்டனர். பிறகு மாவிலாறு அணையை மீட்பது என்கிற முகாந்திரத்தை முன்வைத்து அமைதிக் குழு மீதே சிங்கள இராணுவம் குண்டுமாறிப் பொழிந்தது. ஆரம்பத்தில் கடும் எதிர்ப்புக் காட்டிய விடுதலைப் புலிகள் செயல் தந்திர ரீதியிலான பின்வாங்குதல் செய்தபிறகு சாம்பூர், வாகரை, படுவன்கரை மற்றும் இறுதியாக தொப்பிக்கலையை சிங்கள இராணுவம் கைப்பற்றிக் கொண்டது. இந்தப் போரில், புலிகளிடமிருந்து பிரிந்துபோன கருணா தலைமையிலான ''துரோக''ப் படை சிங்கள இராணுவத்துக்குப் பெருந்துணையாக இருந்தது முக்கியமானதாகும்.

கிழக்கு மாகாணத்தைக் கைப்பற்றியாகிவிட்டது. இனி வடக்கில் இராணுவத்தைக் குவித்து தாக்குதலை ஒருமுகப்படுத்திப் புலிகளைப் பலவீனப்படுத்தி விடலாம் என்று சிங்கள பாசிச அரசு மனப்பால் குடிக்கிறது. அதோடு இந்தியாவிலுள்ள மாவட்ட கவுன்சில் அளவுக்கான பஞ்சாயத்து அமைப்புகளை உருவாக்கி பெயரளவுக்கான அதிகாரப் பகிர்வு என்ற தீர்வை ராஜபக்சே அரசு முன் தள்ளுகிறது. இந்த இரு திட்டங்களுமே ஒருபோதும் பலிக்கப் போவதில்லை. நூற்றுக்கணக்கான கொரில்லாப் படையினரை கிழக்கில் பிரித்து ஒதுக்கி இருக்கும் விடுதலைப் புலிகள், வடக்கில் சிங்களப் படைகளை முன்னேற விடாமல் தாக்கி வருகின்றனர். தரையிலும் கடலிலும் கடும்போர் நடத்தும் புலிகள், இப்போது வான்வழித் தாக்குதலுக்குமான பலத்தைப் பெற்றுள்ளனர் என்பது முக்கியமானது.

ஆனாலும், சிங்கள பாசிச பேரினவாத அரசு அமெரிக்கா, இந்தியா உட்பட ஏகாதிபத்திய, துணை வல்லரசு ஆதரவைப் பெற்றுள்ளது. அந்நாடுகள் நவீன ஆயுதங்களைக் கொடுத்து சிங்கள பாசிச இராணுவத்துக்கு முட்டுக் கொடுத்து வருகின்றன. இந்திய அரசிடம் நயந்து பேசி, சமரசம் செய்து கொள்ளும் புலிகளின் உத்தி சிறிதும் வெற்றி பெறாத நிலையில், புலிகளின் ஆதரவாளர்கள் இப்போதுதான் இந்தியாவின் ஈழத்தமிழர் விரோதச் செயல்களை ஓரளவு வெளிப்படையாக விமர்சிக்கத் தொடங்கியுள்ளனர்.

சிங்கள பாசிச பேரினவாத அரசு புலிகளை இராணுவ ரீதியில் வெல்வது சாத்தியமில்லாமலிருக்கும் அதேசமயம், புலிகளும் ஈழ விடுதலையை போர் மூலம் சாதிப்பது என்ற தங்கள் உத்திக்கு சர்வதேச ஆதரவைப் பெறமுடியாமலேயே இருக்கின்றனர். ஒன்றுபட்ட இலங்கையைத் தமது ஆதிக்கத்தின் கீழ் வைத்திருப்பதையே அமெரிக்கா, இந்தியா உட்பட பிற நாடுகள் விரும்புகின்றன. தமது தலைமையிலான தமிழீழம் இந்த நாடுகளுக்குக் கீழ்ப்படிந்தே இருக்கும் என்ற புலிகளின் வாக்குறுதியை அவை ஏற்க மறுக்கின்றன. இத்தகைய பாதகமான நிலையை எதிர்கொள்வதற்கான சரியான அரசியல், இராணுவ உத்திகள் புலிகளிடமில்லை என்பதுதான் உண்மையாகும். விடுதலைப் புலிகள் தமது பாசிச நடவடிக்கைகளால் ஈழத் தமிழர்களின் ஒருமித்த ஆதரவைப் பெற முடியாமல் போனதோடு, புலம் பெயர்ந்த தமிழர்களின் ஆதரவையும் இழந்துள்ளனர். ஆயுதங்களையும், உலகின் பிற்போக்கு அரசுகளின் ஆதரவைப் பெறமுடியும் என்ற நம்பிக்கையையும் வைத்து எந்த விடுதலைப் போரும் வெல்ல முடியாது என்பதற்குப் புலிகள் இயக்கம் தக்க சான்றாக விளங்குகிறது.

● ஆர்.கே.

www.padippakam.com

# கோத்ரா ரயில் எரிப்பு வழக்கு:

# விசாரணையே தண்டனை

குஜராத் மாநிலம் - கோத்ரா தொடர் வண்டி நிலையத்தில் பிப்.27, 2002 அன்று சபர்மதி விரைவு வண்டியின் ''எஸ்-6'' பெட்டி எரிந்து போனதையும்; அத் தீ விபத்தில் 58 பேர் இறந்து போனதையும், ''உள்ளூர் முசுலீம் மதவெறியர்கள் நடத்திய பயங்கரவாதத் தாக்குதல்''; ''ராம பக்தர்களைக் கொல்ல பாக். உதவியுடன் நடத்தப்பட்ட சதி'' என இந்து மதவெறிக் கும்பல் ஊதிப் பெருக்கியது. ஆனால், இச்சம்பவம் குறித்து நடந்து வரும் விசாரணையில், குஜராத் முசுலீம்கள் மீது இனவெறிப் படுகொலையை ஏவிவிடக் காத்திருந்த இந்து மதவெறிக் கும்பல், அதற்கொரு வாய்ப்பாகவே கோத்ரா சம்பவத்தைப் பயன்படுத்திக் கொண்டது என்ற உண்மை சட்டபூர்வமாகவே அம்பலமாகி வருகிறது.

''கோத்ராவைச் சேர்ந்த முசுலீம் தீவிரவாதிகள், 60 லிட்டர் பெட்ரோலை வெளியே இருந்து எஸ்-6 பெட்டிக்குள் ஊற்றி, அதற்குத் தீ வைத்தனர்'' என்பதுதான் இச்சம்பவம் பற்றி இந்து மதவெறிக் கும்பல் - குஜராத் போலீசு கூட்டணியின் முதல் புலனாய்வுக் கண்டுபிடிப்பு.

இக்கண்டுபிடிப்பை குஜராத் மாநிலத் தடய அறிவியல் துறை கூட ஏற்றுக் கொள்ளவில்லை. அத்துறையைச் சேர்ந்த அதிகாரிகள் இச்சம்பவம் பற்றி அளித்த இரண்டு அறிக்கைகளுள் முதலாவது அறிக்கை, ''தீப்பற்றிய விதம், அது பரவிய முறை, எரிந்த தன்மை இவற்றை ஆராய்ந்து பார்க்கும்போது, உள்ளுக்குள் இருந்துதான் தீயைப் பற்ற வைத்திருக்க முடியும்'' எனக் குறிப்பிட்டுள்ளது.

இரண்டாவது அறிக்கை, ''ரயில் வண்டியின் ஜன்னல் தரைமட்டத்தில் இருந்து சுமார் 7 அடி உயரம் உள்ளது. எனவே, வெளியில் இருந்து எரிபொருளை ரயிலுக்குள் ஊற்ற முடியாது. எரிபொருள் திரவம் வெளியில் இருந்து ஊற்றப்பட்டிருந்தால், பெட்டியின் வெளியில் இருக்கும் அடிப்பாகமும் எரிந்திருக்கும். ஆனால், அடிப்பாகம் எரியாததால், எரிபொருள் வெளியே இருந்து ஊற்றப்படவில்லை என்பது உறுதி'' எனக் குறிப்பிட்டது.

இதுவொருபுறமிருக்க, ''முசுலீம் தீவிரவாதிகள்'' பெட்ரோல் வாங்கியதாகச் சொல்லப்பட்ட பெட்ரோல் நிலையத்தைச் சேர்ந்த பிரபாத் சிங் மற்றும் ரஞ்சித் சிங் என்ற இரு ஊழியர்கள், ''தங்களிடமிருந்து பெட்ரோல் வாங்கப்படவில்லை'' என ஒப்புதல் வாக்குமூலம் அளித்துள்ளனர்.

இந்து மதவெறிக் கும்பலின் முதல் ''கண்டுபிடிப்பு'' புஸ்வானமாகிப் போனபிறகு, ''எஸ்-6 மற்றும் எஸ்-7 பெட்டிகளை இணைக்கும் இணைப்பை (Vestibule) கிழித்துவிட்டு, எஸ்-6 பெட்டிக்குள் நுழைந்த தீவிரவாதிகள், திரவ எரிபொருளை கீழே கொட்டிவிட்டு, அதன்பின் வெளியே இறங்கிப் போய் தீ வைத்ததாக'' இரண்டாவது கண்டுபிடிப்பை வெளியிட்டனர். இதற்கு ஏற்றாற்போல, கோத்ரா ரயில் எரிப்பு சம்பவம் பற்றிய முதல் தகவல் அறிக்கையும் திருத்தப்பட்டது.

கோத்ரா சம்பவம் பற்றி விசாரணை நடத்திவரும் கே.ஜி.ஷா - நானாவதி கமிசன் முன்பு சாட்சியம் அளித்துள்ள பூபத் பாய் என்ற பயணி, ''வெளியில் இருந்த கும்பலில் இருந்து எவரும் ரயில் பெட்டிக்குள் ஏறியதை நான் பார்க்க வில்லை'' எனக் கூறியுள்ளார்.

துவாரகா பாய் என்ற பயணி, ''நான் தப்பித்து வெளியேறும்வரை... எத்தகைய திரவப் பொருளும் உள்ளே வீசப்பட்டதை நான் பார்க்கவில்லை. யாரும் எந்த நபரும் எத்தகைய திரவத்தையும் தெளிப்பதையோ அல்லது பெட்டியைக் கொளுத்துவதையோ நான் பார்க்கவில்லை'' எனச் சாட்சியம் அளித்துள்ளார்.

டி.என். திவிவேதி என்ற பயணி, பெட்டியின் இடதுபுற மேல்பாகத்தில் இருந்துதான் கரும்புகை எழுந்து தீப்பிடித்ததாகக் கூறியிருக்கிறார்.

எஸ்-6 பெட்டி தீக்கிரையானதைப் பற்றி விசாரிக்க ரயில்வே அமைச்சகத்தால் நியமிக்கப்பட்ட பானர்ஜி கமிசன், தனது இடைக்கால அறிக்கையில், ''அரி பிரசாத் ஜோஷி என்ற பயணி பெட்டியின் பின்பக்கம் வழியாக இருக்கை எண் 72 அருகில் இருந்து வெளியே இறங்கியிருக்கிறார். இருக்கை எண் 72 அருகே உள்ள ரயிலின் தரை தளத்தில் பெட்ரோல் வீசப்பட்டு அதன் காரணமாகத் தீ பற்றியிருந்தால், அந்தப் பகுதியில் இருந்து ஜோஷி

நீதி கிடைக்கும் என்ற நம்பிக்கையில் காலத்தை ஓட்டும் கோத்ரா வழக்கில் குற்றம் சாட்டப்பட்டுள்ளவர்களின் உறவினர்கள்.



www.padippakam.com

உயிர் தப்பியிருக்க முடியாது'' எனக் குறிப்பிட்டுள்ளது.

பானர்ஜி கமிசன் விசாரணைக்கு உதவி புரிந்த துனுராய், பேரா. தினேஷ் மோகன் என்ற இரு தொழில் நுட்ப வல்லுனர்கள், ''எஸ்-6 மற்றும் எஸ்-7-க்கு இடையே உள்ள இணைப்பு இரும்புச் சுவரால் ஆனது மட்டுமன்று; இது, ''நியோபிரீன் ரப்பர்'' என்ற பொருளால் நிரப்பப்பட்டது. எனவே, இதனை உடைப்பதோ வெட்டி வழி ஏற்படுத்துவதோ சற்றும் இயலாத காரியமாகும்'' எனச் சான்று அளித்துள்ளனர்.

இந்து மதவெறியர்கள் கூறுகிறபடி முசுலீம்கள் பெட்டிக்கு வெளியில் இருந்தோ, அல்லது பெட்டிக்குள் நுழைந்தோ பெட்ரோல் போன்ற திரவ எரிபொருளைக் கொட்டியிருந்தால் உடனடியாக தீப்பற்றியிருக்கும். ஆனால், நானாவதி - ஷா கமிசனிலும், பானர்ஜி கமிசனிலும், சாட்சியம் அளித்துள்ள பயணிகள், ''முதலில் மூச்சு முட்டும் அளவிற்குக் கரும் புகை வந்தது; அதன்பின் சில நிமிடங்கள் கழித்துதான் நெருப்பு எரிந்ததாக''ச் சாட்சியம் அளித்துள்ளனர்.

சம்பவம் நடந்த அன்று எஸ்-6 பெட்டியில் பயணம் செய்தவர்களுள் பெரும்பாலானோர் குஜராத் மாநில விசுவ இந்து பரிசத்தின் ஆதரவாளர்கள்தான். இது, பயணிகள் முதன்பதிவு பட்டியலின் மூலமும்; முன்பதிவு செய்து எஸ்-6 பெட்டியில் பயணம் செய்த 52 பயணிகளில் 41 பேர் உயிர் பிழைத்திருப்பதை வைத்தும் நிரூபிக்கப்பட்டுள்ளது.

எஸ்-6 பெட்டியில் பயணம் செய்த விசுவ இந்து பரிசத்தின் ஆதரவாளர்கள் அனைவரும் கையில் திரிசூலத்தை வைத்துக் கொண்டு இருந்துள்ளனர். எனவே, இப்படிப்பட்ட நிலையில், ''எவ்வித எதிர்ப்பு இன்றி சிலர் பெட்டிக்குள் புகுந்து திரவ எரிபொருளைக் கொட்டியோ அல்லது திரவ எரி பொருளை ரயில் பெட்டிக்கு வெளியில் இருந்து விசிறி அடித்தோ தீ வைத்திருப்பார்கள் என்பது நம்ப முடியாததும், அபத்தமானதும் ஆகும்'' எனக் குறிப்பிட்டுள்ள பானர்ஜி கமிசன், எஸ்-6 பெட்டி தீக்கிரையானதை, ''ஒரு தற்செயலான தீ விபத்துதான்'' என முடிவு செய்து, இடைக்கால அறிக்கையை அளித்திருக்கிறது.

இச்சம்பவம் நடந்த சமயத்தில் குஜராத் மாநில போலீசுத் துறையின்



**குஜராத் இனப்படுகொலையின் பொழுது கொடூரமாகக் கொல்லப்பட்ட காங்கிரசு கட்சியின் முன்னாள் எம்.பி. அஹ்சான் ஜாஃப்ரியின் மனைவி ஜாகியா ஜாஃப்ரி, நரேந்திர மோடி உள்ளிட்ட 63 மேல் மட்டத்துக் குற்றவாளிகளை விசாரிக்கக் கோரி வழக்கு தொடுத்துள்ளார்.**

உளவுப் பிரிவில் கூடுதல் போலீசு இயக்குநராகப் பணி புரிந்து வந்த சிறீகுமார், நானாவதி - ஷா கமிசனிடம் தாக்கல் செய்த பிரமாண பத்திரத்தில், ''எந்தவிதமான ஆதாரங்கள் இல்லாத பொழுதும், கோத்ரா தீ விபத்திற்கு பாக். உளவு அமைப்பான ஐ.எஸ்.ஐ.யின் பின்புலம்தான் காரணமாக இருக்கும் என்பதை 'நிரூபிக்கும்' வகையிலேயே புலனாய்வு நடத்தப்பட வேண்டும் என மத்திய-மாநில அரசுகளிடமிருந்தும், மோடிக்கு நெருக்கமான அதிகாரிகளிடமிருந்தும் நெருக்குதல் வந்ததாக''க் குறிப்பிட்டுள்ளார்.

குஜராத் மாநில விசுவ இந்து பரிசத், நானாவதி கமிசனில் தாக்கல் செய்துள்ள பிரமாண பத்திரத்தில், எஸ்-6 பெட்டியை எரிக்க எளிதில் தீ பற்றக்கூடிய பொருட்கள் பயன்படுத்தப்பட்டது பற்றி ஒரு வார்த்தைக் கூட குறிப்பிடவில்லை.

குஜராத் மாநில செய்தித் தொடர்பாளர் நளின் பட், ''எளிதில் பற்றக்கூடிய பொருள் எதுவும் எஸ்-6 பெட்டிக்குள் வெளியில் இருந்து வீசப்பட்டதற்கான தகவல் எதுவும் தங்களின் சாட்சிகளிடம் இல்லை'' எனக் கூறியுள்ளார்.

கோத்ரா சம்பவம் தொடர்பாக உள்ளூரில் இருந்து பாகிஸ்தானுக்குத் தொடர்பு கொண்டதாகச் சொல்லி, 6 தொலைபேசி எண்களைக் குறிப்பிட்டிருந்தது, விசுவ இந்து பரிசத். இது தொடர்பாக நானாவதி கமிசனில் நடந்த குறுக்கு விசாரணையில், ஒரு தொலைபேசி எண் சூரத்தைச் சேர்ந்த கணேஷ் கன்ஸ்ட்ரக்ஷன் கம்பெனிக்கு உரிமையானது; மற்ற ஐந்து தொலைபேசி எண்ணும் உபயோகத்தில் இல்லாதவை என்பது நிரூபிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறாக, கோத்ரா சம்பவம் ''பாக். உதவியோடு உள்ளூர் முசுலீம்கள் நடத்திய பயங்கரவாதத் தாக்குதல்'' என்பதை நிரூபிக்க வலுவான ஆதாரங்கள் இல்லாதபொழுதும், எஸ்-6 ரயில் பெட்டி தீக்கிரையான வழக்கு, காலாவதியாகிப் போன ''பொடா'' சட்டத்தின் கீழ் நடந்து வருகிறது. நீதியை நிலை நாட்டுவது என்பதைவிட, சிறுபான்மையினரான முசுலீம் மக்களை நிரந்தரப் பீதியில் வைத்திருப்பதுதான் இந்த வழக்கின் நோக்கம் என்பதை விசாரணையின் போக்கே அம்பலமாக்கி வருகிறது.

கோத்ரா வழக்கில் 54-ஆவது குற்றவாளியாகச் சேர்க்கப்பட்டுள்ள இஷாக் முகம்மது பார்வையற்றவர். ''இஷாக் முகம்மது 100 சதவீதம் பார்வையற்றவர்'' என 1997-ஆம் ஆண்டே குஜராத் அரசு மருத்துவர்கள் சான்றிதழ் அளித்துள்ளனர். எனினும், இவ்வழக்கில் இவரைக் குற்றவாளியாகச் சேர்க்க வேண்டும் என்பதற்காகவே, கோத்ரா சம்பவம் நடந்த பிறகு, ''இஷாக் முகம்மது பார்வையற்றவர் என்ற பொழுதும், ஒரு மீட்டர் தொலைவிற்கு இவரால் பார்க்க முடியும் எனச் சான்றிதழ் பெறப்பட்டு இஷாக் முகம்மது சிறையில் தள்ளப்பட்டார். ''எஸ்-6 பெட்டிக்கு வெளியே கூடி நின்ற கும்பலில் இஷாக் முகம்மதுவும் இருந்தார்'' என்பதுதான் இவர் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டு. அதாவது 'வேடிக்கை பார்க்க' நின்ற குற்றத்திற்காக இவர் மீது ''பொடா'' பாய்ந்திருப்பதோடு, கடந்த ஐந்து ஆண்டுகளாக பிணையும் மறுக்கப்பட்டு வருகிறது.

சலீம் அப்துல் கலாம் பதாம் உள்ளிட்டு ஐந்து குற்றவாளிகள் கோத்ராவைச் சேர்ந்த திலீப் உஜ்ஜம்பாய் தசரியா என்ற பள்ளி ஆசிரியர் கொடுத்த வாக்குமூலத்தின் அடிப்படையில் கைது செய்யப்பட்டிருப்பதாக அரசு கூறி வருகிறது. ஆனால், அந்தப் பள்ளி ஆசிரியரோ, தான் அப்படிப்பட்ட எந்த சாட்சியமும் அளிக்கவில்லை என்றும்; சம்பவம் நடந்த அன்று, கோத்ராவில்

www.padippakam.com

இருந்து 25 கி.மீ. தள்ளியுள்ள ஊரில் தனது பள்ளியில் இருந்ததாகப் பிரமாண பத்திரம் தாக்கல் செய்திருப்பதோடு, அதற்கான ஆதாரங்களையும் நீதிமன்றத்திடம் கொடுத்திருக்கிறார். ஆனாலும் அந்த ஐந்து 'குற்றவாளிகள்' மீதான வழக்கைத் திரும்பப் பெற, மோடி அரசு மறுத்து வருகிறது.

முகம்மது அன்சார் குத்புதீன் அன்சாரி, பைதுல்லா காதர் தெலீ, ஃபெரோஸ்கான் குல்சார்கான் பத்தான், இஷாக் யூசுப் லுஹர் உள்ளிட்ட 20 பேர் மீது, கோத்ரா சம்பவம் தொடர்பாக எந்தப் புகாரும் இல்லாமலேயே, அவர்கள் அனைவரும் சம்பவம் நடந்த பிப். 27, 2002 அன்று காலை 9.30 மணிக்குக் கைது செய்யப்பட்டனர். இதற்குப் பிறகு இரண்டு நாட்கள் கழித்துதான் அவர்கள் மீதான புகார் பதிவு செய்யப்பட்டது.

கோத்ரா சம்பவம் தொடர்பாக குற்றம் சாட்டப்பட்டவர்களுள் 36 பேர், எஸ்-6 பெட்டி தீக்கிரையான அன்றுதான், மற்றொரு வழக்கில் இருந்த நிரபராதிகளாக விடுதலை செய்யப்பட்டனர். ''நீலம் தங்கும் விடுதி வழக்கு'' என்ற அந்த வழக்கில், இந்த 36 பேருக்கு எதிராக போலீசாரால் சாட்சிகளாக நிறுத்தப்பட்டவர்கள்தான், கோத்ரா வழக்கிலும் இவர்களுக்கு எதிராக புகாரும், சாட்சியமும் அளித்துள்ளனர். குஜராத் போலீசின் காவித்தனமான பழி தீர்த்துக் கொள்ளும் வெறிக்கு இதைவிட வேறென்ன ஆதாரம் வேண்டும்?

கோத்ராவைச் சேர்ந்த முசுலீம் மத குருதான், சம்பவம் நடப்பதற்கு முன்பாக, மசூதியின் மேலேறி நின்று, மத வெறியைக் கக்கும் விதமாக உரை நிகழ்த்தி, ராம பக்தர்களைத் தாக்கும்படி உள்ளூர் முசுலீம்களைத் தூண்டிவிட்டதாக குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. ஆனால், அந்த மதகுரு சம்பவம் நடந்த அன்று மகாராஷ்டிராவில் இருந்தார் என்பது நிரூபிக்கப்பட்ட பிறகும், அவர் மீதான சதி வழக்குத் திரும்பப் பெறப்படாததால், அவர் இன்றுவரை தலைமறைவாக இருந்து வருகிறார்.

கோத்ரா சம்பவத்திற்குப் பிறகு, ஆர்.எஸ்.எஸ். கும்பல் தலைமை தாங்கி நடத்திய இனப் படுகொலையால் பாதிக்கப்பட்ட முசுலீம்களுக்கு உதவி செய்வதில் முன்னணியில் நின்ற மௌலானா உமர்ஜி, ஹரூண் அபித், ஹருண் ரஷீத் ஆகிய முசுலீம் மதத் தன்னார்வ தொண்டர்களும், ரயில் பெட்டி எரிப்பு வழக்கில் சேர்க்கப்பட்டு,



**இனப்படுகொலை தொடர்பான வழக்குகளை நியாயமாக விசாரிக்கக் கோரி குஜராத் முசுலீம்கள் நடத்திய ஆர்ப்பாட்டம்.**

''பொடா''வின் கீழ் சிறையில் தள்ளப்பட்டனர். இதன் மூலம் அநாதரவான முசுலீம்கள் தங்களுக்குள்ளேயே உதவி செய்து கொள்வதைக் கூட வக்கிரமாகத் தடுக்க முனைந்தது, மோடி அரசு.

கோத்ரா சம்பவத்தில் குற்றம் சுமத்தப்பட்டுள்ள 135 பேரில், 22 பேர் தலைமறைவாகி விட்டனர். கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ள 100 பேரில் 16 பேருக்கு மட்டும் பிப்.14, 2003 அன்று குஜராத் மாநில உயர்நீதி மன்றம் பிணை வழங்கியது. மீதி பேருக்கு பிணை கிடைத்துவிடக் கூடாது எனக் கங்கணம் கட்டிக் கொண்ட மோடி அரசு, பிணை தீர்ப்பு வெளிவந்த ஐந்தாவது நாளே, இந்தியக் குற்றவியல் சட்டத்தின் கீழ் நடந்து வந்த கோத்ரா வழக்கை, சட்டவிரோதமான முறையில் ''பொடா'' வழக்காக மாற்றியது.

மைய அரசின் கீழ் அமைக்கப்பட்ட பொடா மறுஆய்வு கமிட்டி, கோத்ரா வழக்கை பொடா சட்டத்தின்கீழ் விசாரிக்கத் தேவையில்லை என மே-16, 2005 அன்றே கூறிவிட்டாலும், குஜராத் அரசும், ''பொடா'' சிறப்பு நீதிமன்றமும் இவ்வழக்கை இந்தியக் குற்றவியல் சட்டத்தின் கீழ் கொண்டு வர மறுத்து வருகின்றன. பொடா மறு ஆய்வு கமிட்டியின் முடிவை அம்பலப்படுத்த உத்தரவிட வேண்டும் எனக் கோரி உச்சநீதி மன்றத்தில் தொடுக்கப்பட்ட வழக்கு கூட, கடந்த இரண்டாண்டுகளாக விசாரணையின்றி தூசி படிந்து கிடக்கிறது.

குஜராத்தில், நடத்தப்பட்ட இனப்படுகொலைகளுக்குப் பிறகு, அகதி முகாம்களில் வசித்துவரும் முசுலீம்களுக்கு அடிப்படையான வசதிகளைச் செய்து தர வேண்டும் எனக் கோரி தொடுக்கப்பட்ட வழக்கில், குஜராத் உயர்நீதி மன்றம் அரசுக்கு எந்த உத்தரவும் இட மறுத்துவிட்டது. மாறாக, அகதி முகாம்களில் வசித்துவரும் ஒவ்வொரு முசுலீமுக்கும் கொடுக்கப்படும் தினப்படியை ஆறு ரூபாயில் இருந்து எட்டு ரூபாயாக உயர்த்திக் கொடுப்போம் என்ற வாக்குறுதியை அரசு வழக்குரைஞர் நீதிமன்றத்திடம் அளித்தால் போதும் எனக் கூறி, தனது 'கடமையை' முடித்துக் கொண்டது.

இப்படிப்பட்ட நீதிமன்றத்திடமிருந்து ''பொடா'' வழக்கின் கீழ் கைது செய்யப்பட்டுள்ள முசுலீம்களுக்கு; இனப்படுகொலையால் பாதிக்கப்பட்டுள்ள முசுலீம்களுக்கு நீதி கிடைத்துவிடும் என்று நம்ப முடியுமா? நரேந்திர மோடி, அவரது அமைச்சர்கள், பா.ஜ.க. சட்டமன்ற உறுப்பினர்கள், உயர் போலீசு அதிகாரிகள் உள்ளிட்ட 63 மேல்தட்டு குற்றவாளிகளும், பிற ஆர்.எஸ்.எஸ். பயங்கரவாதிகளும் தண்டிக்கப்பட்டு விடுவார்கள் என நாம் கையைக் கட்டிக் கொண்டு மௌனமாக இருந்துவிட முடியுமா?

**● செல்வம்**

www.padippakam.com

# விவசாயிகள் தற்கொலை: கந்துவட்டிக் கடன்தான் நிவாரணமா?

அமெரிக்காவில், அடித்தட்டு மக்களுக்கு வங்கிகள் மூலம் வீடு வாங்கக் கடன் கொடுப்பதை, துணைக் கடன் என அழைக்கிறார்கள். வாங்கும் சம்பளம் வாய்க்கும் வயிற்றுக்கும் பத்தாத அமெரிக்கர்களைக் கூட விட்டுவிடாமல், இந்தக் கடன் வலைக்குள் பிடித்துப் போடுவதை, அமெரிக்க வங்கிகளும், ''ஹெட்ஜ் ஃபண்டுகள்'' என அழைக்கப்படும் தனியார் முதலீட்டு நிறுவனங்களும் தீவிரமாக நடைமுறைப்படுத்தி வருகின்றன.

அமெரிக்காவில் துணைக் கடன் அதிக அளவில் வழங்கப்படுவதற்கு, வீடு இல்லாத அமெரிக்கக் குடிமகனே இருக்கக் கூடாது என்ற கொள்கைப் பற்றெல்லாம் காரணம் கிடையாது. இந்தத் துணைக் கடனுக்கு வசூலிக்கப்படும் வட்டி மிக அதிகம்; இந்தக் கடன் மூலம் தான் ''ரியல் எஸ்டேட்'' வியாபாரம் ''ஜாக்கி'' போட்டுத் தூக்கி நிறுத்தப்படுகிறது என்பவைதான் இதற்குப் பின்னுள்ள காரணங்கள்.

அமெரிக்க வங்கிகள், ஹெட்ஜ் ஃபண்டுகள், ரியல் எஸ்டேட் நிறுவனங்கள் கூட்டுச் சேர்ந்து நடத்தி வந்த இந்தச் சூதாட்டத்தின் விளைவாக, வங்கிகளில் வாராக் கடன் அதிகமாகி, இரண்டு மாதங்களுக்கு முன்பு அமெரிக்காவின் நிதிச் சந்தையில் திடீர் நெருக்கடி ஏற்பட்டது. இதனால் பங்குச் சந்தை வர்த்தகம் சரிந்ததோடு, பல ''பிளேடு'' (மோசடி) கம்பெனிகளும் அமெரிக்க வங்கிகளும் திவாலாகி விடுமோ என்ற பீதி முதலாளித்துவ உலகத்தைப் பிடித்தாட்டியது.

இந்த நெருக்கடி அமெரிக்காவை மட்டும் பாதிக்கவில்லை; ஐரோப்பிய நாடுகள், இந்தியா எனத் தாராளமயத்தைத் தீவிரமாக அமல்படுத்தும் அனைத்து நாடுகளிலும் எதிரொலித்தது. ''சில்லறைக் கடன் வழங்குவதைத் தீவிரமாக நடைமுறைப்படுத்திவரும் இந்திய வங்கிகள், அமெரிக்க நெருடிக்கடியில் இருந்து பாடம் கற்றுக் கொள்ள வேண்டும்'' எனப் பொருளாதார நிபுணர்கள் எச்சரிக்கையும் விடுத்தனர்.

கார், இரு சக்கர வாகனங்கள் போன்ற ஆடம்பர நுகர்பொருட்களை வாங்கத் தரப்படும் தனிநபர் கடன், ரியல் எஸ்டேட் மற்றும் பங்குச் சந்தை வியாபாரம் ஆகியவற்றுக்காக இந்திய வங்கிகள் அளித்த கடன் 2005-இல் 1,63,831 கோடி ரூபாயாகும்; இது, 2006-இல் 2,86,691 கோடி ரூபாயாக அதிகரித்திருக்கிறது.

இந்தியாவில் சில்லறைக் கடனுக்காக அதிகபட்சம் 55 சதவீதம் வரை வட்டி வசூலிக்கப்படுவதால், தனியார் வர்த்தக வங்கிகள் மட்டுமல்லாது, பொதுத்துறை வங்கிகளும் போட்டி போட்டுக் கொண்டு சில்லறைக் கடன் வழங்குவதில், தங்களின் சேமிப்பைக் கொட்டுகின்றன. ஐ.சி.ஐ.சி.ஐ. என்ற தனியார் வங்கி, 2006-இல் வழங்கிய மொத்தக் கடனில் 65 சதவீதமும்; பஞ்சாப் செஞ்சூரியன் வங்கி 68 சதவீதமும்; பொதுத்துறை வங்கியான இந்திய அரசு வங்கி 21.2 சதவீதமும்; பஞ்சாப் தேசிய வங்கி 22.7 சதவீதமும் சில்லறைக் கடனாக வழங்கியுள்ளன.

''இந்தச் சில்லறைக் கடன் கடிவாளம் இல்லாமல் வீங்கிக் கொண்டே போனால், நிதித் தட்டுப்பாடு ஏற்பட்டு, வட்டி வீதம் உயர்ந்துவிடும்'' எனப் பொருளாதார நிபுணர்கள் அச்சப்படுகின்றனர். எனவே, அமெரிக்காவின் நெருக்கடிக்குப் பிறகு, சிறு தொழிலுக்கும், விவசாயத்திற்கும், உற்பத்தித் துறைக்கும் கடன் வழங்குவதை வங்கிகள் அதிகரிக்க வேண்டும் என உபதேசிக்கத் தொடங்கியுள்ளனர்.

**பருத்தி விவசாயம் செய்து, தான் அடைந்த 'பலனாக', ரூ. 99,000/- கடன் வாங்கியதற்கான பத்திரத்தையும், ரூ. 14,870/-க்கான மின் கட்டண பில்லையும் காட்டும் விதர்பா பகுதி வாய்ஃபட் கிராம விவசாயி.**



2006-ஆம் ஆண்டு பட்ஜெட்டில் 1,90,000 கோடி ரூபாயும்; 2007-ஆம் ஆண்டு பட்ஜெட்டில் 2,25,000 கோடி ரூபாயும் பொதுத்துறை வங்கிகள் மூலம் விவசாயிகளுக்குக் கடனாக வழங்கப்படும் எனக் கூறப்பட்டாலும், 87 சதவீத நடுத்தர விவசாயிகளுக்கும், 70 சதவீத சிறு விவசாயிகளுக்கும் கூட்டுறவுக் கடன் கிடைப்பதில்லை என உலக வங்கியே ஒப்புக் கொண்டுள்ளது.


1993-க்குப் பிறகு நாடெங்கிலும் ஏறத்தாழ 1,12,000 விவசாயிகள் தற்கொலை செய்து கொண்டுள்ளனர். இந்த அவலச் சாவுகள் பற்றி விசாரணை நடத்த நியமிக்கப்பட்ட கமிட்டிகள் கூட, ''விவசாயிகளுக்கு அரசு கடன் கிடைக்காமல் போவதும் தற்கொலைக்கு ஒரு காரணம்'' என ஒப்புக் கொண்டுள்ளன.

எனினும், போலி கம்யூனிஸ்டுகள் ஆதரவோடு நடக்கும் காங்கிரசு கூட்டணி ஆட்சி, விவசாயிகளின் அவலம் பற்றி முதலைக் கண்ணீர் தான் வடிக்கிறது. மகாராஷ்டிராவின் விதர்பா பகுதியில் கடந்த இரண்டு - மூன்று ஆண்டுகளில் ஆயிரக்கணக்கான பருத்தி விவசாயிகள் தற்கொலை செய்து கொண்டதையடுத்து, மைய அரசு 3,750 கோடி ரூபாய் பெறுமான நிவாரணத் திட்டத்தை அறிவித்தது. இதன்படி, 2007-08-இல் அப்பகுதி விவசாயிகளுக்கு வழங்கப்படும் வங்கிக் கடன் மூன்று மடங்காக அதிகரிக்கப்படும் (2,033 கோடி ரூபாய்) என்ற டாம்பீக அறிவிப்பும் வெளியிடப்பட்டது. ஆனால், நடைமுறையில் இது வெறும் காகிதத் திட்டம் என அம்பலமானது.

விதர்பா பகுதி விவசாயிகளுக்கு அரசு வங்கிகள் 2007-08 ஆம் ஆண்டிற்கு வழங்க ஒப்புக் கொண்டுள்ள கடன் அளவு, அவ்விவசாயிகள் 2006-07-இல் அரசு வங்கிகளுக்குத் திருப்பிச் செலுத்தியிருந்த அசலையும் வட்டியையும் விடக் குறைவானதாகும். விதர்பா பகுதியிலேயே தற்கொலைச் சாவுகள் அதிகமாக நடந்துள்ள யாவட்மால் பகுதி விவசாயிகளுக்கு

www.padippakam.com

வழங்க வேண்டிய கடன், 2006-07-ஆம் ஆண்டை ஒப்பிடும் பொழுது 30 சதவீத மும்; வாஷிம் பகு திக்கு 41 சதவீதமும்; அகோலா பகுதிக்கு 36 சதவீதமும்; புல் தானா பகுதிக்கு 38 சதவீதமும் குறை வாக நிர்ணயிக்கப் பட்டுள்ளது. அரசு அறிவித்த 2,033 கோடி ரூபாய் கடன், இப்பொழுது 1,683 கோடி ரூபாயாகச் சுருங்கி விட்டது. விதர்பா பகுதி விவ சாயிகள் கடனுக்காக வங்கிகளின் வாசல்படியை மிதிக்கும் பொழுது, இது இன்னும் கூடச் சுருக்கிப் போய் விடலாம்.



கடன்பட்டு கரும்பு விவசாயம் செய்து போண்டியானதால் தற்கொலை செய்து கொண்ட கர்நாடகா - மாண்டியா மாவட்ட விவசாயிகள் (இடமிருந்து) பசவ கவுடா, தம்மண்ணா மற்றும் வெங்கடேஷ்.

அரசு நிவாரணத் திட்டத்தை அறி வித்த பிறகு, கடந்த ஜூலை 2006 தொடங்கி ஜூலை 2007-க்குள்ளாக மட்டும் விதர்பா பகுதியில் 1,600 விவ சாயிகள் தற்கொலை செய்து கொண்ட தாகக் கூறுகிறார், விதர்பா ஜன் அந் தோலன் சமிதியின் தலைவர் திவாரி. இதிலிருந்தே பொருளாதாரப் புலிகள் மன்மோகன் சிங் - மாண்டேக் சிங் அலு வாலியா - ப.சிதம்பரம் போட்ட நிவார ணத் திட்டத்தின் இலட்சணத்தைப் புரிந்து கொள்ளலாம்.

விதர்பா பகுதி விவசாயிகள் வங் கிக் கடன் ரத்து செய்யப்பட வேண்டும் எனக் கோரியதை, மைய அரசு ஏற்றுக் கொள்ள மறுத்து விட்டது. மகாராஷ் டிரா சட்டமன்றத் தேர்தல் சமயத்தில், பருத்திக்குத் தரப்படும் ஆதார விலை குவிண்டாலுக்கு ரூ. 2,700/- ஆக உயர்த்தப்படும் என வாக்குறுதி அளித்து, ஓட்டுப் பொறுக்கியது காங்கி ரசு கும்பல். ஆட்சியைப் பிடித்த பிறகோ, பருத்திக்குத் தரப்பட்டு வந்த ஆதார விலையை ரூ. 2,250/-லிருந்து ரூ. 1,750/- ஆகக் குறைத்து, விவசாயி களின் தலையில் கல்லைத் தூக்கிப் போட்டது. தற்பொழுது, உள்ளூர் அளவில் தயாரிக்கப்படும் மரபணு மாற்றம் செய்யப்பட்ட பருத்தி விதைக ளுக்குத் தடை விதித்திருப்பதன் மூலம், மான்சாண்டோ எவ்விதப் போட்டியும் இன்றி பருத்தி விவசாயிகளை மொட் டையடிப்பதற்கு வழி ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறார், அமெரிக்க அடி வருடி மன்மோகன் சிங்.

1993-க்கும் 2002-க்கும் இடைப் பட்ட ஒன்பது ஆண்டுகளில், கிராமப் புறங்களில் இயங்கி வந்த அரசு வங்கிக் கிளைகளுள், 3,500 கிளைகள் இழுத்து மூடப்பட்டன. இதற்கு இணையாக, 1991-க்கும் 2001-க்கும் இடைபட்ட பத்தாண்டுகளில் விவசாயிகள் தனியா ரிடம் வாங்கிய கடன் அளவு, 17.5 சத வீதத்தில் இருந்து 29.6 சதவீதமாக அதி கரித்திருக்கிறது. கிராமப்புறங்களில் கந்துவட்டிக் கும்பலின் ஆதிக்கம் அதி கரித்து வரும் வேளையில், அதை முறைப்படுத்துவது தொடர்பாக உலக வங்கியும், இந்திய ரிசர்வ் வங்கியும் இரண்டு அறிக்கைகளைக் கொடுத் துள்ளன.

ஆந்திர மாநிலம் - தலமடுகு கிராமத்தில் சாவியாகிப் போன பி.டி. பருத்தியை மாடுகள் மேய்கின்றன. (கோப்புப் படம்).



உலக வங்கி அளித்துள்ள அறிக் கையில் கிராமப்புற ஏழை-நடுத்தர விவசாயிகளுக்கு அரசு வங்கிக் கடன் கிடைப்பதை உத்தரவாதப்படுத்த வேண்டும் என்றால், கிராமப்புற கூட்டு றவு வங்கிகள் இலாபகரமாக இயங் கும்படி ''சீர்திருத்தங்களை'' மேற் கொள்ள வேண்டும் எனக் குறிப்பிட் டுள்ளதோடு, இச்சீர்திருத்தத்திற்காக 2,400 கோடி ரூபாய் கடன் வழங்க ஒப் புக் கொண்டுள்ளது. உலக வங்கியின் இந்த ஆலோசனை வெளிவந்தவுட னேயே, இக்கடனைப் பெறும் ஒப்பந் தத்தில், போலி கம்யூனிஸ்டுகள் ஆளும் மேற்கு வங்கம் உள்ளிட்டு 12 மாநில அரசுகள் கையெழுத்துப் போட் டுவிட்டன.

உலக வங்கியின் ஆலோசனைப் படி இந்தியப் பொருளாதாரம் சீர்திருத் தப்பட்டதால்தான், விவசாயத் துறை முன்னெப்பொழுதும் கண்டிராத நெருக்கடிக்குள் சிக்கிக் கொண் டுள்ளது. இந்த நிலையில், உலக வங்கி யின் இந்தப் புதிய ஆலோசனை, விவ சாயிகளின் நெருக்கடியைத் தீர்த்துவி டும் என யாராவது நம்ப முடியுமா? கூட்டுறவு வங்கிகளை இலாபகரமாக இயக்க வேண்டும் என்ற உலக வங்கி யின் ஆலோசனை இனிப்பு தடவிய கசப்பு மாத்திரை. விளைச்சல் வீழ்ந் தால்கூட கூட்டுறவுக் கடன்களைத் தள் ளுபடி செய்யக் கூடாது; கந்துவட்டிக் காரனைப் போலவே கூட்டுறவு வங்கி களும் அசலையும், வட்டியையும் விவ சாயிகளிடமிருந்து பறிக்க வேண்டும் என்பதுதான் இந்த ஆலோசனையின் பின்னுள்ள நோக்கமாக இருக்க முடி யும்.

www.padippakam.com

''கிராமப்புற விவசாயிகளின் கடன் சுமையை ஆராய இந்திய ரிசர்வ் வங்கியால் நியமிக்கப்பட்ட குப்தா கமிட்டி, ''அரசு வங்கிகளைவிட கிராமப்புறங்களில் வட்டிக் கடை நடத்தி வருபவர்கள் தான் விவசாயிகளுக்கு நன்கு பரிச்சயமானவர்கள்; எனவே, இந்த வட்டிக் கடை அதிபர்களுள் சிலரைத் தேர்ந்தெடுத்து, அவர்களை 'அங்கீகரிக்கப்பட்ட கடன் வழங்குபவர்களாக' அரசு நியமிக்க வேண்டும். இவர்கள் விவசாயிகளுக்கு கடன் கொடுக்கத் தேவைப்படும் மூலதனத்தை வங்கிகள் வழங்க வேண்டும். விவசாயிகளிடமிருந்து கடனை வசூலித்து, வங்கிக்குக் கட்ட வேண்டிய பொறுப்பையும், அங்கீகரிக்கப்பட்ட வட்டிக் கடைக்காரர்களிடம் விட்டு விட வேண்டும். இதனால், விவசாயிகள் கடன் கேட்டு வங்கிக்கு அலைய வேண்டியதில்லை. அதிகார வர்க்கத் தடைகள் இன்றி, விவசாயிகளுக்குக் கடன் கிடைப்பதோடு, வங்கிகளின் வாராக் கடன் சுமையும் குறையும்'' என்ற அரிய ஆலோசனையை வழங்கியிருக்கிறது.

''லேவாதேவிக்காரர்கள் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட கடன் கொடுப்போர் சட்டம் 2007'' என்ற பெயரில் குப்தா கமிட்டி உருவாக்கியிருக்கும் மாதிரிச் சட்டத்தில், ''விவசாயத்திற்கு அளிக்கப்படும் கடனுக்கு வட்டி வரம்பு நிர்ணயிப்பது, சந்தைப் பொருளாதாரத்திற்கு எதிரானதாக அமையும்; ஐந்து ஏக்கர் அல்லது அதற்கும் குறைவாக நிலம் வைத்திருக்கும் விவசாயிகள் கடன் கோரும்பொழுது, அவர்களின் நிலம் மற்றும் வீட்டை அடமானமாக வாங்க வேண்டும்'' எனக் குறிப்பிட்டுள்ளது.

இந்தச் சட்டம் நடைமுறைக்கு வந்தால், தற்பொழுது சட்டவிரோதமானதாகக் கருதப்படும் கந்துவட்டிக் கும்பலின் சுரண்டலும், நிலப்பறிப்பும் சட்டப்பூர்வமானதாக மாறிவிடும். அரசு வங்கிகளில் உள்ள மக்களின் சேமிப்பை நகர்ப்புறத்துத் தொழில் அதிபர்கள் ஏப்பம் விட்டதைப் போன்று, கிராமப்புற ஆதிக்க சக்திகளும் ஏப்பம் விடும் நிலைமை உருவாகும். விவசாயத்தைப் பிடித்தாட்டும் நோய்க்கு மருந்து கேட்டால், அதிகார வர்க்கமோ நோயாளியை - விவசாயிகளைக் கொன்று விடுவதற்குத் தனது புத்தியைத் தீட்டுகிறது!

• ரஹீம்

# தேரிக்காட்டில் ஒரு முகம் கேரளாவில் வேறு முகம் - சி.பி.எம்.-இன் சதிராட்டம்

கழுதை தேய்ந்து கட்டெறும்பான கதையாக, ''தனியார்மயத்தை அனுமதியோம்; அரசுத்துறையைப் பாதுகாப்போம்!'' என்று சவடால் அடித்து அடையாள எதிர்ப்புப் போராட்டங்களை நடத்தி வந்த சி.பி.எம். கட்சி, இப்போது கேரளத்தில் இலாபமீட்டும் அரசுத்துறை நிறுவனத்தை முடக்கி, வெளிப்படையாகவே தனியார்மயத்துக்குச் சிவப்புக் கம்பளம் விரிக்கக் கிளம்பிவிட்டது.

கேரளத்தின் கொல்லம் மாவட்டம், சாவரா எனுமிடத்திலுள்ளது, கேரள தாதுப் பொருள் மற்றும் உலோக நிறுவனம் (KMML). டைட்டானியம் டை ஆக்சைடு தயாரிக்கும் இந்த அரசுத்துறை நிறுவனம், மாநிலத்தின் இலாபமீட்டும் இரண்டாவது பெரிய அரசுத்துறை நிறுவனமாகும். கடற்கரை மணலை அகழ்வு செய்தல், தாதுப் பொருட்களைப் பிரித்தெடுத்தல், டைட்டானியம் டை ஆக்சைடு இயற்கை நிறமிக் கூறுகளை உற்பத்திச் செய்தல் என அனைத்தையும் கொண்ட ஒருங்கிணைந்த இந்த நிறுவனம், உலகின் முன்னணி நிறுவனங்களுள் ஒன்றாகக் கருதப்படுகிறது.

முந்தைய 'இடதுசாரி' ஆட்சியில் சுசீலா கோபாலன் தொழிற்துறை அமைச்சராக இருந்தபோது, ரூ.782 கோடி செலவில் இந்த அரசுத்துறை நிறுவனத்தை விரிவாக்கம் செய்து மேம்படுத்த மாநில அரசு ஒப்புதல் அளித்துள்ளது. அதைத் தொடர்ந்து இரண்டு சட்டமன்றக் குழுக்கள் நியமிக்கப்பட்டு, அக்குழுக்களும் விரிவாக்கம் மற்றும் நவீனமயமாக்கலுக்குப் பரிந்துரைந்துள்ளன. அதன்பின்னர் ஆட்சிக்கு வந்த காங்கிரசு கூட்டணி அரசும் தொழில்நுட்பக் கூட்டுக்காக உலகளாவிய ஒப்பந்தப் புள்ளிகளை வெளியிட்டு ஆரம்ப ஏற்பாடுகளைச் செய்திருந்தது.

இப்போது கேரளத்தில் மீண்டும் 'இடதுசாரி' கூட்டணி ஆட்சிக்கு வந்துள்ள நிலையில், இந்த அரசுத்துறை நிறுவனம் விரிவடைந்து வளர்ச்சி பெறும் என்று கேரள மக்கள் எதிர்பார்த்தார்கள். அதிலும், டைட்டானியம் டை ஆக்சைடுக்கு கிராக்கி அதிகரித்துள்ள நிலையில், இந்த அரசுத்துறை நிறுவனத்தை முன்னுதாரணமிக்கதாக வளர்த்தெடுப்பார்கள் என்று பெரிதும் நம்பினார்கள். இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் (ISRO) இந்த அரசுத்துறை நிறுவனத்துடன் இணைந்து ஆண்டுக்கு 10,000 டன் டைட்டானியம் உலோகக் கட்டிகளை (ஸ்பான்ஞ்)த் தயாரிக்கத் திட்டமிட்டிருந்ததால், இடதுசாரி ஆட்சியாளர்கள் தமது கொள்கைப்படி இந்த அரசுத்துறை நிறுவனத்தைக் கட்டிக் காத்து வளர்க்க வாய்ப்புகளும் சாதகமாகவே அமைந்திருந்தது.

ஆனால் இந்த எதிர்பார்ப்புகள், நம்பிக்கைகள் அனைத்தையும் தகர்த்தெறிந்துவிட்டு, சி.பி.எம். கட்சிப் பிரமுகரும் தொழில்துறை அமைச்சருமான எலமாரம் கரீம், அந்நிய-தனியார் முதலாளிகள் கேரளாவின் தாதுவளத்தைச் சூறையாட தாராள அனுமதி கொடுத்துள்ளார். கடந்த மே 17-ஆம் தேதியன்று ரஷ்யாவின் ''ரோசோபாரன்'' என்ற நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டு, தனியார்மயக் கொள்ளைக்கு கால்கோள் விழா நடத்தியுள்ளார். இந்த ஒப்பந்தபடி, கேரள தாதுப்பொருள் மற்றும் உலோக நிறுவனத்தின் வளாகத்துக்குள்ளேயே, ரஷ்ய நிறுவனம் டைட்டானியம் உலோக கட்டிகளைத் தயாரிக்கும் ஆலையை ஏறத்தாழ ரூ. 1400 கோடி செலவில் நிறுவும். அரசுத் துறை நிறுவனத்திடமிருந்து இந்த ரஷ்ய நிறுவனம் பகுதியளவுக்குக் கச்சாப் பொருளைப் பெற்றுக் கொள்ளும். மீதியை கேரள கடற்கரையிலுள்ள தாது மணலை அகழ்வு செய்து அள்ளிக் கொள்ளும்.

இதுவும் போதாதென ஏராளமான சலுகைகளுடன் டாடா நிறுவனத்தை அழைத்து வந்து, ஆலப்புழை மாவட்டத்திலுள்ள பள்ளிபுரத்தில் டைட்டானியம் ஆலையைத் தொடங்கவைத்து, கேரளத்தின் தாதுவளத்தை டாடா நிறுவனம் சூறையாட சி.பி.எம். ஆட்சியாளர்கள் ஏற்பாடு செய்துள்ளனர்.


படிப்பகம்

www.padippakam.com



ரசியாவின் ரோசோபாரன் நிறுவனம் டைட்டானியம் தாதுவளத்தைச் சூறையாடத் தேவைப்படும் கருவிகள் கொல்லம் வழியாக எடுத்துச் செல்லப்படுகின்றன.

கடைசியில், டாடா, ரோசோபாரன் ஆகிய இரு தனியார் - அந்நிய நிறுவனங்களுக்கு கச்சாப் பொருளையும் தொழில்நுட்பத்தையும் அளிக்கும் கறவை மாடாக கேரள அரசுத்துறை நிறுவனம் மாற்றப்பட்டு விட்டது.

இப்புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தாவதற்கு முன்பாக 'இடது சாரி' கூட்டணிக் கட்சிகளிடம் கருத்து கேட்கப்படவில்லை. உலகளாவிய ஒப்பந்தப் புள்ளி வெளியிட்டு அதனடிப்படையில் இந்த ரஷ்ய நிறுவனம் தேர்வு செய்யப்படவுமில்லை. கேரள அரசுத்துறை நிறுவனமே டைட்டானியம் உலோக கட்டிகளை உற்பத்தி செய்ய வாய்ப்புள்ள போது, அதைப் புறக்கணித்துவிட்டு ரஷ்ய நிறுவனத்துடன் ஒப்பந்தம் போடுவது ஏன் என்ற கேள்விக்கு சி.பி.எம். தலைவர்கள் இன்றுவரை வாய்திறக்கவில்லை.

எல்லாவற்றுக்கும் மேலாக, ரோசோபாரன் நிறுவனமானது, ரஷ்ய கிரிமினல் - மாஃபியா கும்பலின் ஆயுதபேர நிறுவனமாகும். உலகின் 30% டைட்டானிய பேரத்தைக் கட்டுப்படுத்தும் ரஷ்யாவின் மிகப் பெரிய ஏகபோக நிறுவனமான ''அவிஸ்மா'' சார்பாக இந்த ரோசோபாரன் நிறுவனம் கேரள அரசுடன் ஒப்பந்தம் போட்டுள்ளது. உலகளாவிய ஒப்பந்தப் புள்ளி வெளியிட்டு அதனடிப்படையில் தேர்வு செய்யாமல், ஏகபோக ''அவிஸ்மா'' நிறுவனத்துடன் ஒப்பந்தம் போட்டால், எதிர்க் கட்சிகள் கேள்வி எழுப்பி குடைச்சல் தரும் என்பதாலேயே, சி.பி.எம். ஆட்சியாளர்கள் தந்திரமாக ரோசோபாரன் நிறுவனத்துடன் ஒப்பந்தம் போட்டுள்ளனர். ஆனால் முழுப் பூசணிக்காயை சோற்றில் மறைத்த கதையாக, இந்த மோசடித்தனம் அம்பலமாகி சந்திசிரிக்கத் தொடங்கி விட்டது.

இத்தனைக்கும் பிறகும் ''கேரள தாதுப் பொருள் மற்றும் உலோக நிறுவனம் ரஷ்ய நிறுவனத்துடன் ஒப்பந்தம் போடவில்லை. அப்படிச் செய்திருந்தால் அது அந்த அரசுத்துறை நிறுவனத்தைப் பாதிக்கும். மாறாக, கேரள அரசுதான் ரஷ்ய நிறுவனத்துடன் ஒப்பந்தம் போட்டு, மாநிலத்தின் தொழில் வளர்ச்சிக்கு வழிவகை செய்துள்ளது. ஒருபுறம் அரசுதுறை நிறுவனமும், மறுபுறம் இரு தனியார் நிறுவனங்களும் ஒரே துறையில் இயங்கும். இதனால் அரசுத்துறை நிறுவனம் பாதிப்படையாது'' என்று நாக்கைச் சுழற்றி விளக்கமளிக்கிறார் கேரள தொழிற்துறை அமைச்சர். இவர் கேரள சி.பி.எம். கட்சியின் விஜயன் கோஷ்டியைச் சேர்ந்த முக்கிய புள்ளி. பதவிக்கவும் அதிகாரத்துக்காகவும் விஜயன் கோஷ்டியுடன் நாய்ச்சண்டை போடும் அச்சுதானந்தன் கோஷ்டியோ, இத்தனியார்மயமாக்கலுக்கு எதிராக வாய் திறக்காமல் பம்மிப் பதுங்குகிறது.

இலாபத்தில் இயங்கும் அரசுத்துறை நிறுவனம் ஈடுபட்டுள்ள தொழிலில் அந்நிய - தனியார் நிறுவனங்களை அனுமதிப்பது ஏன்? இந்த அரசுத்துறை நிறுவனத்தை நவீனப்படுத்தி விரிவுபடுத்தும் திட்டத்தைச் செயல்படுத்த மறுப்பது ஏன்? தமிழகத்தின் டைட்டானியம் ஆலை குறித்து ஒரு நிலைப்பாடும், கேரளத்தில் வேறொரு நிலைப்பாடும் சி.பி.எம் கட்சி எடுப்பது ஏன்? இப்படிப் பல நூறு கேள்விகளைக் கேட்டுக் கொண்டே போகலாம். அவற்றுக்கு சி.பி.எம். துரோகிகளிடமிருந்து பதில் கிடைக்கப் போவதில்லை. மாநிலத்தின் தொழில் வளர்ச்சி என்ற பெயரில் மே.வங்க வழியில் தனியார்-அந்நிய முதலாளிகளின் அடியாளாகச் செயல்படக் கிளம்பிவிட்ட இப்பித்தலாட்டப் பேர்வழிகளிடமிருந்து அதை எதிர்பார்ப்பதில் நியாயமுமில்லை.

● தனபால்

அன்பார்ந்த தோழர்களே,

இந்த இதழோடு உங்களது புதிய ஜனநாயகம் இதழ் 22-ஆம் ஆண்டை நிறைவு செய்கிறது. கடந்த 22 ஆண்டுகளாக இவ்விதழ் தொடர்ந்து வெளிவர பல்வேறு வழிகளிலும் உதவிய உங்கள் அனைவருக்கும், புதிய வாசகர்களிடம் புரட்சிகர அரசியலைக் கொண்டு சென்ற முகவர்கள் - விற்பனையாளர்களுக்கும் எமது நெஞ்சார்ந்த நன்றியையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

நாடு மீண்டும் காலனியாக்கப்படுவதற்கு எதிராகவும், இந்துவெறி பார்ப்பன பாசிசத்துக்கு எதிராகவும் பரந்துபட்ட மக்களை அரசியல் விழிப்புணர்வூட்ட வேண்டிய அவசியம் கருதி, வரும் 23-ஆம் ஆண்டிலிருந்து (நவம்பர் 2007-இலிருந்து) புதிய ஜனநாயகம் இதழ் கூடுதல் பக்கங்களுடன் (8 பக்கங்கள் கூடுதலாக) வெளிவரும். அதே நேரத்தில், காகித விலையேற்றம் மற்றும் பொதுவில் அதிகரித்துவரும் விலையேற்றம் காரணமாக, வரும் 23-ஆம் ஆண்டிலிருந்து (நவம்பர் 2007-இலிருந்து) புதிய ஜனநாயகம் இதழின் விலை ரூ.7.00-ஆக உயர்த்தப்படுகிறது; ஆண்டு சந்தா தொகை ரூ.90.00-ஆக உயர்த்தப்படுகிறது. தற்போதைய சந்தாதாரர்களுக்கு, அவர்களது கணக்கில் எஞ்சியுள்ள தொகைக்கேற்ப இதழ் அனுப்பப்படும்.

தவிர்க்கவியலாத இந்த விலையேற்றத்தை அங்கீகரித்து, தொடர்ந்து ஆதரவளிக்குமாறு கோருகிறோம்.

*தோழமையுடன்,*
*நிர்வாகி,*
*புதிய ஜனநாயகம்.*


படிப்பகம்

www.padippakam.com

# "நாட்டாமை"யின் நப்பாசை சுயநலத்தின் பேராசை

"நம் இலக்கு எப்பவுமே உயர்வாக இருக்க வேண்டுமென நினைப்பவன். எங்கள் சமத்துவக் கொள்கைகளை எடுத்துச்சென்று மக்களுக்காக உழைப்போம் என்று சொல்ல முடியும். சாதிக்கவும் முடியும். இப்பவும் சொல்கிறேன். 2011-ம் வருடம் என்னை தமிழக முதல்வராகப் பார்ப்பீர்கள்.'' (19.9.07, குமுதம்) - இப்படிப் பச்சையான சுயநலத்தைக் கக்கியிருப்பது ''அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி''யைத் தொடங்கியிருக்கும் சினிமாக் கழிசடை சரத்குமார். அவரது இரசிகர்களால் 'பச்சைத் தமிழர்' என்று அழைக்கப்படும் சரத்குமாரை கழிசடை என்றும் சுயநலவாதி என்றும் மதிப்பீடு செய்வதற்குக் காரணம் நமது விருப்பமல்ல; இந்த 'சுப்ரீம் ஸ்டாரி'ன் வரலாறே அப்படித்தான் உள்ளது.

தான் விஜயகாந்த் போல திடீரென்று அரசியலுக்கு வரவில்லை எனவும், பதினைந்து ஆண்டுகளாக இரண்டு கழகங்களிலும் தீவிரமாகப் பணியாற்றியவன் என்றும் தனது கட்சியைத் தொடங்கியதற்கான தகுதிகளை சரத்குமார் முன்வைக்கிறார். உண்மையில் இவரது தீவிரப் பணி என்னவாக இருந்தது?

இளைஞனாக இருந்த போது பெங்களூரு தினகரனில் பணியாற்றினார். பின்னர், பம்பாய் சென்று ஆணழகன் ஆனார். பிறகு, சென்னை வந்து வட்டித்தொழில் செய்தார். சினிமாவுக்கும் பைனான்ஸ் செய்தார். சினிமாத் தொடர்பு வந்த பிறகு நடிக்க வாய்ப்பு கிடைத்து, வில்லனாக அறிமுகம் ஆனவர், இறுதியில் கதாநாயகனானார். ''நாட்டாமை'' திரைப்படத்தின் நூறாவது நாள் விழாவிற்கு வந்த ஜெயலலிதா முன்பு இரட்டை இலை சட்டை போட்டு சேவகம் செய்தார்.

இந்த அடிமையிடம் அனுமதி பெறாமலேயே ஜெயா டி.வியில் ''நாட்டாமை'' படம் வெளியிடப்பட்டது. இதனால் கோபம் கொண்டு தி.மு.க.வில் இணைந்தார். இப்படி இவர் அரசியலில் இணைந்ததற்கும், பிரிந்ததற்கும் கொள்கையோ, மக்கள் நலனோ காரணமல்ல. பால்கனியிலிருந்து இரசிகர்களை மந்தைபோலப் பார்க்கும் ஒரு நட்சத்திர கதாநாயகனது திமிர்தான் அவரது அரசியல் வாழ்வைத் தொடங்கி வைத்தது. இடையில், தங்களது பைனான்ஸ் தொழிலுக்காக கோடிக்கணக்கில் கடன் வாங்கி ராயப்பேட்டை நிதி நிறுவனத்தை திவாலாக்கிய நடிகர்களில் சரத்குமாரும் ஒருவராக இருந்தார். சொத்துப் பிரச்சினையாலும், நக்மாபின் சுற்றியதாலும் முதல் மனைவியை விவாகரத்து செய்தார். ராதிகாவின் கம்பெனிக்காக டி.வியில் ''கோடீஸ்வரன்'' நிகழ்ச்சியை நடத்தியபோது, ராதிகாவுடன் பழக்கம் ஏற்படுகிறது. சரத்குமாரின் கடனை ராதிகா அடைப்பது எனவும், சரத்குமார், ராதிகா கம்பெனிக்காக திரைப்படத்தில் நடிப்பது என்றும் வர்த்தக ரீதியில் பேசிக்கொண்டு இருவரும் திருமணம் செய்து கொள்கின்றனர்.

நடிகர் என்ற முறையிலும், ராதிகாவுக்கு கருணாநிதியுடன் உள்ள நெருக்கத்தாலும் 1998 நாடாளுமன்றத் தேர்தலில் சீட் கிடைத்து, திருநெல்வேலி தொகுதியில் போட்டியிட்டார். ஆனால் தோல்வி அடைந்தார். இதை பெருந்தன்மையாக எடுத்துக் கொள்ளாமல், தி.மு.க. தொண்டர்கள் சரியாக வேலை செய்யவில்லை என்று குற்றம் சாட்டினார். இதன் பின்புலமாக நாடார் சாதி பத்திரிகை அதிபர்களும், தொழிலதிபர்களும் சாதியை வைத்து சரத்குமாரை முன்நிறுத்துகின்றனர். இதனைத் தொடர்ந்து, அவருக்கு தி.மு.க.விடமிருந்து இராஜ்ய சபா உறுப்பினர் பதவி சன்மானமாகக் கிடைக்கிறது.

ஆயினும் அவரது அதிகார வெறி அடங்கவில்லை. தனது இரசிகர்களை வைத்து மத்திய மந்திரி பதவி வேண்டும் என சுவரொட்டி ஒட்டச் செய்தார். நாடார்களுக்குப் பிரதிநிதித்துவம் இல்லை என அச்சாதி பிரமுகர்களை வைத்துப் பிரச்சாரம் செய்ய வைத்தார். ஏதோ ஒரு பொங்கல் விழாவில் தயாநிதி மாறன், நடிகர் விஜயை வைத்து அஞ்சல் தலை வெளியிட்டார். இதனால் தன்னைப் புறக்கணித்து விட்டதாகப் புரளி பேசினார். அறிவாலயத்திற்கு வந்த சோனியா காந்தியிடம் தன்னை அறிமுகம் செய்யவில்லை என்று கோபித்துக் கொண்டார். அவமரியாதை அடைந்ததால் தி.மு.க.வை விட்டு விலகப் போவதாகக் கிசுகிசுக்களை உற்பத்தி செய்து பரப்பினார். எல்லாம் எலும்புத் துண்டு

**சரத்குமார், தனது மனைவி ராதிகாவுடன் அ.தி.மு.க.வில் இணைந்ததற்குக் காரணம் கொள்கையா? பண பேரமா?**



கிடைக்காதா என்ற நப்பா சைதான்.

ஆயினும் திருச்சியில் நடந்த தி.மு.க. மாநாட்டில் தான் சாகும் வரை கலைஞரின் தலைமையில் செயல்படுவதாகவும், செத்தால்கூட தன் உடல் மீது தி.மு.க கொடிதான் போர்த்தப் படவேண்டும் என முழங்கினார். முழங்கிய எச்சில் உலருவதற்குள் 2006 சட்டமன்ற தேர்தலின்போது அ.தி.மு.கவில் இணைந்தார். இதற்காக சாராய மன்னன் விஜய மல்லையாவின் தனி விமானத்தில் பச்சைப்புடவை கட்டிய ராதிகாவுடன் மதுரை சென்று, பின்னர் ஆண்டிப்பட்டியில் பாசிச ஜெயாவிடம் போஸ் கொடுத்தவாறு சரணடைந்தார். இந்தச் சரணடைவு உண்மையில் ஒரு வர்த்தக பேரமாகும். இதன் வரவு-செலவு அம்சங்கள் சிங்கப்பூரில் சசிகலா நடராஜனுடன் பேசி முடிவு செய்யப்பட்டன. இதன்படி சரத்குமாருக்குக் கிடைக்க வேண்டிய கணிசமான தொகையும், ராடன் நிறுவனத்துக்கு அளிக்கப்படும் தொலைக்காட்சி நேரமும் உறுதி செய்யப்பட்டது.

ஆயினும் பேசியபடி எலும்புத் துண்டுகள் ஜெயலலிதாவால் தரப்படவில்லை. இதனால் கசமுசா ஏற்பட்டு ராதிகா அ.தி.மு.க.விலிருந்து நீக்கப் பட்டார். சரத்குமாரும் தனக்கு அரசியல் செய்ய நேரமில்லை என்று யாரையும் குற்றம் சாட்டாமல் நாசூக்காக அ.தி.மு.கவிலிருந்து ராஜினாமா செய்தார். இறுதியில் நாடார் சாதி பிரபலங்கள், சரத்குமாரை வைத்து தனி ஆவர்த்தனம் தொடங்கினால் மற்ற கட்சிகளிடம் பேரம் நடத்த தோதாய் இருக்கும் என்று முடிவு செய்து தனிக்கட்சி ஆரம்பித்து விட்டனர். நாடார் சாதி மக்களை விற்றுக் காசு பார்ப்பதற்கென்றே 'அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி' தொடங்கப்பட்டிருக்கிறது. சரத்குமாரிடமிருந்து வரும் ஒவ்வொரு அரசியல் ரீதியான அறிக்கையிலும் அவரது வர்த்தக நோக்கம் மறைந்திருக்கும். தற்போது சன் டி.வி.யில் ராடன் டி.வி ஏராளமான நிகழ்ச்சிகளை ஒளிபரப்புவதால், சன் டி.வி.யின் டி.டி.எச். ஒளிபரப்பை ஆதரித்தும் தி.மு.வைக் கண்டித்தும் சரத்குமார் அறிக்கை வெளியிடுகிறார்.




'சமத்துவ' அரசியலா? சாதி அரசியலா?

தற்போது சேது சமுத்திரத் திட்டத்தை ஒட்டி பா.ஜ.க எழுப்பிய இராமர் பாலம் பிரச்சினையில் இந்து மதவெறியர்களின் அணியில் இருந்து கொண்டு, ''இந்துக்களைப் புண்படுத்தியதற்காக கருணாநிதி மன்னிப்பு கேட்க வேண்டும்'' என்று கொழுப்புடன் அறிக்கை விடுகிறார். 'எதிர்காலத்தில் பா.ஜ.க. கூட்டணியில் மந்திரியாக மாட்டோமா' என்ற பேராசைதான்!

1966-இல் காமராசரைக் கொலை செய்ய டெல்லியில் அவரது வீட்டுக்குத் தீ வைத்த இந்து மதவெறியர்களை ஆதரித்துக் கொண்டே, சாதி ஓட்டுக்களைக் கவர்வதற்காகவும், காசு வசூல் செய்து தின்னவும், காமராசருக்கு மணிமண்டபம் கட்டப் போவதாக முழங்கும் இந்தப் பிழைப்புவாதி, தென்மாவட்ட மக்களுக்கும் நாடார் சாதியைச் சேர்ந்த மக்களுக்கும் அப்பட்டமான எதிரி என்பதே உண்மை.

தனது சாதி மக்களை வைத்து உயர் பதவி அடையவேண்டும் என்று அரசியலில் குதிக்கும் சரத்குமார், உண்மையில் நாடார் மக்களுக்குச் செய்தது என்ன? தாமிரபரணி நீரை கொக்கோ கோலா நிறுவனம் உறிஞ்சி எடுப்பது அப்பகுதி விவசாயிகளுக்கு — அதில் கணிசமானோர் நாடார்கள் — இழைக்கப்படும் அநீதியாகும். இந்த அநீதிக்கு எதிராக சரத்குமார் வாய்திறக்கவில்லை என்பது மட்டுமல்ல; சமீபத்தில் கோக்கில் பூச்சி மருந்து கலந்திருப்பது சந்தி சிரித்து அதன் விற்பனை வீழ்ச்சியடைந்தபோது, சரத்குமாரின் மனைவி ராதிகா, ''கொக்கோ கோலா பாதுகாப்பானது''' என்று விளம்பரப் படத்தில் நடித்துச் சிபாரிசு செய்தார். நாடே காறி உமிழ்ந்தது. ஆனால், 'நாட்டாமை'க்கு எச்சில் பிரச்சினை அல்ல; காசு மட்டும்தான் குறி.

சில்லறை வணிகர்களில் பெரும்பாலானோர் நாடார் சாதியைச் சேர்ந்த மக்கள். இவர்கள் வாழ்வை அழிக்க வந்துவிட்ட ரிலையன்ஸை எதிர்த்து வெள்ளையன் தலைமையில் வணிகர் சங்கங்களின் பேரவை தீவிரமாகப் போராடிக் கொண்டிருந்தபோது, 'நாட்டாமை' ஆஸ்திரேலியாவில் டூயட் பாடிக்கொண்டிருந்தார். தன் சொந்த சாதி மக்கள் மீது இந்த வேடதாரி வைத்திருக்கும் நேசத்தின் இலட்சணம் இதுதான். தற்போது டைட்டானியம் ஆலை விவகாரத்திலும் ''இந்தியாவின் தொழில் தந்தையான டாடாவை நான் எதிர்க்கவில்லை. உரிய விலை கொடுங்கள் என்பதுதான் என் கோரிக்கை'' என்று தரகு வேலை பார்த்தார் இந்த வியாபாரி.

இத்தகைய பச்சையான சுயநல, சந்தர்ப்பவாத, துரோகிகள் கட்சி ஆரம்பிப்பதும், முதல்வராகப் போவதாகப் பேசித்திரிவதும் மக்களுக்கு மாபெரும் அவமானம். இந்த அவமானத்தைத் தீர்க்க வேண்டுமெனில் இத்தகைய பேர்வழிகள் அரசியல் என்று பேசினாலே அடித்துத் துரத்த வேண்டும் அல்லது முளைக்கும் போதே 'மணிமண்டபம்' கட்டி விடவேண்டும். அதையும் குறிப்பாக நாடார் சாதியைச் சேர்ந்த உழைக்கும் மக்களே செய்து முடித்தால், சிறந்த முன் மாதிரியாகவும் அமையும்.

சில்லறை வணிகர்களில் பெரும்பாலானோர் நாடார் சாதியைச் சேர்ந்த மக்கள். இவர்கள் வாழ்வை அழிக்க வந்துவிட்ட ரிலையன்ஸை எதிர்த்து வெள்ளையன் தலைமையில் வணிகர் சங்கங்களின் பேரவை தீவிரமாகப் போராடிக் கொண்டிருந்தபோது, 'நாட்டாமை' ஆஸ்திரேலியாவில் டூயட் பாடிக் கொண்டிருந்தார்.

● பச்சையப்பன்

www.padippakam.com

## தில்லை விளாகம்

# முன்னுதாரணமான கிராமம் முன்னுதாரணமான மக்கள்

திருவாரூர் மாவட்டத்திலுள்ள தில்லைவிளாகம் ஏழாண்டுகளுக்கு முன்புவரை பொன் விளையும் பூமியாக இருந்தது. ஆனால் இன்றோ, அது இறால் பண்ணைகளுக்கும் உப்பளங்களுக்கும் இரையாகி, பாரம்பரிய விவசாயமும் மீன்பிடித் தொழிலும் நாசமாக்கப்பட்டு, அப்பகுதிவாழ் மக்கள் வாழ்விழந்து நிற்கிறார்கள். இப்பகுதியை ஒட்டியுள்ள அலையாத்திக் காடுகளின் அரணால், சுனாமியால்கூட இந்தத் தில்லைவிளாகத்தை ஒன்றும் செய்ய முடியவில்லை. எல்லை காத்தானாகப் பாதுகாத்து வந்த அக்காடுகளும் இன்று இறால்பண்ணை - உப்பளங்களால் அழிக்கப்பட்டு வருகிறது.

ஏழாண்டுகளுக்கு முன்புவரை கடல்தாயோ தன் பிள்ளைகளுக்கு உப்பு கரிக்காத மீனைத் தந்தாள்; நிலத்தாயோ வளமான நெல்லையும் சுவையான இளநீரையும் தந்தாள். இன்று கடல்தாயிடம் மீனுமில்லை; நண்டுமில்லை. நிலத்தாயிடம் உப்பு நீரைத் தவிர எதுவுமில்லை. கடலைக் கீறும் துடுப்பும் மண்ணைக் கீறும் கலப்பையும் இன்று சீந்துவாரின்றி முடங்கிக் கிடக்கின்றன. இன்றோ நாளையோ அந்த மரபுக் கருவிகள் அடுப்புக்குப் போகும்முன், போர்க் கருவிகளாக மாற்றப்படும் என்ற நம்பிக்கை தில்லைவிளாக மக்களின் கண்களில் தெறிக்கிறது.

•••

வேதாரணயம் முன்னாள் தி.மு.க. எம்.எல்.ஏ. மீனாட்சி சுந்தரம், அவரது மகன் அன்பரசு ஆகியோர் தலைமையிலான 9 பேர் கொண்ட கும்பல் ''கேலக்சி கிரிஸ்டல்'' என்ற பெயரில் தில்லைவிளாகம் பகுதியில் உப்பளம் அமைத்துள்ளது. மக்கள் குடியிருப்புகள், விளைநிலங்களின் அருகிலேயே அரசுக்குச் சொந்தமான 300 ஏக்கர் நிலத்தில் இந்த உப்பளம் நிறுவப்பட்டுள்ளது. சாதாரண உப்பு தயாரிப்புக்காக அனுமதி பெறப்பட்டு, சட்ட விரோதமாக இங்கு இரசாயன உப்பு தயாரிக்கப்படுகிறது. இதற்காக அதிக அளவு உப்பு அடர்த்தி கொண்ட நீர் நிலத்தில் தேக்கப்படுவதால், இப்பகுதியில் 10 முதல் 18 அடிக்குள் கிடைக்கும் நல்ல தண்ணீர் அனைத்தும் குடிக்கவோ, விவசாயத்திற்குப் பயன்படுத்தவோ முடியாத அளவிற்கு உப்பு நீராக மாறிவிட்டது.

இதன் விளைவாக, இப்பகுதி முழுவதும் நெற்பயிர்கள் வளராமல் கருகுகின்றன. தென்னை மரங்கள் வளர்ச்சி குன்றி மொட்டையாகி விடுகின்றன. தில்லைவிளாகத் தெற்குக்காடு பகுதியில் ஓடும் கிளைதாங்கி ஆற்றில் நிறுவப்பட்ட நீரேற்று நிலையம் உப்பு நீரால் அரிக்கப்பட்டு கட்டடமே இடிந்து விழுந்து விட்டது. இந்நீரேற்று நிலையம் மூலம் பாசன வசதி பெற்று வந்த நூற்றுக்கணக்கான ஏக்கர் விளை நிலங்கள் பொட்டல் காடாகி விட்டன.

இந்த அபாயத்தை முன்கூட்டியே அறிந்த மக்கள், ''கேலக்சி கிரிஸ்டல்'' கும்பல் உப்பளம் அமைக்க 1994-இல் அரசிடம் விண்ணப்பித்தபோதே எதிர்ப்பு தெரிவித்து போராட்டங்களை நடத்தினர். மக்கள் எதிர்ப்பையும் மீறி நாகை மாவட்ட ஆட்சியர் 11.10.1995-இல் உப்பளத்திற்கு அனுமதி அளித்தார். ஆனாலும் உப்பளப் பணியினைத் தொடங்க விடாமல் மக்கள் தடுத்து நிறுத்திப் போராடினர்; உயர்நீதி மன்றத்தில் உப்பளம் தொடங்கத் தடையாணையையும் பெற்றனர்.

இருப்பினும், 1998-இல் தடையாணையை உடைத்து விட்டு போலீசை அடியாளாக வைத்துக் கொண்டு உப்பளம் அமைத்தது 'கேலக்சி' கும்பல். இதற்குப் பிறகும் சளைக்கவில்லை மக்கள். தயாரிக்கப்பட்ட உப்பை எடுக்க விடாமல் தடுத்துப் போராடினர். மக்களின் போராட்டத்தைக் கண்டு அஞ்சிய ''கேலக்சி'' கும்பல் உயர்நீதி மன்றத்துக்கு ஓடியது. நீதிமன்றமோ உப்பை அள்ளிச் செல்ல உதவும் வகையில் போலீசு பாதுகாப்பு அளிக்க உத்தரவிட்டது.


1995-ல் உப்பளத்திற்காகப் பெறப்பட்ட அனுமதி 5 ஆண்டுகளுக்கே செல்லுபடியாகும். எனவே 2000-வது ஆண்டுக்குப் பிறகு அனுமதியை நீட்டிக்கக் கூடாது எனப் போராடும் மக்கள் சார்பாக சென்னை உயர்நீதி மன்றத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டது. இம்மனு மீதான விசாரணையின் போது ''உப்பளத்திற்கு அனுமதியை நீட்டிக்கப் போவதில்லை'' என்று தமிழக அரசு நீதிமன்றத்தில் அறிவித்தது.

இந்நிலையில், சுற்றுச்சூழல் கட்டுப்பாட்டு அதிகாரியிடம் பணத்தை வீசியெறிந்து ''உப்பளத்தினால் பாதிப்பு ஏதுமில்லை'' என்ற 'நற்சான்றை' வாங்கியது கேலக்சி. இந்த நற்சான்றானது உப்பளம் தொடங்குவதற்குரிய சான்று அல்ல. ஆனாலும் அதனைக் காட்டி மீண்டும் சட்ட விரோதமாக உப்பு தயாரிப்பதைத் தொடங்கியது கேலக்சி. இதற்கு எதிராக மறுபடியும் போராடி சட்ட விரோதமாகத் தயாரிக்கப்பட்ட உப்பை அள்ளுவதைத் தடுத்து நிறுத்தினர் மக்கள். ஆனால் உயர்நீதி மன்றம் இச்சட்டவிரோத உப்பை அள்ளிக் கொள்ள கேலக்சி கும்பலுக்கு சட்டபூர்வமான அனுமதி வழங்கி உத்தரவிட்டது.

உப்பளங்கள் மட்டுமல்ல; கடந்த பத்தாண்டுகளுக்கும் மேலாக இப்பகுதியில் அமைக்கப்பட்டுள்ள இறால்

போராட்டத்திற்காகச் சொத்துக்களைக் கூட விற்றுவிட்ட முதியவர் மு. சுப்பிரமணியம்.





தில்லை விளாக மக்களின் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்து புரட்சிகர அமைப்புகள் நடத்திய பொதுக்கூட்டத்தில் ம.க.இ.க. மையக்கலைக் குழுவினரின் புரட்சிகர கலைநிகழ்ச்சி (மேலே); அதை மெய்மறந்து கண்டு ரசிக்கும் தில்லைவிளாகப் பொதுமக்கள்.

பண்ணைகளால் விவசாயிகள் மற்றும் மீனவர்களின் வாழ்வு நாசமாக்கப்பட்டுள்ளது. மன்னார்குடி, திருத்துறைப்பூண்டி பகுதிகளில் பெய்யும் மழை நீரானது, தில்லை விளாகப் பகுதியிலுள்ள கிளைதாங்கி ஆறு, கந்த பரிச்சான் ஆறு, மரைக்கா கோரையாறு, பாமணி ஆறு, வளவனாறு ஆகிய வற்றின் வழியே பாய்ந்தோடி கடலில் கலப்பதால், இப்பகுதியில் படியும் வண்டல் மண்ணே வளமான இயற்கை உரமாகி பொன்விளையும் பூமியாகத் திகழ்ந்தது. ஆனால், தில்லை விளாகத்தில் 3500 ஏக்கர் பரப்பளவு கொண்ட கடல்அலம் பகுதி இன்று இறால் பண்ணைகளால் தரிசாகிக் கிடக்கிறது.

இறால் பண்ணைகளில் இதர மீன் குஞ்சுகளை அழிக்கவும், வளர்ச்சியடைந்த இறாலின் மேலோடு (தோல்) உரிவதற்கான ஏராளமான இரசாயனப் பொருட்கள் இப்பண்ணைகளில் கொட்டப்பட்டு, பின்னர் அவற்றை கால்வாய்களின் வழியே கடலுக்குத் திறந்து விடுவதால், ஆறுகளும் கடற்பகுதியும் நஞ்சாகி இப்பகுதியின் மீன்வளமே அழிக்கப்பட்டு வருகிறது. ''பத்து லிட்டர் டீசல் போட்டு படகுகளில் சென்று இரவு முழுவதும் அலைந்தாலும் நூறு ரூபாய்க்குக் கூட மீன்கள் கிடைப்பதில்லை'' என்று மீனவர்கள் குமுறும் அளவுக்கு இறால் பண்ணைகளால் மீனவர் வாழ்வு நாசமாக்கப்பட்டுக் கிடக்கிறது. இதுதவிர, மீனவர்கள் கடலுக்குச் செல்லும் வழிகள் அனைத்தும் இறால் பண்ணைகளால் அடைக்கப்பட்டுள்ளதால், அவர்கள் பிழைக்க வழியின்றி அல்லற்படுகின்றனர்.

உப்பளங்களாலும் இறால் பண்ணைகளாலும் வாழ்வுரிமை பறிக்கப்பட்டு, 1994-இலிருந்தே போராடி வரும் இப்பகுதிவாழ் விவசாயிகளும் மீனவர்களும், 2004-இல் தீவிரமாகப் போராடி இக்கொள்ளைக் கூட்டத்தை அப்பகுதியிலிருந்தே விரட்டியடித்தனர். அரசு நிலத்தை ஆக்கிரமித்து, மக்களின் வாழ்வுரிமையைப் பறித்து, சட்ட விரோதமாக தனி சாம்ராஜ்யம் நடத்தி வரும் இக்கொள்ளைக் கூட்டத்தின் மீது நடவடிக்கை எடுக்கத் துப்பில்லாத முத்துப்பேட்டை போலீசு, போராடிய மக்களில் முன்னணியாளர்கள் 78 பேரைக் கைது செய்து சிறையிலடைத்தது. நீதிமன்றமோ பிணை வழங்க மறுத்தது. இரு மாதங்களுக்குப் பிறகு, 78 பேரும் திருச்சியில் தங்கி காலை, மாலை என இரண்டு வேளையும் இரண்டு மாதங்களுக்குக் கையெழுத்திட வேண்டும்; ஒவ்வொருவரும் தலா ரூ.5000 பிணைத் தொகையும் இரு நபர் ஜாமீனும் கொடுக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன் பிணை வழங்கியது.

இதன் மூலம், போராடும் மக்களைச் சிறையிலடைத்து மீண்டும் சட்ட விரோதமாக இரசாயன உப்பு தயாரிக்கவும், இறால் பண்ணைகளை நிறுவவும் போலீசும் நீதிமன்றமும் துணை நின்றன. தாசில்தார், கோட்டாட்சியர், உப்புத்துறை ஆணையர், சுற்றுச்சூழல் கட்டுப்பாட்டு அதிகாரிகள், ஓட்டுப் பொறுக்கிகள், அமைச்சர்கள் என மிகப் பெரிய அரசாங்கக் கூட்டமே, தில்லை விளாகத்தை அழித்து வரும் ஆக்கிரமிப்புக் கும்பலின் பின்னே அணி வகுத்து நின்றன. கைதுகள், பொய்வழக்குகள், சிறை-சித்திரவதை என அடக்குமுறைகள் தொடர்ந்தாலும் சளைக்காமல் இப்பகுதிவாழ் மக்கள் போராடி வருகிறார்கள்.

தற்போது 2004-05, 2005-06 ஆகிய இரு ஆண்டுகளில் உற்பத்தி செய்யப்பட்ட உப்பை அள்ளிச் செல்ல முயற்சிக்கிறது, கேலக்சி கும்பல். உப்பை எடுத்துச் செல்ல அனுமதித்தால் மீண்டும் உப்பளம் அமைக்கும் முயற்சி நடக்கும் என்பதால், ''உயிரைக் கொடுத்தேனும் உப்பு எடுக்க அனுமதிக்க மாட்டோம்'' என்று உறுதியுடன் நிற்கிறார்கள் தில்லைவிளாக மக்கள். ''எத்தனை பேர் செத்தாலும் பரவாயில்லை; உப்பை அள்ளியே தீருவோம்'' என்று எச்சரித்து வெறியோடு அலைகிறது கேலக்சி கும்பல். இதற்காக உப்பளக் கொட்டகை மற்றும் மோட்டாரை தாங்களே சேதப்படுத்திவிட்டு, போராடி வரும் முன்னணியாளர்கள் 20 பேர் மீது பொய்ப் புகார் கொடுத்துச் சிறையிலடைத்து விட்டு, உப்பை அள்ளிச் செல்ல முயற்சிக்கிறது. போலீசு எடுபிடிகளோ உப்பள வாயிலில் கண்ணும் கருத்துமாக காவல் காக்கின்றனர்.

இதுவொருபுறமிருக்க, மீனவர்களின் வாழ்வோடும், வளத்தோடும் பின்னிப் பிணைந்துள்ள கடலிலிருந்தும் கடற்கரையிலிருந்தும் மீனவர்களை வெளியேற்றும் சட்டத்தை மைய அரசு கொண்டு வரத் தீர்மானித்துள்ளது. ஏற்கெனவே எம்.எஸ்.சுவாமிநாதன் துரோகக் குழுவின் பரிந்துரைகளை ஏற்றுக் கொண்டுள்ள மைய அரசு மீனவர்களைக் கூண்டோடு அழிக்கும் ''கடற்கரை மேலாண்மை அறிவிப்பாணை - 2007'' (CZM)யைக் கொண்டு வந்து செயல்படுத்தத் தீர்மானித்துள்ளது. சுருக்கமாகச் சொன்னால், விவசாயத்திலிருந்து விவசாயிகளையும், கடல் - கடற்கரையிலிருந்து மீன

www.padippakam.com

வர்களையும் வெறியேற்றிவிட்டு உள்நாட்டு-வெளிநாட்டு முதலாளிகளுக்கு இப்பகுதிகளைத் தாரை வார்க்கும் மிகப் பெரிய சதி வேகமாக அரங்கேறி வருகிறது.

தில்லைவிளாக மக்களின் போராட்டம், நிலத்திற்கும் வாழ்வுரிமைக்குமான போராட்டம் மட்டுமல்ல; இது தாராளமயம் தோற்றுவித்துள்ள பயங்கரவாதத்துக்கு எதிரான போராட்டம்; மறுகாலனியாக்கத்துக்கு எதிரான போராட்டம்; இந்தப் போராட்டம் ஒரு சில நாட்களில் முடிவுக்கு வந்துவிடக்கூடிய போராட்டமல்ல என்பதை அனுபவரீதியாக உணர்ந்துள்ள தில்லைவிளாக மக்கள் கடந்த 13 ஆண்டுகளாகத் தொடர்ந்து போராடி வருகிறார்கள்.

''என்னுடைய மண்தான் எனக்கு உயிர்மூச்சு'' என்று தனது சொத்துக்களை விற்று, முன்னணியில் நின்று போராடும் பெரியவர் சுப்பிரமணியம்; ''இந்த உப்பளங்களையும் இறால் பண்ணைகளையும் ஒழித்துக் கட்டும் வரை எனக்குத் திருமணம் இல்லை'' என்று 35 வயதை எட்டிய பிறகும் திருமணம் செய்து கொள்ளாமல் போராட்டத்தின் மீது மாளாக்காதல் கொண்டுள்ள இளைஞர் மெய்யப்பன்; பெற்றோருடன் கைக்குழந்தையாகப் போராட்டத்தில் ஈடுபட்டு சிறைசென்று, இன்று போராட்டத்தோடு வளர்ந்து வரும் புதிய தலைமுறையினரான சிறுவர் - சிறுமிகள் என தில்லைவிளாக மக்களின் போராட்டம் முன்னுதாரணமிக்கதாகத் திகழ்கிறது. மே.வங்க நந்திகிராம மக்களின் போராட்ட வழியில், ஒரிசா பழங்குடியின மக்களின் போராட்ட வழியில் ஓட்டுக் கட்சிகளைப் புறக்கணித்து விட்டு தில்லைவிளாக மக்களின் உறுதியான போராட்டம் தொடர்கிறது. மறுகாலனிய ஆக்கிரமிப்புக்கு எதிராக சளையாது போராடிவரும் தில்லைவிளாக மக்களுக்கு ஆதரவாக நிற்பதும், போராட்டத்தை அடுத்த கட்டத்துக்கு முன்னெடுத்துச் செல்ல உதவுவதும் புரட்சிகர - ஜனநாயக சக்திகளின் உடனடிக் கடமை; நம் கடமை.

**- பு.ஜ. செய்தியாளர்கள்**

# சிமெண்ட் விலை உயர்வு!
# தனியார்மய - தாராளமயக் கொள்ளையின் விளைவு!

**க**ட்டுமானப் பொருட்களான சிமெண்ட், இரும்புக் கம்பிகளின் விலை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. கடந்த சில மாதங்களில் சிமெண்ட் விலை மூட்டைக்கு ரூ.100-க்கு மேல் அதிகரித்து, தற்போது ஒரு மூட்டை ரூ. 300 வரை விற்கப்படுகிறது. இதனால் கடன் வாங்கி வீடு கட்டும் நடுத்தர வர்க்கத்தினரும் ஒப்பந்தக்காரர்களும் கட்டுமான வேலைகளை நிறுத்தும் நிலை ஏற்பட்டுள்ளது. ஏற்கெனவே வேலை கிடைப்பதே பெரும்பாடாகிவிட்ட நிலையில், கட்டுமானத் தொழிலில் ஈடுபட்டுள்ள ஏறத்தாழ ஒன்னேமுக்கால் கோடி கட்டுமானத் தொழிலாளர்களின் வேலையை, தற்போதைய சிமெண்ட் விலையேற்றம் வேகமாகப் பறித்து வருகிறது.

சிமெண்ட், கம்பி தயாரிக்கத் தேவைப்படும் மூலப் பொருட்களின் விலை உயரவில்லை. ஆனாலும், அநியாய விலையேற்றம் செய்து கொள்ளையடிக்கின்றனர் முதலாளிகள். அரசாங்கம் ஒரு மூட்டைக்கு ரூ. 30 வரை சலுகையாக மானியம் தருகிறது. ஆனாலும் இம்முதலாளிகள் தமக்குள் கூட்டணி கட்டிக் கொண்டு விலையேற்றம் செய்கின்றனர். கடந்த பத்தாண்டுகளில் சிமெண்ட் முதலாளிகளுக்கு 400 மடங்கு இலாபம் கிடைத்துள்ளது; ஒவ்வொரு ஆண்டும் 15% உற்பத்தி அதிகரிக்கிறது. ஆனாலும் சிமெண்ட் விலை அதிகரித்துக் கொண்டே போகிறது.

அரசுத்துறை சிமெண்ட் ஆலைகள் அனைத்தும் ஏறத்தாழ தனியார்மயமாக்கப்பட்டு விட்டதால், தற்போது சிமெண்ட் உற்பத்தி மற்றும் சந்தை முழுவதையும் உள்நாட்டு-வெளிநாட்டு முதலாளிகளே கட்டுப்படுத்துகின்றனர். இதன் காரணமாக அவர்கள் வைத்தது தான் விலை என்றாகிவிட்டது. விலைக் கட்டுப்பாடு விதிக்கவோ, கொள்ளையடிக்கும் இம்முதலாளிகளைக் கைது செய்து தண்டிக்கவோ வக்கற்ற மத்திய-மாநில அரசுகள், விலையேற்றத்தைக் கட்டுப்படுத்த பாகிஸ்தானிலிருந்து சிமெண்ட் இறக்குமதி செய்யக் கிளம்பியுள்ளன. தனியார்மயத்தை ஆதரித்துக் கொண்டே, சிமெண்ட் விலையேற்றத்துக்கு எதிராகச் சவடால் அடித்து கண்டனப் போராட்டங்களை பா.ம.க.வும் போலி கம்யூனிஸ்டுகளும் நடத்தி மக்களை ஏய்த்து வருகின்றன.

இந்த உண்மைகளை விளக்கியும், கொள்ளையடிக்கும் தனியார்-அந்நிய சிமெண்ட் முதலாளிகளைக் கைது செய்து சொத்துக்களைப் பறிமுதல் செய்யக் கோரியும், நியாய விலையில் சிமெண்ட் கம்பிகளை அரசே விநியோகிக்க வலியுறுத்தியும், ஓட்டுக் கட்சிகளின் பித்தலாட்டத்தைத் திரைகிழித்தும், தருமபுரி-கிருஷ்ணகிரி மாவட்டப் புதிய ஜனநாயகக் கட்டடத் தொழிலாளர் சங்கமும், புதிய ஜனநாயகத் தொழிலாளர் முன்னணியும் இணைந்து 9.9.07 அன்று ஒசூர்-ராம் நகரில் மாபெரும் ஆர்ப்பாட்டத்தை நடத்தின. தோழர் சங்கர் தலைமையில் நடந்த இந்த ஆர்ப்பாட்டத்தில் கண்டன உரையாற்றிய முன்னணியாளர்கள், தனியார்மயம்-தாராளமயத்துக்கு எதிராக அனைத்துப் பிரிவு மக்களும் அணிதிரண்டு போராட அறைகூவினர். பெருந்திரளாக கட்டடத் தொழிலாளர்கள் பங்கேற்ற இந்த ஆர்ப்பாட்டம் உழைக்கும் மக்களிடம் புதிய பார்வையையும் நம்பிக்கையையும் விதைத்துள்ளது.



**- பு.ஜ. செய்தியாளர்கள்.**

Owned and Published by R. SHANMUGA RAJ, from Shop No. 110, IInd Floor, 63, N.S.K. Salai, Kodambakkam, Chennai-600 024 and Printed by him at EZHIL PRINTS, Shop No. 110, IInd Floor, 63, N.S.K. Salai, Kodambakkam, Chennai-600 024. Editor: R. SHANMUGA RAJ.

படிப்பகம்

www.padippakam.com

# ரிலையன்ஸ் எதிர்ப்பு: ஓட்டுக் கட்சிகளின் முகத்திரை கிழிந்தது!

**மே.** வங்கத்தில் ஏகபோக "பெண்டலூன்" சூப்பர் மார்க்கெட்டுகளைத் தொடங்கி வைத்து 'புரட்சி' செய்து வரும் சி.பி.எம். ஆட்சியாளர்கள், இப்போது "ரிலையன்ஸ் பிரஷ்" காய்கறி அங்காடிகள் மற்றும் ரிலையன்ஸ் பேரங்காடிகளைத் தொடங்க கதவை அகலத் திறந்து விட்டுள்ளனர். கொல்கத்தா நகரின் 76 ஆண்டுகாலத் தொன்மை வாய்ந்த "பார்க் சர்க்கஸ்" காய்கறி அங்காடியை ரிலையன்சுக்கு 99 ஆண்டுகால குத்தகைக்குக் கையளித்துள்ளனர். இதுதவிர "பஜார்கள்" என்று குறிப்பிடப்படும் நகரின் பல்வேறு அங்காடிகளையும் ரிலையன்சுக்குத் தாரை வார்த்துள்ளனர்.

இதன் தொடர்ச்சியாக, கடந்த ஆகஸ்டு மாதத்தில் கொல்கத்தா நகரின் கிரிஷ்பார்க் போலீசு நிலையம் அருகே நந்தா முல்லக் தெருவில், ரிலையன்ஸ் பிரஷ் காய்கறி அங்காடி தொடங்க ஏற்பாடுகள் வேகமாக நடந்து வந்தன. தங்கள் வாழ்வைப் பறிக்க வந்துள்ள ரிலையன்சுக்கு எதிராக குமுறி எழுந்த சில்லறை வியாபாரிகள், பார்வர்டு பிளாக் கட்சியின் தலைமையில் திரண்டு கடந்த ஆகஸ்டு 18-ஆம் நாளன்று முழக்கமிட்டபடியே ஊர்வலமாகச் சென்று அந்த ரிலையன்ஸ் கடையை அடித்து நொறுக்கினர். தகவலறிந்து அங்கு விரைந்து வந்த 'இடதுசாரி' போலீசு, சில்லறை வியாபாரிகள் மீது தடியடி நடத்தி விரட்டியடித்து, ரிலையன்ஸ் கடையைப் பாதுகாக்க போலீசு பட்டாளத்தை குவித்துள்ளது.

சில்லறை வியாபாரிகளின் திடீர் போராட்டத்தைக் கண்டு பீதியடைந்த ரிலையன்ஸ் நிறுவனம், தற்காலிகமாக, காய்கறி அங்காடிகளைத் திறப்பதை நிறுத்தி வைத்துள்ளது. "ஐயோ, அப்படிச் செய்யாதீர்கள்! ரிலையன்ஸ் கடைகளுக்கு இம்மாநில அரசு முழுப்பாதுகாப்பு அளிக்கும்" என்று உறுதியளித்து அழைக்கிறார், மே.வங்க அரசுச் செயலரான அமித்கிரண் தேப். இடது முன்னணியில் அங்கம் வகிக்கும் பார்வர்டு பிளாக், புரட்சி சோசலிஸ்டு கட்சி, வலது கம்யூனிஸ்ட் கட்சி ஆகியன ரிலையன்சுக்கு எதிராக சில்லறை வியாபாரிகளை அணிதிரட்டுவதைக் கண்டு ஆத்திரமடைந்த சி.பி.எம். கட்சியின் மூத்த தலைவரான பினாய் கோனார், "இடது முன்னணியிலுள்ள கட்சிகளே இப்படிச் செய்வது விபரீத விளைவுகளை ஏற்படுத்தும்; பெண்டலூன் கடைகள் திறக்கப்பட்டபோது எதிர்ப்பு காட்டாத இக்கட்சிகள், ரிலையன்சை மட்டும் இப்போது எதிர்ப்பது சந்தர்ப்பவாதமாகும்" என்று பொரிந்து தள்ளுகிறார்.

ரிலையன்ஸ், பெண்டலூன் முதலான பேரங்காடிகளுக்குத் தாராள அனுமதி அளிப்பது மட்டுமல்ல; 1972-ஆம் ஆண்டின் சந்தை முறைப்படுத்தல் சட்டத்தைத் திருத்தி தாராளமயமாக்கலுக்கு விசுவாச சேவை செய்யவும் மே.வங்க போலி கம்யூனிச அரசு தீர்மானித்துள்ளது. இச்சட்டத் திருத்தம், உள்நாட்டு-வெளிநாட்டு பெருந்தொழில் நிறுவனங்கள் சில்லறை வணிகத்திலும், விவசாய நேரடிக் கொள்முதலிலும் ஈடுபட தாராள அனுமதி அளிப்பதோடு, ஒப்பந்த விவசாயத்துக்கு ஏராளமான சலுகைகளையும் அளித்துள்ளது; ஒப்பந்த விவசாயம் என்பது மிகப் பெரிய மோசடி என்று அம்பலப்பட்டுப் போயுள்ளதால், இதனைக் "கூட்டுப் பங்கு விவசாயம்" என்று பெயரை மாற்றி பித்தலாட்டம் செய்கிறது. இச்சட்டத் திருத்தம் மே.வங்க சட்டப் பேரவையின் ஒப்புதலுக்காகக் காத்திருக்கிறது.

விவசாயத்தில் தாராளமயமாக்கலைத் திணித்து, விவசாய சந்தை முறைப்படுத்தல் சட்டத்தைத் திருத்த மே.வங்க அரசு முயற்சித்துவரும் வேளையில், ஏற்கெனவே இதனைச் செயல்படுத்தி வரும் 11 மாநிலங்களின் வரிசையில் 12-வது மாநிலமாக உ.பி.யை இணைத்து, புதிய சந்தை சீர்திருத்தக் கொள்கையை கடந்த ஆகஸ்ட் 3-ஆம் தேதியன்று அறிவித்தார், அம்மாநில முதல்வரான மாயாவதி. தமது வாழ்வைச் சூறையாட வந்துள்ள இக்கேடுகெட்ட கொள்கையை எதிர்த்து உ.பி. விவசாயிகளும் சிறுவணிகர்களும் ஆங்காங்கே தன்னெழுச்சியாகப் போராடத் தொடங்கினர். இப்போராட்டத்தின் போதுதான் லக்னோ மற்றும் ராஞ்சி நகரங்களில் ரிலையன்ஸ் ஃபிரஷ் கடைகள் குறிவைத்துத் தாக்கப்பட்டன.

இத்தருணத்தில் அணுசக்தி ஒப்பந்தம் காரணமாக, மத்தியிலுள்ள காங்கிரசு கூட்டணி அரசு நெருக்கடிக்குள்ளாகி, ஆட்சி கவிழ்ந்து மீண்டும் நாடாளுமன்றத் தேர்தல் வரும் என்ற ஊகமும் வதந்தியும் நிலவியது. அப்படி ஒருவேளை திடீரெனத் தேர்தல் வந்துவிட்டால், ஓட்டுப் பொறுக்குவதற்குத் தடையாக இக்கொள்கை அமைந்துவிடும் என்பதாலேயே திடீர் "பல்டி"யடித்து இத்தாராளமயக் கொள்கையைச் செயல்படுத்தப் போவதில்லை என்று அறிவித்து, ரிலையன்ஸ் ஃபிரஷ் கடைகளைத் தற்காலிகமாக மூடுவதற்கு மாயாவதி உத்தரவிட்டுள்ளார்; சாதகமான சூழலை எதிர்பார்த்து காத்திருக்கிறார்.

உ.பி. தலைநகர் லக்னோவில் ரிலையன்ஸ் ஃப்ரஷ்-க்கு எதிராக சிறு வியாபாரிகளின் போர்க்கோலம்.



இந்நிலையில், போலி கம்யூனிஸ்டுகள் முதல் தலித்திய தலைவி மாயாவதி வரையிலான அனைத்து ஓட்டுக் கட்சி துரோகிகளையும் அம்பலப்படுத்தி முறியடிக்காமல், விவசாயிகளும் சிறுவணிகர்களும் தமது போராட்டத்தை முன்னெடுத்துச் செல்ல முடியாது; தாராளமயமாக்கலை வீழ்த்தவும் முடியாது.

● குமார்

www.padippakam.com

PUTHIYA JANANAYAGAM (Tamil Monthly) PUBLISHED ON 1st OF EVERY MONTH
REGISTERED WITH THE REGISTRAR OF NEWS PAPERS FOR INDIA UNDER No: 42648/85
Regd. No: TN/CC(S)Dn/190/06-08 Licenced to Post without pre-payment WPP No: TN/PMG/CCR/WPP-562/06-08

# இது பயங்கரவாதமில்லையா?

ஒரிசாவின் ரயாகடா, கோராபுத், காலஹந்தி, கஜபதி ஆகிய நான்கு மாவட்டங்களில் மட்டும், கடந்த மூன்று மாதத்திற்குள், பழங்குடி இனத்தைச் சேர்ந்த 300 பேர் காலராவிற்குப் பலியாகியுள்ளனர். இந்த அகால மரணத்திற்கு யாரைப் பொறுப்பாக்குவது? காலரா கிருமியையா?

இந்த நான்கு மாவட்டங்களில் வசிக்கும் பழங்குடியினருக்குச் சுத்தமான குடிநீரும், அடிப்படையான மருத்துவ வசதிகளும் அளிக்கப்பட்டிருந்தால், இந்தச் சாவுகளைத் தடுத்து நிறுத்தியிருக்க முடியும். ஆனால், பழங்குடியின மக்கள் வசிக்கும் பகுதிகளில் உள்ள அரசின் ஆரம்ப சுகாதார நிலையங்களில் மின்சார வசதியும் கிடையாது. காலரா சாவுகள் விழும் வரை, அந்நிலையங்களில் எந்தவொரு மருத்துவரும் பணிபுரிந்ததாகத் தெரியவில்லை என்கிறது ''தி ஹிந்து'' (செப்.1, பக்:13), நாளேடு. இந்த அடிப்படை வசதிகளைக் கூடச் செய்து தராமல் அலட்சியமாக ஆட்சி நடத்திவரும் ஓட்டுக் கட்சிகள்தான் காலரா கிருமிகளைவிட, அபாயகரமானவர்கள்.

இந்திய ஆளும் கும்பலுக்கு, ஒரிசா பழங்குடி இன மக்களின் நல்வாழ்க்கையைவிட, அவர்கள் வசிக்கும் பகுதிகளில் கொட்டிக் கிடக்கும் தாதுப் பொருட்களின் மீதுதான் அதிக அக்கறை. அவர்கள் காலடியில் கிடக்கும் இரும்புத் தாதுவை போஸ்கோ நிறுவனத்திற்குத் தூக்கிக் கொடுப்பதற்காக கலிங்கா நகரில் பழங்குடி இன மக்களின் மீது நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூடு மட்டும் மனித உரிமை மீறல் அல்ல. ஒவ்வொரு ஆண்டும் ஒரிசாவின் பழங்குடி இன மக்கள் பட்டினிக்கும் தொற்று நோய்க்கும் பலியாவதைத் தடுத்து நிறுத்தாமல், ஆளும் கும்பல் முதலைக் கண்ணீர் வடிப்பதும் அரசு பயங்கரவாதம்தான்!



குச்சேய்பதார் என்ற கிராமத்தில் காட்டு ஓடைநீரைக் குடிநீராகப் பயன்படுத்த வேண்டிய அவலம்.

ஆரம்ப சுகாதார நிலையங்களில் போதிய மருத்துவர்கள் - தாதிகள் இல்லாததால், நோயாளிகளைக் கவனிக்கும் பொறுப்பைத் தன்னார்வத்துடன் எடுத்துக் கொண்டுள்ள பாகீரதி பெஹரா. (இடது).

